# Tamil Nadu Legislative Assembly Debates Official Report

Vol-5 NO-1

25.3.1989

D
V2:11,31'N89
N89.5-1
161303

மறு வெளியீடு 31-3-1992 Reissued 31-3-1992

11

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

## (மறு பதிப்பு - இணைப்புடன்)

(26-3-1992 ஆம் நாள் பேரவைத் தலைவர் தீர்ப்பின்படி)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

## (REVISED EDITION WITH APPENDIX)

(As per ruling of the Hon. Speaker on 26-3-1992)

சனிக்கிழமை, மார்ச் 25, 1989-தொகுதி 5-எண். 1
Saturday, the 25th March 1989-Volume 5-No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George, Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

## உள்ளடக்கம்

### 1989ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25ஆம் நாள்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| | தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும். | i—v |
| | Personnel of the Government of Tamil Nadu. | vii—xi |
| | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | xiii—xvi |
| | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி). | xvii—xxx |
| 1. | தகவல் கோரல்— | |
| | உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள். | 1—6 |
| 2. | *வரவு-செலவுத் திட்டம், 1989-90—அளித்தல். | 6—66 |
| 3. | முன்பண மானியக் கோரிக்கைகள், 1989-90—அளித்தல். | 67—70 |
| 4. | தீர்மானம்— | |
| | *பேரவைப் பணியினின்றும் சில உறுப்பினர்கள் தற்காலிக நீக்கம் செய்யப் பெறுதல். | 70—72 |
| 5. | பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள். | 72 |


---

*26-3-1992ஆம் நாளன்று பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்போடு (இணைப்புகள் 1 மற்றும் 2) இணைத்துப் படிக்க வேண்டும்.

53-476—(i)

20 ஏப்

;

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.



### ஆளுநர்— திரு. பி. சி. அலெக்சாண்டர்.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட) மற்றும் ஆயத் துறை.

2. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள்பட), ஆட்சி மொழி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வியல், தமிழ்ப் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் இயல்.

161505

| | | |
|---|---|---|
| 3. | சட்ட அமைச்சர் .. | மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைபற்றி சட்டம் இயற்றல் உட்பட) மற்றும் வக்ஃபீப். |
| 4. | வருவாய்த் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம். |
| 5. | போக்குவரத்துத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : போக்குவரத்து, அரசுடைமையாக்கப் பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள். |
| 6. | அறநிலையத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அறநிலையத் துறை, வீட்டு வசதி, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள், சின்கோனா. |



| | | |
|---|---|---|
| 7. | வேளாண்மைத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கோ. சி. மணி : வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டிணைப்பு அமைப்புகள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி. |
| 8. | உணவு அமைச்சர் .. | மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் நுகர் பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளி விவரங்கள். |
| 9. | செய்தி—தொழிலாளர் நலத் துறை அமைச்சர், | மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : செய்தி மற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம். |

| | | |
|---|---|---|
| 10. | ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்; நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராமப்புற கடன் சம்பந்தப் பட்டவை. |
| 11. | பொதுப் பணித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. துரை முருகன் ; பொதுப் பணிகள் சிறு பாசனம் (சிறப்பு சிறு பாசனம் உள்பட), திட்டப் பணிகள். |
| 12. | சமூக நலம்—ஊரகத் தொழிற் துறை அமைச்சர். | மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : சமூக நலம் (குழந்தைகள், மகளிர் நலம் உள்பட), பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்பட), கதர் வாரியம், பூமி தானம் மற்றும் கிராம தானம். |



| | | |
|---|---|---|
| 13. | ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர். |
| 14. | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மக்கள் நல்வாழ்வு, மருந்துகள், நகர அமைப்பு, குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப் படுத்தல். |
| 15. | மின் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. என். நேரு : மின்சாரம் மற்றும் பால். |
| 16. | கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : கால்நடை பராமரிப்பு, மீனளம் மற்றும் மீனள வளர்ச்சிக் கழகம். |
| 17. | கைத்தறித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : கைத்தறி, நெசவாலைகள், நகர்ப்புற மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு. |
| | முதலமைச்சரின் பேரவைச் செயலர். | திரு. எல். கணேசன். |

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU—THIRU P.C. ALEXANDER.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | | |
|---|---|---|
| 1. Chief Minister | .. | THE HON. DR. M. KARUNANIDHI :<br><br>Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise. |
| 2. Minister for Education. | | THE HON. PROF. K. ANBAZHAGAN :<br><br>Education inlcuding Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps, Ex-Service men and Archaeology. |

3. Minister for Law. THE HON. THIRU S.J. SADIQ PASHA : Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Wakf.

4. Minister for Revenue. THE HON. THIRU NANJIL K. MANOHARAN : Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration and Stamp Act.

5. Minister for Transport. THE HON. THIRU M. KANNAPPAN : Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways.

6. Minister for Hindu Religious and Charitable Endowments. THE HON. THIRU K. P. KANDASAMY Hindu Religious and Charitable Endowments, Housing, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona.

7. Minister for Agriculture. THE HON. THIRU KO. SI. MANI : Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering and Service, Co-operative Societies at the Block, District and Apex Level including the Federation and Food Production.



8. Minister for Food. THE HON. THIRU ARCOT N. VEERASAMY :

Food, Price Control and Civil Supplies, Co-operation and Statistics.

9. Minister for Information and Labour. THE HON. THIRU PON. MUTHURAMALINGAM :

Information and Publicity, Film Technology, Cinematograph Act, Labour, Census, Employment and Training, Indian Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

10. Minister for Rural Development and Local Administration. THE HON. THIRU VEERAPANDI S. ARUMUGAM :

Municipal Administration, Rural Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness.

11. Minister for Public Works. THE HON. THIRU DURAI MURUGAN :

Public Works, Minor Irrigation including Special Minor Irrigation, Programme Works.

12. Minister for Social Welfare and Rural Industries.

THE HON. THIRUMATHI SUBBULAKSHMI JAGADISAN :

Social Welfare including Children and Women's Welfare, Beggars' Home, Orphanages, Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries including Village, Cottage and Small Industries, Khadi Board, Bhoodan and Gramadan.

13. Minister for Adi-Dravidar Welfare.

THE HON. DR. E. RAMAKRISHNAN :

Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

14. Minister for Public Health.

THE HON. DR. K. PONMUDI ALIAS DEIVASIGAMANI :

Public Health, Medicines, Town Planning, Water Board and Environmental Pollution Control.

15. Minister for Electricity.

THE HON. THIRU K. N. NEHRU :

Electricity and Milk.



16. Minister for Animal Husbandry.

THE HON. DR. K. CHANDRASEKARAN :

Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation.

17. Minister for Handlooms.

THE HON. THIRU S. THANGAVELU :

Handlooms, Textiles, Urban Development, Slum Clearance Board and Accommodation Control.

Parliamentary Secretary to the Chief Minister.

THIRU L. GANESAN

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பேரவைத் தலைவர்:

மாண்புமிகு டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன்.

## பேரவைத் துணைத் தலைவர்:

திரு. பி. துரைசாமி.

## * மாற்றுத் தலைவர்கள் பட்டியல்:

திரு. மு. இராமநாதன்.

திரு. என். கணபதி.

திரு. பெ. சீனிவாசன்

திரு. கே. ஏ. செங்கோட்டையன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திரு. சி. கோவிந்தராஜன்.

## செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி,

---

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13 ஆம் நாள் அன்று அறிவிக்கப்பட்டது.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்

(அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| பத்மநாப நம்பியார், திரு. பி.எம்.,பி.ஏ.,பி.ஜி.எல். | கூடுதல் செயலாளர். |
| சீனிவாசன், திரு. சா., பி.எஸ்ஸி. | முதுநிலைக் குழு அலுவலர். |
| சாமிநாதன், திரு. பொ.க. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சீதாராமன், திரு. வெ., பி.காம்.,பி.ஜி.எல். | துணைச் செயலாளர். |
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர். |
| ஜானகிராமன், திரு.செ.சு., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர். |
| சீனிவாசன், திரு. கு.அ., பி.ஏ. | குழு அலுவலர். |
| இராமச்சந்திரன், திரு. ஆர்.கே., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| கனகசபாபதி, திரு. பெ.ச., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| கேசவராம், திரு.சு., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா.செ. பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| முனிர் உன்னிசா, திருமதி பி.எஸ்ஸி. | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி.சி., பி.ஏ. | சார்புச் செயலாளர். |

| | |
|---|---|
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| ஜான், திருவ. சா., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. டி., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| ஜோசப், திரு. மா.கு., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| இராசமாணிக்கம். திரு. பெ., பி.ஏ., பி.ஏல். | தலைமை நிருபர் (பேரவை). |
| சுவாமிநாதன், திரு. ச., எம். ஏ. | தலைமை நிருபர் (குழுக்கள்) |



## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும். உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின்பெயர் (2) |
|---|---|
| அ | |
| 1. அங்கமுத்து, திரு. கே. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 2. அசேன், திரு. ஜெ. | இராணிப்பேட்டை |
| 3. அண்ணாதுரை, திரு. கே. | பட்டுக்கோட்டை |
| 4. அண்ணாதுரை, டாக்டர். கே. | வரகூர் (செ.வ.) |
| 5. அண்ணாநம்பி, திரு. ஆர். | அவிநாசி (செ.வ.) |
| 6. அண்ணாமலை, திரு. எம். | அரூர் (செ.வ.) |
| 7. அதியமான், திரு. ஆ. | சேடப்பட்டி |
| 8. அப்துல் சமத், திரு. பா. | வாணியம்பாடி |
| 9. அப்துல் லத்தீப், திரு. எம். | சேப்பாக்கம் |
| 10. அர்ஜுனன், திரு. கே. | தாரமங்கலம் |
| 11. அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 12. அழகுவேலு, திரு. ச. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. அறிவழகன், திரு. ஆ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்புனர்களின் பெயரும், (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| அ—தொடர்ச்சி. | |
| 14. அன்பழகன், பேராசிரியர் க. | அண்ணா நகர் |
| 15. அன்பழகன், திரு. வ. | செய்யாறு |
| 16. அன்பில் பொய்யாமொழி, திரு. | திருச்சிராப்பள்ளி-2. |
| ஆ | |
| 17. ஆசையன், திரு. பெ. | ஆண்டிப்பட்டி |
| 18. ஆண்டி அம்பலம் திரு. மெ. | நத்தம் |
| 19. ஆறுமுகம், திரு. த. | அரியலூர். |
| 20. ஆறுமுகம், திரு. வீரபாண்டி, சோ. | சேலம்-2 |
| இ | |
| 21. இரகுமான்கான், திரு. அ. | பூங்கா நகர் |
| 22. இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 23. இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ. | மேலூர் |
| 24. இராசன் , திரு. வி.பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 25. இராசு, திரு. வி. கே. | அரக்கோணம் (செ.வ.) |
| 26. இராசு, திரு. வெ. | குளத்தூர் (செ.வ.) |
| 27. இராசேந்திரன், திரு. அ | போளூர். |
| 28. இராதா, திரு. எஸ். ஆர். | மதுரை கிழக்கு |
| 29. இராதாகிருஷ்ணன், திரு. டி. | சோழவந்தான் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| இ—தொடர்ச்சி | |
| 30. இராமகிருஷ்ணன், டாக்டர் எ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 31. இராமகிருஷ்ணன், திரு. நா. | கம்பம் |
| 32. இராமச்சந்திரன், திரு. எம். | திருவோணம் |
| 33. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | விளாத்திகுளம் |
| 34. இராமச்சந்திரன், திரு. ந. | செஞ்சி |
| 35. இராமசாமி, திரு. ஏ. எம். | ஆத்தூர். |
| 36. இராமசாமி, திரு. கே. வி. | கரூர் |
| 37. இராமசாமி, திரு. வி. | திருச்செங்கோடு |
| 38. இராமசாமி, திரு. கே. ஆர். | திருவாடானை |
| 39. இராமநாதன், திரு. மு. | கோவை - மேற்கு |
| 40. இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 41. இராஜேந்திரன், திரு. கே. ஆர். | பர்கூர் |
| 42. இராஜேந்திரன், திரு. பி.வி. | வேதாரணியம் |
| 43. இளம்வழுதி, திரு. | எழும்பூர் (செ.வ.) |
| ஈ | |
| 44. ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர். (செ.வ.) |
| உ | |
| 45. உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 46. உதயசூரியன், திரு. தா. | சின்னசேலம் |
| 47. உபயதுல்லா, திரு. எஸ். என். எம். | தஞ்சாவூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| **எ** | |
| 48. எட்டியப்பன், திரு. ஆர். | பெரணமல்லூர் |
| **ஏ** | |
| 49. ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | பள்ளிப்பட்டு |
| 50. கண்ணப்பன், திரு. மு. | பல்லடம் |
| 51. கண்ணன், திரு. எஸ். பி. | அணைக்கட்டு |
| 52. கணபதி, திரு. என். | மயிலாப்பூர் |
| 53. கணேசமூர்த்தி, திரு. என். | குறிஞ்சிப்பாடி |
| 54. கணேசமூர்த்தி, திரு. ஏ. | மொடக்குறிச்சி |
| 55. கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு |
| 56. கணேசன், திரு. க. சொ. | ஜெயங்கொண்டம் |
| 57. கணேசன், திரு. சா. | தியாகராயநகர் |
| 58. கணேசன், திரு. வே. | மங்களூர் (செ.வ.) |
| 59. கந்தசாமி, திரு. கே. | கிணத்துக்கடவு |
| 60. கந்தசாமி, திரு. கே. பி. | திருச்செந்தூர் |
| 61. கரீம், திரு. எம். கே. | கூடலூர் |
| 62. கருணாநிதி, டாக்டர் மு. | துறைமுகம் |
| 63. கருப்பசாமி, திரு. எஸ்.எஸ். | சாத்தூர் |
| 64. கருப்பையா மூப்பனார், திரு. ஜி. | பாபநாசம் |
| 65. கன்னையன், திரு. க. | தொட்டியம் |
| 66. கஜபதி, திரு. டி. ஆர். | ஆற்காடு |
| 67. காஞ்சனா, டாக்டர் க. | கிருஷ்ணகிரி |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ஏ—தொடர்ச்சி.** | |
| 68. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. | முதுகுளத்தூர் |
| 69. காளியப்பன், திரு. பி. | ஒட்டன்சத்திரம் |
| 70. கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் து. | சிதம்பரம் |
| 71. கிருஷ்ணன், திரு. சி. | ஓமலூர் |
| 72. குணசேகரன், திரு. எஸ். | தலைவாசல் (செ.வ.) |
| 73. குமரி அனந்தன், திரு. | சாத்தான்குளம் |
| 74. குருநாதன், திரு. சு. | பாளையங்கோட்டை |
| 75. குருமூர்த்தி, திரு. ஜி. ஜி. | பவானி |
| 76. கோதண்டம், திரு. ஏ. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 77. கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | மேட்டுப்பாளையம் |
| 78. கோவிந்தசாமி, திரு. சி. | திருப்பூர் |
| 79. கோவிந்தசாமி, திரு. வி. சி. | காவேரிப்பட்டினம் |
| 80. கோவிந்தராஜன், திரு. சி. | நெல்லிக்குப்பம் |
| 81. கோவிந்தன், திரு. வெ. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| **ச** | |
| 82. சண்முகம், திரு. சி. | ஆலந்தூர் |
| 83. சந்திரசேகர், திரு. வி. பி. | பொள்ளாச்சி |
| 84. சந்திரசேகரன், டாக்டர் க. | ஆலங்குடி |
| 85. சம்சுதீன் என்கிற கதிரவன், திரு. | கடையநல்லூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| **ச—தொடர்ச்சி,** | |
| 86. சம்பத், திரு. ஏ. ஜி. | முகையூர் |
| 87. சற்குணம், திரு. எஸ். பி. | இராதாகிருஷ்ணன் நகர் |
| 88. சாத்தையா என்கிற தமிழ்க் குடிமகன், டாக்டர். மு. | இளையான்குடி |
| 89. சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே. | உடுமலைப்பேட்டை |
| 90. சாந்தகுமாரி, டாக்டர் த. | தாராபுரம் (செ.வ.) |
| 91. சாமிநாதன், திரு. ஆர். | திருமங்கலம் |
| 92. சிங்காரம், திரு. ஆர். | பேராவூரணி |
| 93. சிவசுப்பிரமணியன், திரு. சா. | ஆண்டிமடம் |
| 94. சிவலிங்கம், திரு. எஸ். ஆர். | பனைமரத்துப்பட்டி |
| 95. சிவலோகம், திரு. எஸ். | புவனகிரி |
| 96. சின்னசாமி, திரு. கே. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 97. சின்னசாமி, திரு. ரா. | தர்மபுரி |
| 98. சின்னசாமி, திரு. வி. கே. | பவானிசாகர் |
| 99. சீரங்கன், திரு. எம். | மேட்டூர் |
| 100. சீனிவாசன், திரு. பெ. | சிவகாசி |
| 101. சுந்தர், திரு. கே. | உத்திரமேரூர் |
| 102. சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு |
| 103. சுந்தரம், திரு. க. | பொன்னேரி (செ.வ.) |
| 104. சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 105. சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 106. சுந்தரராஜ், டாக்டர் எஸ். | பரமக்குடி (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| **ச—தொடர்ச்சி.** | |
| 107. சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே. | கன்னியாகுமரி |
| 108. சுப்பிரமணியம், திரு. தூ. க. | சத்தியமங்கலம் |
| 109. சுப்பிரமணியன், திரு. அ. லெ. | திருநெல்வேலி |
| 110. சுப்பிரமணியன், திரு. வே. நா. | பெருந்துறை |
| 111. சுப்பு, திரு. ஏ. | ராசிபுரம் |
| 112. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி. | ஈரோடு |
| 113. சுப்பையா, திரு. வ. | திருமயம் |
| 114. செங்குட்டுவன், திரு. ஏ. | மயிலாடுதுறை |
| 115. செங்கைசிவம், திரு. | பெரம்பூர் (செ.வ.) |
| 116. செங்கோட்டையன், திரு. கே. ஏ. | கோபிச்செட்டி பாளையம் |
| 117. சேட்டு, திரு. எம். | செங்கம் (செ.வ.) |
| 118. சொக்கர், திரு. ரா. | விருதுநகர் |
| 119. சௌந்திரபாண்டியன், திரு. ந. | சமயநல்லூர் (செ.வ.) |
| **ட** | |
| 120. டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| **த** | |
| 121. தங்கபாண்டியன், திரு. வே. | அருப்புக்கோட்டை |
| 122. தங்கம், திரு. அ. | ஸ்ரீவில்லிபுத்தூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **த—தொடர்ச்சி.** | |
| 123. தங்கராஜன், திரு. எஸ். ஏ. | திண்டுக்கல் |
| 124. தங்கராஜு, திரு. ஏ. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 125. தங்கவேல், திரு. எம். | முசிறி |
| 126. தங்கவேல், திரு. என். | குன்னூர் (செ.வ.) |
| 127. தங்கவேலு, திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 128. தம்புசாமி, திரு. வி. | திருவாரூர் (செ.வ.) |
| 129. தமிழ்மணி, திரு. வீ. | செங்கல்பட்டு |
| 130. தயாளன், திரு. ஏ. சி. | ஆரணி |
| 131. தனபாலன், திரு கே.ஆர்.ஜி. | சேலம்-1 |
| 132. தனராஜ், திரு. வி. | வந்தவாசி (செ.வ.) |
| 133. திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 134. திருமூர்த்தி, டாக்டர், து. | திருப்போரூர் (செ.வ.) |
| 135. திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 136. துரை சந்திர சேகரன், | திருவையாறு |
| 137. துரைசாமி, திரு. பி. | நாமக்கல் (செ.வ.) |
| 138. துரைபாண்டி, திரு. பெ. | மானாமதுரை (செ.வ.) |
| 139. துரைமுருகன், திரு. | காட்பாடி |
| 140. துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 141. தென்னரசு, திரு. எஸ்.எஸ். | திருப்பத்தூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **த—தொடர்ச்சி.** | |
| 142. தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 143. நஞ்சப்பன், திரு. ந. | பெண்ணாகரம் |
| 144. நட்ராசன், திரு. ஆ. | பேரூர் |
| 145. நடராசன், திரு. பொ. | திருத்தணி |
| 146. நடேச உடையார், திரு. ஏகால் மு. | ரிஷிவந்தியம் |
| 147. நடேசன், திரு. ஆர். | திருவட்டாறு |
| 148. நந்தகோபாலகிருட்டிணன், டாக்டர், கோ. | பண்ருட்டி |
| 149. நாராயணன், திரு. ராம. | காரைக்குடி. |
| 150. நூர்முகமது, திரு. செ. | பத்மநாபபுரம் |
| 151. நேரு, திரு. கே. என். | லால்குடி |
| **ப** | |
| 152. பஞ்சாட்சரம், திரு. ஆர். | மேல்மலையனூர் |
| 153. பழனிச்சாமி, திரு. டி. கே. | திருவொற்றியூர் |
| 154. பழனிச்சாமி, திரு. ஜி. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 155. பழனிச்சாமி, திரு. க. | எடப்பாடி |
| 156. பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 157. பன்னீர்செல்வம், திரு. மா. | சீர்காழி (செ.வ.) |
| 158. பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 159. பாப்பா உமாநாத், திருமதி. | திருவரம்பூர் |
| 160. பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| த்—தொடர்ச்சி. | |
| 161. பால்ராஜ், திரு எஸ். | மதுரை-மத்திய |
| 162. பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். | பொங்கலூர் |
| 163. பாலசுப்பிரமணியன், திரு. அ. வே. | திருநாவலூர் |
| 164. பாலையா, திரு. ஆ. | கொளச்சல் |
| 165. பிச்சாண்டி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 166. பிச்சைமுத்து, திரு. ரெ. | பெரம்பலூர் (செ.வ.) |
| 167. பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா. | தென்காசி |
| 168. புகழேந்தி, திரு. இ. | கடலூர் |
| 169. பூவராகன், திரு. கோ. | விருத்தாசலம் |
| 170. பெரியசாமி, திரு. என். | தூத்துக்குடி |
| 171. பெரியசாமி, திரு. ஐ. | ஆத்தூர் |
| 172. பெரியசாமி, திரு. வே. | அந்தியூர் (செ.வ.) |
| 173. பெரியண்ணன், திரு. அ. | புதுக்கோட்டை |
| 174. பெருமாள், திரு. செ. | ஏற்காடு (ஆ.வா.) |
| 175. பொன்முடி, திரு. டி. | தண்டராம்பட்டு |
| 176. பொன்முடி என்கிற தெய்வ சிகாமணி, டாக்டர், க. | விழுப்புரம் |
| 177. பொன். முத்துராமலிங்கம் | மதுரை மேற்கு |
| 178. பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 179. பொன்னுசாமி, பேராசிரியர் க. | மருங்காபுரி |
| 180. பொன்னுபிள்ளை, திரு. ஜி. | தேனி |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| த—தொடர்ச்சி. | |
| 181. மகேந்திரன், திரு. ஆர். | நாட்ராம்பள்ளி |
| 182. மணி, திரு. ஆச்சியூர், எம். | நாங்குனேரி |
| 183. மணி, திரு. கே. ஏ. | கபிலர்மலை |
| 184. மணி, திரு. கோ. சி. | கும்பகோணம் |
| 185. மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ.வ.) |
| 186. மதிவாணன் திரு. இரா. | ராயபுரம் |
| 187. மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1 |
| 188. மனோகரன் திரு. நாஞ்சில் கி. | திருவல்லிக்கேணி |
| 189. மனோகரன், திரு. பா. | சிவகங்கை |
| 190. மாசிலாமணி, டாக்டர் சி. ரா. | திண்டிவனம் |
| 191. மாசிலாமணி, திரு. தி. ரா. | பூந்தமல்லி |
| 192. மாதப்பன், திரு. கொ. | பாலக்கோடு |
| 193. மாரப்பன், திரு பி. | காங்கேயம் |
| 194. மாரிமுத்து, திரு. அ. | வாணூர் (செ.வ.) |
| 195. முகமது சித்திக், திரு. எம். | பூம்புகார் |
| 196. முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர் |
| 197. முத்தையன்' திரு. எம். | சங்கராபுரம் |
| 198. முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 199. முருகேசன், திரு. பொ. | காஞ்சிபுரம் |
| 200. முல்லைவேந்தன், திரு. வ. | மொரப்பூர் |
| 201. முனிரத்தினம், திரு. ஆ.மு. | சோளிங்கர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **த—தொடர்ச்சி.** | |
| 202. முனிரத்தினம், திரு. எஸ். ஆர். | திருவள்ளூர் |
| 203. மூக்கன், திரு. ஆர். | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 204. மூக்கையா, திரு. எல். | பெரியகுளம் |
| 205. மோகன், திரு. இரா. | சிங்காநல்லூர் |
| 206. மோசஸ், திரு. எம். | நாகர்கோவில் |
| **ய** | |
| 207. யசோதா செல்லப்பா, திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| **ர** | |
| 208. ரமணி, திரு. கே. | கோவை—கிழக்கு |
| 209. ரமணி நல்லதம்பி, திருமதி | ராதாபுரம் |
| 210. ரவி அருணன், திரு. | அம்பாசமுத்திரம் |
| 211. ராமச்சந்திர ரெட்டி, திரு. ந. | ஓசூர் |
| 212. ராமச்சந்திரன், திரு. கே. | மன்னார்குடி |
| 213. ராமச்சந்திரன், திரு. சி. | திருப்பரங்குன்றம் |
| 214. ராமசாமி திரு. மொஞ்சனூர், ப. | அரவக்குறிச்சி |
| 215. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். | ஆலங்குளம் |
| 216. ராஜு, திரு. எச். எம். | உதகமண்டலம் |
| 217. ராஜேந்திரன், திரு எம். எஸ். கே. | இராமநாதபுரம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ல** | |
| 218. லட்சுமி, திருமதி பி. | வால்பாறை (செ.வ.) |
| **வ** | |
| 219. வரதராசன், திரு. உ. ரா. | வில்லிவாக்கம் |
| 220. வரதராஜன், திரு. ஆர். | சங்கரி (செ.வ.) |
| 221. வல்லரசு, திரு. பி. என். | உசிலம்பட்டி |
| 222. விஜயராகவன், திரு. பொன். | கிள்ளியூர் |
| 223. விஜயேந்திரையா, திரு. டி. சி. | தளி |
| 224. வீராசாமி, திரு. ஆற்காடு நா. | புரசைவாக்கம் |
| 225. வீரையன், திரு. கோ. | நாகப்பட்டினம் |
| 226 வெங்கடாசலம், திரு. பெ. | வீரபாண்டி |
| 227. வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய். | ஸ்ரீரங்கம் |
| 228. வெள்ளிங்கிரி, திரு. யூ. கே. | தொண்டாமுத்தூர் |
| 229. வேணு, திரு. கி. | கும்மிடிப்பூண்டி |
| 230. வைத்தியலிங்கம், திரு. மீ. அ. | தாம்பரம் |
| **ஸ** | |
| 231. ஸ்டாலின், திரு. மு. க. | ஆயிரம் விளக்கு |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
| --- | --- |
| (1) | (2) |
| ஜ | |
| 232. ஜெயலலிதா, செல்வி ஜெ. | போடிநாயக்கனூர் |
| ஹ | |
| 233. ஹமீது இப்ராகிம், திரு. அ. மு. | கடலாடி |
| ஸ்ரீ | |
| 234. ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். | சைதாப்பேட்டை |
| 235. ஆஸ்கார் சி, நிக்லி, திரு. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

தலைமை வழக்கறிஞர்.

---

* 22—3—1989ஆம் நாளன்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989, மார்ச் 25, சனிக்கிழமை

பங்குனி 12, விபவ—திருவள்ளுவர் ஆண்டு 2020

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 11-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை ''

பொருள் வரும் வழி எனப்படும் வருவாய் சிறிதாக இருந்தாலும், போகும் வழி எனப்படும் செலவு மிகாமல் இருந்தால் தீங்கு ஏதும் நிகழாது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. தகவல் கோரல்.

#### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் கொடுத்த கடிதத்தை போலீசார் எடுத்து, நடவடிக்கை எடுத்து, அத்துமீறிய நடவடிக்கையின் மூலம் பத்திரிகை களுக்கும், மற்ற சபாநாயகர் போன்றவர்களுக்கும்

எடுத்துக்கொடுத்த உரிமை மீறல் பிரச்சினை நடைபெற்றிருக்கிறது. அதை போலீஸ் இலாகா செய்திருக்கிறது என்றால், உள்துறை அமைச்சுப் பொறுப்பு ஏற்றிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு பொறுப்பு ஏற்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே, நகர ஆணையர் அதற்கு மேல் அதிகாரியாக இருந்துகொண்டிருக்கின்ற, உள்துறை அமைச்சராகவும் இருந்துகொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் ஆகியோர் மீது அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து உங்களிடம் நான் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதற்கு எனக்கு அனுமதி தர வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

**செல்வி ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தனிப்பட்ட உரிமையும், சட்டமன்ற உறுப்பினர் உரிமையும், எதிர்க் கட்சித் தலைவர் உரிமையும் மீறப் பட்டிருப்பதாக, காவல் துறையினர் அத்துமீறி செயல்பட்டிருப்பதாக, காவல் துறை இலாகாவிற்குப் பொறுப்பு ஏற்கும், பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு முதலமைச்சரின் தூண்டுதலின் பேரில் இந்த அதிகார துஷ்பிரயோகம் நடைபெற்றிருப்பதாக நான் மாண்புமிகு முதலமைச்சர் மீது ஓர் உரிமை மீறல் பிரச்சினையைத் தங்களிடம் கொடுத்திருக்கிறேன். தவறான முறையில், சட்டத்தை மீறி செயல்பட்ட போலீஸ் கமிஷனர் துரை அவர்கள் மீதும் ஓர் உரிமை மீறல் பிரச்சினையைத் தங்களிடம் கொடுத்திருக்கிறேன். ஜனநாயக உரிமையே பாதிக்கப்பட்டிருக்கும் காரணத்தால், இந்த அவையின் உரிமை பாதிக்கப் பட்டிருக்கிற காரணத்தால், அவையின் பிற



அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிப்பதற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் தங்களிடம் கொடுத்திருக்கிறேன். என்னுடைய தொலைபேசிகள் ஒட்டுக்கேட்கப்பட்டிருக்கின்றன. இதுவும் மாண்புமிகு முதலமைச்சரின் தூண்டுதலின் பேரிலேயே நடைபெற்றிருக்கிறது என்று அதில் குறிப்பிட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று பட்ஜெட்டை தாக்கல் செய்ய இருப்பதால், கிரிமினல் ஆக்ட் புரிந்த குற்றத்திற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவி விலக வேண்டும், இதற்குக் கூட்டுப் பொறுப்பு ஏற்று அவருடைய அமைச்சரவையும் பதவி விலக வேண்டுமென்று நாங்கள் கருதுவதால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கும், முதலில் உரிமை மீறல் பிரச்சினைகளுக்கும், உடனே விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு தாங்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, On a point of order. இந்த அவையில் 234 உறுப்பினர்கள் தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்கே நாங்கள் இருக்கின்றோம். தமிழ்நாட்டு மக்களுடைய உரிமைகளைப் பிரதிபலிக்கக் கூடிய அவைதான் இந்த அவை. தமிழ்நாட்டு மக்களுடைய இதயக் கண்ணாடிதான் இந்த அவை. உறுப்பினர், சட்டத்திற்கு மேலானவர் அல்ல. உறுப்பினரும் சாதாரணக் குடிமகன்போலதான் ஆவார் என்பதை நான் தமிழ்நாட்டு மக்களின் சார்பில், என்னுடைய சட்டக் கருத்துக்களை எடுத்துத் தெரிவிக்கின்றேன் (குறுக்கீடுகள்),

(1989 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் பெருமக்களுக்கு, ஒருவர் பேசுகிறபோது மற்றவர்கள் அருள்கூர்ந்து அமரவேண்டும். அவர் பேசட்டும் (குறுக்கீடுகள்).

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய உரிமை. (கூச்சல்-குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அருள்கூர்ந்து எல்லோருமே உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) அருள்கூர்ந்து. முதலில் பேரவைத் தலைவர் எழுந்து நின்றால், உறுப்பினர்கள் அனைவரும் உட்கார வேண்டும் என்கிற விதி உங்கள் அனைவருக்கும் தெரியும் என்று கருதுகிறேன் (குறுக்கீடுகள்) தாங்கள் அருள்கூர்ந்து அமர வேண்டும்.

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்ட விளக்கம் சொல்ல வேண்டாமா ? (கூச்சல்-குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் அருள்கூர்ந்து உட்காருங்கள்.

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Close Police Stations, Open Jails. (பலத்த கூச்சல்-குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அருள்கூர்ந்து அனைவரும் உட்காருங்கள். பேரவைத் தலைவர் எழுந்து நின்றால் அனைவரும் அமரவேண்டும். (கூச்சல்-குழப்பம்). அருள்கூர்ந்து அனைவரும் உட்காரவேண்டும். (குறுக்கீடுகள்) அருள்கூர்ந்து



1989 மார்ச் 25] [பேரவைத் தலைவர்]

அனைவரும் உட்காரலாம். (குறுக்கீடுகள்) தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள். பேரவைத் தலைவர் எழுந்து நின்றால் அனைவரும் உட்கார வேண்டும். (கூச்சல்-குழப்பம்) அருள்கூர்ந்து அனைவரும் உட்காருமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்போது நடந்த இந்த விவாதம் குறித்த அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டியிருக்கும். (கூச்சல்-குழப்பம்) உறுப்பினர்கள் உட்கார்ந்தால்தான் என்னுடைய குறிப்புரையைச் சொல்ல முடியும். (கூச்சல்-குழப்பம்) அனைவரும் உட்காருங்கள்.

மதிப்புமிகு உறுப்பினர் பெருமக்களே, எதிர்க் கட்சித் தலைவர் செல்வி ஜெயலலிதா அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய எதிர்கட்சித் துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்களும் தாங்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள், உரிமை மீறல் பிரச்சினைகள் மீது அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இவை குறித்து முழுமையாக ஆய்வுசெய்து, அவர்கள் கொடுத்துள்ள பிரச்சினைகளில் உரிமை மீறல் இருக்கிறதா என்று முடிவெடுக்கவேண்டிய பொறுப்பு பேரவைத் தலைவருக்குண்டு. " Prima facie " என்ற அளவுக்கு ஐயுறுவதற்கான கூறுகள் இதில் உள்ளனவா என்பதை அலசி ஆராய்ந்து, இதில் முடிவெடுக்க வேண்டிய பொறுப்பு பேரவைத் தலைவருக்கு இருப்பதென்பது ஒன்று. இரண்டாவது, இன்று இந்த வரவு-செலவுத் திட்டத்தை அவையில் வைப்பதென்பது ஆளுநர் அவர்களால் குறிக்கப்பட்ட நாளில் நடைபெறுகிற நிகழ்ச்சி. மேலும் இதில் வினா நேரம் இல்லை என்பதாலும், கடந்த

சட்டமன்றத்தினுடைய திர்ப்பிலேகூட இது போன்ற வரவு-செலவுத் திட்டம் படைக்கப்படுகின்றபோது ஒத்திவைப்புத் தீர்மானங்களோ, வேறு பிரச்சினைகளோ எடுத்துக் கொள்ளப்படக் கூடாது என்று முன்னைய சட்டப் பேரவைத் தலைவர் இதே அவையில் திர்ப்புச் சொல்லியிருக்கிறார் என்ற மேற்கோளின் அடிப்படையில் இப்போது உங்களுடைய உரிமைப் பிரச்சினை எதையும் நான் அனுமதிக்க வில்லை என்று கூறி, அனைவரும் அமருமாறு கேட்டுக்கொள்கிறேன். திங்கட்கிழமை நான் இது குறித்து உங்களுக்கு அவையில் தெரிவிப்பேன். (குறுக்கீடுகள்).

2. வரவு-செலவுத் திட்டம், 1989-90— அளித்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து 1989–90ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சரவர்களும் நிதிஅமைச்சரவர்களுமாகிய டாக்டர் கலைஞர் அவர்கள் படைப்பார்கள். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் குடிகொண்டிருக்கும் ........(கூச்சல்-குழப்பம்).

* (அ.இ.அ.தி.மு.க. ஜெயலலிதா பிரிவைச் சேர்ந்த உறுப்பினர்கள் முதலமைச்சரவர்கள் படித்துக் கொண்டிருந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையைப் பறிக்க முயன்றனர்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து நேரடியாகப் பறிக்க முற்பட்டால் (கூச்சல்-குழப்பம்) கடுமையான விளைவுகள் ஏற்படும்.

---

* 26-3-1992ஆம் நாளன்று பேரவைத்தலைவர் அளித்த தீர்ப்போடு (இணைப்புகள் 1 மற்றும் 2) இணைத்துப் படிக்கவேண்டும்.





* (அ.இ.அ.தி.மு.க. ஜெயலலிதா பிரிவைச் சேர்ந்த உறுப்பினர்கள் முதலமைச்சர் படித்துக் கொண்டிருந்த அறிக்கையைப் பிடுங்கி கிழித்துப் போட்டு வன்முறையில் இறங்கினர்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அருள்கூர்ந்து அனைவரும் இருக்கைக்குப் போக வேண்டும். காவலர்கள் உடனே உறுப்பினர்களை அவரவர்கள் இருக்கைகளை நோக்கி அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன், (பலத்த கூச்சல்-குழப்பம்).

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அடியுங்கள், அடியுங்கள். முதலமைச்சரை அடிக்க வருகிறீர்கள் அல்லவா, அடியுங்கள்.

(அவையில் பலத்த அமளி ஏற்பட்டது. புத்தகங்களும், தாள்களும் வீசிக்கொள்ளப்பெற்றன.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக் கூட்டம் இப்போது ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை மீண்டும் 11–30 மணிக்குக் கூடும்.

பின்னர் முற்பகல் 11-12 மணிக்கு பேரவை ஒத்திவைக்கப் பெற்றது.

(பேரவை மீண்டும் முற்பகல் 11–30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் கூடியது.)

2. வரவு-செலவுத் திட்டம், 1989–90— அளித்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு தமிழக முதல்வரும், நிதியமைச்சருமாகிய டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் வரவு-செலவுத் திட்ட அறிக்கையைப் படைப்பார்கள்.

---

* 26-3-1992ஆம் நாளன்று பேரவைத்தலைவர் அளித்த தீர்ப்போடு (இணைப்புகள் 1 மற்றும் 2) இணைத்துப் படிக்கவேண்டும்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்....

**திரு. அ. இரகுமான்கான் :** இந்த நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் எப்படி வரும், உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் (கூச்சல்-குழப்பம்) குடிகொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட அந்த அரசு, அவர் உறங்குகின்ற இடம் நோக்கித் தொழுது....(கூச்சல்-குழப்பம்)

**திரு. குமரி அனந்தன் :** அடிதடியை நாங்கள் கண்டிக்கிறோம்.

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** எங்கள் தலைவர் மேலே ** போட்டார்கள் ஐயா, சட்ட சபையா இது ?

**திரு. குமரி அனந்தன் :** ** எங்கள் உறுப்பினரை அடிக்கவே வந்தார்..........(கூச்சல்-குழப்பம்).

**திரு. பி.எச். பாண்டியன் :** ** எழுந்து வந்த போது நீங்கள் சும்மா உட்கார்ந்து இருந்தீர்கள். அதனால் அவர்கள் வந்தார்கள் (கூச்சல்-குழப்பம்).

* * * *

இங்கே உள்ளே உட்கார வைத்தது. எம்.ஜி.ஆர் என்றால் உட்கார வைத்திருக்கவே மாட்டார். ** இந்த சபைக்குள்ளே விடவே இல்லை... (கூச்சல்-குழப்பம்).

---

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்) (குறுக்கீடுகள்).**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** உட்காருங்கள், அவர்களுக்குள் ஒப்பந்தம் மறுபடி வந்தாகி விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எங்கள் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் குடிகொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த அரசு, அவர் உறங்குகின்ற இடம் நோக்கித் தொழுது—

தலையாகிய அறமேபுரி
சரிநீதி யுதவுவாய்
சமமேபொருள் ஜனநாயகம்
எனவேமுர சறைவாய் !
இலையே உண விலையே கதி
இலையே எனும் எளிமை
இனிமேலிலை எனவே முர
சறைவாய் முரசறைவாய் !

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் எழுச்சிவரிகளுக்கு இயன்றவரையில் செயல்வடிவம் கொடுத்திட—

மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான ஒப்புதலுக்காக, 1988-89ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1989-90ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும், இந்த அவையின் முன் வைக்கிறேன்.

2. ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகக் குரலெழுப்பி, அதன்விளைவாக ஆட்சிப் பொறுப்பை இழந்து—ஆளுங்கட்சியாக இருப்பினும், எதிர்க் கட்சியாக இருப்பினும், மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற கருத்திற்கேற்ப, பணியாற்றி வரும் எங்களை, மீண்டும் அரசுப் பொறுப்பில் அமர்த்தித் தங்களுக்கு ஊழியம் புரிய உத்திரவிட்டுள்ள தமிழக மக்கள் அனைவர்க்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. பல்வேறு இனம்—மொழி—கலை—கலாச்சாரம் கொண்ட இந்தியாவின் ஒற்றுமையை, மாநில சுயாட்சியோடு கூடிய முழுமையான கூட்டாட்சி முறை தான் (wholesome federalism with autonomy for the States) காப்பாற்ற முடியும் என்று இந்த அரசு நம்புகிறது. அதற்கேற்ற வகையில், அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதற்காக, இந்தியாவிலேயே முதல் முறையாக, 1969ஆம் ஆண்டு, உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி பி. வி. ராஜமன்னார் அவர்கள் தலைமையில், பல்கலைக் கழகத் துணை வேந்தர் ஏ. லட்சுமணசாமி முதலியார், உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சந்திரா ரெட்டி ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து —இந்தியாவிலேயே முதல் முறையாக, 1974ஆம் ஆண்டு, சட்டப் பேரவையில் மாநில சுயாட்சிக்கான தீர்மானத்தையும் இந்த அரசின் சார்பில் நிறைவேற்றி, அந்தக் கொள்கை பரவிட முன்னோடியாகத் திகழ்கிறது. மத்தியில் அதிகாரங்களைக் குவிப்பது நாட்டின் ஒற்றுமை சக்திகளைப் பலவீனப்படுத்தி, ஒருமைப் பாட்டை வீழ்த்தி விடும் என்று இந்த அரசு அஞ்சுகிறது.





எனவே, மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கை வெற்றி பெற, இந்த அரசு, அயராது தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கும்.

4. " அதேபோன்று அரசியல் சட்டத்தின் 8ஆவது அட்டவணையில் உள்ள, தமிழ் உள்ளிட்ட பதினைந்து தேசிய மொழிகளும், இந்தியாவின் ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது இவ்வரசின் நிலை. இச் சட்டத் திருத்தம் நிறைவேறும் வரை, ஆங்கிலமும் தொடர்ந்து ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும் என்பதை இவ்வரசு பல்வேறு மட்டங்களில் வலியுறுத்தும். அதே நேரத்தில், தமிழ் மக்களின் விருப்பத்திற்கு எதிராக, இந்தி மொழியைத் திணிப் பதற்காக எடுக்கப்படும் எல்லா முயற்சிகளையும் இவ்வரசு தடுத்து நிறுத்தத் தயங்காது "

என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருப்பதை மீண்டும் நினைவூட்டுவதோடு, இந்தி ஆதிக்க எதிர்ப்புக் காவல் அரணாக, இந்த அரசு என்றும் விளங்கும் என்பதை, உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

### மத்திய—மாநில நிதி உறவுகள்

5. இவ்வரசு பொறுப்பேற்று, கடந்த இரண்டு மாதங்களில், மத்திய—மாநில உறவுகளைப் பற்றியும், தமிழ்நாட்டிற்கு மத்திய அரசிடமிருந்து நியாயமாக வரவேண்டிய உதவிகளைப் பற்றியும் எடுத்துச் சொல்ல வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றன. பிப்ரவரித் திங்களில், புது தில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், மத்திய—மாநில உறவுகளைப் பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளேன். அவ்வமயம் சட்டம், நிர்வாகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில்

மத்திய-மாநில அரசின் உறவுகள் குறித்து, ஒன்றுக் கொன்று தொடர்பான முறையில், தொகுத்து விவாதிக்க முன்வருவது அவசியமும் அவசரமானதுமாகும் என்று விளக்கியுள்ளேன். இதன்பொருட்டு, அரசியல் சட்டத்தின் 263ஆம் பிரிவின்கீழ் ''அனைத்து மாநிலங்களின் குழு''வை (Inter State Council) உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்றும், அத்தகைய குழுவின் அமைப்பு, செயல்முறைகளைப்பற்றி, பிரதமர் அவர்கள் மாநில முதலமைச்சர்களுடன் வெகுவிரைவில் கலந்தாலோசிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தியுள்ளேன்.

6. 1984ஆம் ஆண்டில் எடுத்த முடிவின்படி மத்திய அரசு விதித்து, வசூலித்து, மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய சரக்கு அனுப்புவதின் மீதான வரியை (Consignment Tax) மேலும் தாமதமில்லாமல், மத்திய அரசு கொண்டுவர வேண்டுமென்று, நமது மாநிலம் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்களும் அந்த மாநாட்டில் கருத்துத் தெரிவித்தனர். அதன் அடிப்படையில், விரைவில் இதற்கான சட்டம், நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் என்று நம்புகிறோம்.

7. ஒன்பதாவது நிதிக் குழுவினர் பிப்ரவரித் திங்களில், சென்னைக்கு வருகை தந்தபோது, அவர்கள் முன் நமது அரசு விரிவான அறிக்கை ஒன்றை வைத்தது. குறிப்பாக தமிழ்நாட்டின் தனிப் பிரச்சினைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்று அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளோம். 1989-90ஆம் ஆண்டின் ஒன்பதாவது நிதிக் குழுவின் அறிக்கை, நமக்கு மனநிறைவை அளிப்பதாக இல்லை என்று சுட்டிக் காட்டி, நிதிக் குழு 1990-95ஆம் ஆண்டுகளுக்குத் தர இருக்கும் இறுதி அறிக்கை, நம்முடைய நியாயமான



கோரிக்கைகளை நிறைவு செய்ய வேண்டுமென்று சான்றுகள் பலவற்றை எடுத்துரைத்துக் கேட்டுள்ளோம்.

8. தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடுகள் குறைந்து கொண்டே வருகின்றன என்பது பற்றி ஆளுநர் உரையில் கவலை தெரிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக பிப்ரவரியில் நான் தில்லி சென்றபோது, பிரதமரிடம் விரிவான அறிக்கை ஒன்றைக் கொடுத்துள்ளேன். அதில், நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தின் மூன்றாவது பிரிவு, காவிரி கழிமுகப் பகுதியை நவீனமயமாக்கும் திட்டம், கடலூரிலிருந்து கன்னியாகுமரி வரையிலான சாலையை மேம்படுத்துதல், சென்னை மாநகரின் விரைவுப் போக்குவரத்துத் திட்டம் என்பது போன்ற முக்கியமான திட்டங்களுக்கு அனுமதி அளித்து, அப் பணிகளை விரைவுபடுத்த வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளேன். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திடமிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய உரிமைத் தொகையும் (Royalty) இலாபத்தில் பங்கும் (Profit Sharing) விரைவில் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட வேண்டும் என்ற நியாயத்தை எடுத்துரைத்திருக்கிறோம்.

9. அண்மையில் கொண்டு வரப்பட்ட இரயில்வே வரவு–செலவுத் திட்டத்தில் தமிழ்நாட்டில் நடைபெறும் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் மிகவும் குறைவாக உள்ளது வருந்தத் தக்கதாகும். கரூர்—திண்டுக்கல் அகல இரயில் பாதைப் பணியைத் துரிதப்படுத்த வேண்டுமென்றும், சென்னைப் பெருநகர் விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டத்தை முனைப்பாக நிறைவேற்ற வேண்டுமென்றும், நான் இரண்டாவது முறையாக தில்லி சென்றபோது வற்புறுத்தியுள்ளேன்.

### நிதி நிலைமை

**10.** ஆளுநரின் பேருரையில், நமது அரசு கடுமையான நிதிப் பற்றாக்குறையின் பிடியிலிருப்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 1988-89ஆம் ஆண்டுத் திருத்த மதிப்பீட்டைத் தொடர்ந்து ஆராயும்போது, முழு விவரங்களையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இடர்ப்பாட்டுக்குரிய இக்கட்டான நிதி நிலைமையில்தான், இந்த வரவு-செலவுத் திட்டத்தை நான் உங்கள் முன்னர் எடுத்து வைக்கின்றேன். இன்றைய நிதி நிலைமை இன்னும் பல மாதங்கள் கழிந்த பின்னர்தான் ஓரளவு சீரடையக் கூடும்.

**11.** இந்த நிலையில், இந்த அரசு பொறுப்பேற்று இரண்டு திங்கள்களே ஆன காரணத்தால், இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தை முன் வைத்து விட்டு, நிதி நிலை சீர்ப்பட்ட பிறகு, சில திங்களுக்குப் பிறகு முழுமையான வரவு-செலவுத் திட்டத்தை அவை முன் வைக்கலாமா என்று ஆராய்ந்தோம். அதனால், வளர்ச்சித் திட்டங்களின் வேகம் குறைவதோடு, நிச்சயமற்ற நிலைமை உருவாகலாம் என்ற காரணத்தால்; அவ்வாறு செய்யாமல், மிகக் குறுகிய காலமாக இருந்த போதிலும், இந்த ஆண்டிற்குரிய முழுமையான வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்துள்ளோம்.

**12.** கடந்த கூட்டத் தொடரில், மதுவிலக்குத் தொடர்பான சட்டத்திலும், விதிகளிலும் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 100 கோடி வருவாய் கூடுதலாகக் கிடைப்பதற்கு வழி காணப் பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்ட இடர்ப்பாடுகள் இம் மாற்றங்களினால் ஓரளவுக்குக் குறையும்.





### நிறைவேற்றப்பட்ட தேர்தல் வாக்குறுதிகள்

**13.** நமது அரசு பதவியேற்று இரண்டு திங்கள் கூட முழுவதுமாக இன்னும் முடியவில்லை என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கறிவர். இச் சட்ட மன்றத்தின் முதல் கூட்டத் தொடர், நமது அரசு பொறுப்பேற்ற இரு வார காலத்தில் தொடங்கியது. அவ்வமையம் ஆளுநர் பேருரையில், நமது அரசின் கொள்கைகளும், முன்னுரிமைகளும் கூறப்பட்டன. ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டு திங்களே ஆகியுள்ள இக் குறுகிய கால அளவிலேயே தேர்தல் வாக்குறுதிகள் சிலவற்றை நிறைவேற்றியுள்ளோம். குறிப்பாக, சட்டமன்ற மேலவை அமைக்கத் தீர்மானம் நிறைவேறியது—மாநகராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவது — ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள் பதவிக் காலத்தை, ஐந்தாண்டுகளுக்கு நீட்டிப்பது— ஊராட்சி ஒன்றியங்களுக்கு, பறிக்கப்பட்ட அதிகாரங்களை வழங்குவது—மகளிருக்கு 30 சதவீதம் அரசுப் பணிகளிலே ஒதுக்கீடு செய்வது— அரசுப் பணிகளில் சேருவோருக்கு வயது வரம்பு 30ஆக உயர்த்துதல் — விவசாயிகள் மின்வாரியத்திற்கு 1979ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியில் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையைத் தாமதமாகக் கட்டியதற்கு விதிக்கப்பட்ட அபராத வட்டி (belated payment surcharge) அறவே ரத்து செய்யப்படுதல் ஆகியவை அடங்கும்.

**விவசாயிகள் நிவாரணம்**

**14.** நடப்பாண்டில் தென்மேற்குப் பருவ மழை பொய்க்காவிடினும், வடகிழக்குப் பருவ மழை பொய்த்து, பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. எனவே, மாநிலத்தின் பல பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு மிகக் கடுமையாக நிலவுகிறது. விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளின் கடன் பளு குறைக்கப்பட வேண்டும் என்ற முறையீட்டை இந்த அரசு மிகப் பரிவோடு பரிசீலித்தது. சிறு விவசாயிகளின் மீதுள்ள அந்தப் பாதிப்புப் பளுவைக் குறைக்க, அரசு ஒரு சில முடிவுகளை எடுத்துள்ளது.

(அ) ஏற்கெனவே வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், மாற்றி அமைக்கப்பட்ட குறுகிய காலப் பயிர்க் கடன்களின் தவணைத் தவறிய கடன் தொகைகள் அனைத்தும், அறவே ரத்து செய்யப்படும்.

(ஆ) குறுகிய, மத்தியக் காலக் கடன்கள் மீதுள்ள அபராத வட்டியும், அறவே தள்ளுபடி செய்யப்படும்.

(இ) நீண்ட காலக் கடன்கள்மீது ஒத்தி வைக்கப்பட்டுள்ள வட்டியும், அறவே தள்ளுபடி செய்யப்படும்.

**15.** கடந்த கால அரசு, இதுபோன்ற தள்ளுபடிச் சலுகைகளை விவசாயிகளுக்கு அளித்தது. அதன்படி, விவசாயிகள் கட்ட வேண்டிய நிலுவைகளை, கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசே கட்டுவதாக உறுதி அளித்திருந்தது. ஆனால், கடந்த கால அரசு அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்ட வேண்டிய ஈட்டுத் தொகை இன்னும் 67 கோடி ரூபாய் பாக்கியிருக்கின்றது.





கூட்டுறவுச் சங்கங்கள் நொடித்துப் போகாமல் இருக்கும் பொருட்டு, அந்தப் பாக்கித் தொகையைக் கட்ட வேண்டிய தவிர்க்க முடியாத பொறுப்பும், இந்த அரசின் தலையில் விழுந்து விட்டது. அந்த பாக்கித் தொகை ரூபாய் 67 கோடியும், இப்போது விவசாயிகளுக்கு அளிக்கும் சலுகைகளின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க வேண்டிய 39 கோடி ரூபாயும் சேர்ந்து, மொத்தமாக ரூபாய் 106 கோடியை நிதிநிலை நெருக்கடியான இந்த நேரத்தில் நாம் ஏற்க முன் வந்துள்ளோம். இப்போது அறிவிக்கப்படும் சலுகைகளால் 9.36 இலட்சம் விவசாயிகள் பயனடைவார்கள்.

**வறட்சி நிவாரணப் பணிகள்**

**16.** குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கும்பொருட்டு அரசு ஆரம்ப நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக 5,000 ஆழ்துளைக் கிணறுகள் தோண்ட, ரூபாய் 12.5 கோடி செலவிட அரசு முன் வந்துள்ளது. இந்நிலை குறித்தும் மற்றும் வறட்சி நிலவரம் குறித்தும் விரைவில் நடைபெறவிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் விவாதித்து, விரிவான அளவில், உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவிருக்கின்றது. வறட்சித் துயர் துடைப்புப் பணிகளுக்கென, முதற்கட்டமாகவும், உடனடியாகவும், ரூபாய் 25 கோடி வழங்குமாறு மத்திய அரசையும் கேட்டுள்ளோம்.

**உணவு நிலைமை**

**17.** 1987–88ஆம் ஆண்டில் அரிசி உற்பத்தி, 58 இலட்சம் டன்னாக இருந்ததற்கு மாறாக 1988-89ஆம் ஆண்டில், 57 இலட்சம் டன் அளவுக்குத்தான் அமையக் கூடுமெனக் கருதுகிறோம். இவ்வாறு உற்பத்தி

நிலையில் தேக்கம் காணப்பட்டாலும், பொது விநியோக முறையில் போதிய உணவுப்பொருள்கள், மக்களுக்குத் தடையின்றிக் கிடைப்பதற்கும், அதிக விலையின்றிக் கிடைப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் அனைத்தும் எடுப்போம் என உறுதியளிக்கிறேன். நடப்பாண்டில் அரிசிக் கொள்முதல் திட்ட இலக்கான 7 இலட்சம் டன் அளவை அடைவோம். பன்முறை நாம் முறையிட்ட பின்னரும், 1988 நவம்பரிலிருந்து 1989 ஜனவரி வரைப்பட்ட கால அளவுக்கு, மத்தியத் தொகுப்பிலிருந்து திங்கள் ஒன்றுக்கு ஒதுக்கி வந்த 80,000 டன் அரிசி அளவை, பிப்ரவரியிலிருந்து 40,000 டன் அளவுக்குக் குறைத்திருப்பது, பெரிதும் வருந்தத் தக்கதாகும். இந்த ஒதுக்கீட்டளவில் வெட்டு விழுந்ததோடு மாத்திரமின்றி, அரிசி விலையை, கிலோ கிராமுக்கு ரூ. 2.79 என்பதிலிருந்து ரூ. 3.25 ஆக மத்திய அரசு திடீரென உயர்த்திவிட்டது. இந்த விலை உயர்வை நமது அரசு நடைமுறைப்படுத்தவில்லை. ஏற்கெனவே உணவுக்காக உதவித் தொகை (food subsidy) ரூபாய் 113 கோடி இழப்பை ஏற்றுக் கொண்டுள்ள இந்த அரசு, இப்போது இந்த விலை உயர்வினால், மேலும் ஆண்டு ஒன்றுக்கு 23 கோடி ரூபாய் இழப்புச் சுமையைத் தாங்க வேண்டியுள்ளது.

### நிர்வாகச் சீர்திருத்தம்

**18.** நிர்வாகச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து மும்முரமாக நிறைவேற்ற சில முக்கியமான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

முதற்கண், உள்ளாட்சி மன்றங்களுக்குக் கணிசமான அளவுக்கு அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்துள்ளோம்.



இரண்டாவதாக, சமயச் சான்றோருடன் நடத்திய கலந்துரையாடலின் அடிப்படையில், கோயில் நிர்வாகம் பற்றி விரிவாக ஆய்வு செய்யக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், கோயில் நிர்வாகத்தில் முறைகேடுகள் நிகழாமல் நிலையான சீர்திருத்தங்கள் கொண்டுவர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

மூன்றாவதாக, கிராம நிர்வாகம் திறம்பட நடைபெறுவதற்கு வழிவகை கண்டறிய, குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கிராம அதிகாரிகள் அவரவர் கிராமத்திலேயே வாழ்பவர்களாக இருக்க வேண்டும்; அவ்வாறு இருந்தால்தான், கிராம மக்களுக்கு வசதிக் குறைவு எதுவும் ஏற்படாது; மேலும் கிராமக் கணக்குகள் சரிவரப் பராமரிக்கப்படும் என்ற கருத்து பரவலாக இருக்கிறது. இது குறித்தும் அந்தக் குழு ஆய்வு நடத்தி அரசுக்கு அறிக்கை தரும்.

நான்காவதாக, மேலிருந்து கீழே வரை நிர்வாகம் செம்மைப்படுத்தப்படும். மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முதல், வட்டாட்சியர் அலுவலகம் வரை நவீனப்படுத்தப்படும். பொது மக்களின் மனுக்களை விரைவில் பைசல் செய்யப்படும். அரசு, மக்களுக்கு அறிவித்த சலுகைகள் மக்களுக்கு எளிதாக விரைவில் கிடைத்திட வழி வகை செய்யப்படும். இதன் பொருட்டு அரசு அறிவித்துள்ள திட்டப் பணிகளின் பயனை மக்கள் அடைய அவர்கள் என்ன செய்ய வேண்டும், அதிகாரிகள் என்ன செய்ய வேண்டும், எந்த கால அளவுக்குள் செய்ய வேண்டும் என்பதை அறிவிப்புப் பலகைகள் வாயிலாகவும், மக்களுடன் தொடர்பு கொள்ளும் கூட்டங்களிலும், அச்சடிக்கப்பட்ட குறிப்புகள் மூலமும்

தெரிவிக்க உள்ளோம். இது திட்டப் பணிகளின் பயன்களைத் தகுதியுள்ளோர் பெறவும், ஒருசிலர் தகாத முறையில் பெறுவதைத் தடுக்கவும் அனைவரும் அறியத்தக்க வகையில் அமையும்.

### நிர்வாக வசதிக்காக மாவட்டங்களைப் பிரித்தல்

**19.** கடந்த கால அரசில், நிர்வாக வசதிக்காகப் பல மாவட்டங்கள் இரண்டாகவும், மூன்றாகவும் பிரிக்கப்பட்டுத் தனித் தனியே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களும், மாவட்டக் காவல் துறை அலுவலகங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அந்த மாவட்டங்களுக்கு தலைவர்கள் பெயரும் சூட்டப்பட்டுள்ளன. இது ஒரு பாராட்டத்தக்க முயற்சி எனினும், செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அந்த மாவட்ட மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப, பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயர் சூட்டப்படவில்லை. அதற்கு மாறாக, மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திண்டுக்கல்லை தலைநகரமாகக் கொண்ட பகுதிக்கு அண்ணா மாவட்டம் என்று பெயர் சூட்டப்பட்டது. இப்போது அதிலே ஒரு மாற்றம் செய்து, இப்போதைய செங்கல்பட்டு மாவட்டத்திற்கு ''செங்கை-அண்ணா மாவட்டம்'' என்றும், திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்ட அண்ணா மாவட்டத்தின் பெயரை மாற்றி ''திண்டுக்கல்–காயிதே மில்லத் மாவட்டம்'' என்றும் பெயர் சூட்டப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**20.** மற்ற மாவட்டங்களையும், நிர்வாக வசதிக்காகப் பிரிப்பதும், அதற்கான பெயர்களைச் சூட்டுவதும், விரைவில் ஆராயப்பட்டு அறிவிக்கப்படும்.



### அரசு அலுவலர்-ஆசிரியர் நலன்

**21.** மத்திய-மாநில அரசு அலுவலர்களின் ஊதிய விகிதம் சமநிலையாக இருக்க வேண்டுமென்பதைக் கொள்கை அளவில் ஒப்புக்கொண்ட இவ்வரசு, இதற்கென குடியரசுத் தலைவர் ஆட்சியில் நியமிக்கப்பட்ட ஐந்தாவது ஊதியக் குழுவின் அறிக்கையை, ஏப்ரல் மாத இறுதிக்குள் தாமதமின்றிப் பெற்று, அதனை ஆராய்ந்து, மே மாத இறுதிக்குள், அரசு அலுவலர், ஆசிரியர் கோரிக்கை நிறைவேறும் வகையில் முடிவு அறிவிக்கப்படும். இந்த முடிவு 1—6—1988 முதல், முன் தேதியிட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

### 1989–90 ஆம் ஆண்டுக்குரிய திட்ட ஒதுக்கீடு

**22.** 1989–90ஆம் ஆண்டு, ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டாகும். வரும் ஆண்டிற்குரிய திட்ட ஒதுக்கீட்டைக் குறிப்பிடுவதற்கு முன்பாக, ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், முதல் நான்காண்டுகளின் திட்டச் செலவு பற்றி சுருக்கமாகக் கூறிட விரும்புகிறேன். இம் மாநிலத்தின் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 5,750 கோடி என முதலில் வரையறை செய்யப்பட்டுள்ளது. 1985-86-ல் ரூ. 1,012 கோடியும், 1986–87–ல் ரூ. 1,203 கோடியும், 1987–88-ல் ரூ. 1,337 கோடியும் செலவாயிற்று. இவையனைத்தையும் சேர்த்துத் திட்டக் காலத்தின் முதல் மூன்றாண்டுகளின் மொத்தச் செலவு ரூ. 3,552 கோடியாகும்.

**23.** திட்டப் பணிகளை வகுத்த நிலையில் (1988–89) நடப்பாண்டுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு அமைந்த நிதியாதாரம் சுமார் ரூ. 1,302 கோடிதான் என்பது

தெளிவாக இருந்த போதிலும், ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ. 1,457 கோடி என அறிவிக்கப் பட்டது. பற்றாக்குறையாகவுள்ள தொகை ரூ. 155 கோடியாகும். கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டு வதன் மூலமாக சுமார் ரூ. 50 கோடிக்கு இப் பற்றாக் குறையை ஈடு செய்ய, அப்போதிருந்த அரசு ஒப்புக் கொண்டிருந்தது. ஆயினும், அந்த வகையில் எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. 1988–89ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் முதற்கண் சேர்க்கப்பட்டிருந்த, ஏறத்தாழ 409 திட்டப் பணிகளைக் கைவிட்டும் கூட, வருவாய் குறைந்ததோடு, செலவும் மிகுதிப்பட்டு, இறுதியில், நடப்பாண்டில் திட்டப் பணிகளுக்கென அமைந்த நிதியாதாரங்கள் பெரிதும் குறைந்தன. எனவே, 1988--89ஆம் ஆண்டிற்குரிய திட்ட ஒதுக்கீட்டை, ரூ. 1,202 கோடியாகத் திருத்தியமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இது, 1986–87-ல் திட்டப் பணிகளுக்குச் செலவிட்ட ரூ. 1,203 கோடி தொகை அளவே ஆகும். மேலும், 1987--88-ல் வரையறுக்கப் பட்ட 1,250 கோடி ரூபாய் திட்ட ஒதுக்கீட்டைவிடக் குறைவாகும். திட்டத்தில் ஏற்பட்ட இந்தச் சரிவு நமக்கு மிகவும் கவலை தருவதாயிற்று.

**24.** 1989–90 ஆண்டிற்குரிய திட்ட ஒதுக்கீடு பற்றி, மத்திய திட்டக் குழுவுடன், அண்மையில் விவாதித்து, வரும் ஆண்டில், ரூ. 1,360 கோடிக்குத் திட்ட ஒப்புதல் பெற்றுள்ளோம். நிதி நெருக்கடி இருந்த போதிலும், கடந்த ஆண்டை விட, 1989–90-ல் திட்ட ஒதுக்கீட்டை 13 சதவீதம் பெருக்கியுள்ளோம். எனவே, ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு ஒப்புதல் அளிக்கப் பட்ட, 5,750 கோடி ரூபாய் என்பதற்கு மாறாகத்





திட்டச் செலவு, ரூ. 6,114 கோடியாக அமையுமென எதிர்பார்க்கலாம். எனினும் இந்த ஐந்தாண்டுகளில் ஏற்பட்டுள்ள பண மதிப்பைக் கணக்கில் எடுத்துப் பார்த்தால், தமிழ்நாட்டின் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்ட அளவுக்கு சுமார் 20 சதவிகிதம் குறைவாகவே நிறைவேற்றப்படும் நிலைமை யில் உள்ளது.

### வேளாண்மை

**25.** நம்முடைய மக்களில் நூற்றுக்கு எழுபது பேர் வேளாண்மையையே நம்பி வாழ்கின்றனர். வேளாண்மை விரிவாக்கப் பணிகளுக்காக ரூ. 25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் வேளாண்மைப் பணிகள் மாநிலம் முழுவதும் பெருகுவதோடு, வேளாண்மை உற்பத்தியும், ஆதாயமும் மேலும் உயர்வதற்கு உதவும். பொறுக்கு விதைகள், இரசாயன உரங்கள், பயிர்ப் பூச்சிக்கொல்லி மருந்துகள், களைக்கொல்லிகள் போன்றவற்றை வழங்குவதுடன், வேளாண்மைக்குரிய நவீன தொழில்நுட்ப உத்திகளும் அறிமுகப்படுத்தப்படும். தொடக்க நிலையில், சிறிய பகுதிகளுக்கானத் திட்டங்கள் வகுக்கப்படும். கூட்டுறவுச் சங்கங்களும், பிற நிறுவனங்களும், இப் பணியில் ஈடுபடுத்தப்படும். வேளாண்மைப் பணிகளில் அதிக அளவில் ஈடுபட்டிருக்கிற மகளிர் நிலை உயரவும், முதன்மை அளிக்கப்படும். பயிற்சி — நேர்காணல் திட்டத்தின்கீழ்த் தற்போதுள்ள பணியாளர்களைத் திரட்டி, விரிவாக்கப் பணிகளை அடுத்த ஆண்டு மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்படும். விதைப்பெருக்கம், அவசர காலத்தின் தேவையை நிறைவு செய்ய, விதைகளை இருப்பில் வைத்திருத்தல் ஆகியவை, போதுமான அளவிற்கு நிறைவு செய்யப் படும்.

**26.** போதுமான கடனுதவியுடன் தீவிர அரிசி உற்பத்திக்கான சிறப்புத் திட்டங்கள் வரும் ஆண்டில் செங்கை—அண்ணா, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, நெல்லை கட்டபொம்மன் ஆகிய எட்டு மாவட்டங்களில் தொடரப்படும். எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் துறையும் முதன்மை பெறும் துறையாகும். 1989-90-ல் 18 இலட்சம் டன் உற்பத்தி செய்ய இலக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. வேளாண்மைக் கல்விக்கு நாம் தனி முதன்மை அளித்திருக்கிறோம். தற்போது, மாநிலத்தில் மூன்று வேளாண்மைக் கல்லூரிகள் உள்ளன. நான்காவதாக, வரும் ஆண்டில், திருச்சி மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரியைத் தொடங்க முடிவு செய்திருக்கிறோம் என்பதை, அவை உறுப்பினர்களுக்கு உவகையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வன வள மேம்பாடு

**27.** சுவீடன் நாட்டிலிருந்து நிதி உதவி பெறும் சமூக நல வன வளர்ப்புத் திட்டம், இத்துறையில் இடம் பெறும் பெரும் திட்டமாகும். இத்திட்டத்தின் முதற்கட்டப் பணி சரியாகச் செயல்படவில்லை. அதனைச் செம்மைப்படுத்தி, ரூ. 85.40 கோடி செலவில், இரண்டாம் கட்டப் பணியைச் செயற்படுத்த அரசு முன்வந்துள்ளது. மேலும், நீலகிரி, பழனி மலைப் பகுதிகளில், கடந்த சில ஆண்டுகளாக, பெருமளவுக்கு வன வளம் அழிவுக்குள்ளாகி, நிலச் சரிவும் ஏற்பட்டுள்ளது. இதனால், மழையளவும் பாதிக்கப்பட்டுள்ளது. இது வருந்தத்தக்க ஒன்றாகும். இதனைச் சீர்செய்து, வன வளத்தை அப்பகுதிகளில்



பெருக்கிட, மாநில அரசு ஒரு திட்டம் வகுத்து மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. விரைவில் அதற்கான அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

### கால்நடை வளர்ப்பு

**28.** வரும் ஆண்டில், ரூ. 13.73 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஆடுகள் வளர்ப்புப் பெரும் திட்டம் ஒன்று புதிதாகத் தொடங்கப்படும். செங்கை-அண்ணா, தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். நமது நாட்டு ஆடுகள், 15 கிலோ முதல் 20 கிலோ வரை எடை கொண்டதாயிருக்கின்றன. இந்த எடையை 40 கிலோவாக உயர்த்த வேண்டும் என்பதே இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். இதனால், ஆடு வளர்ப்போருக்கு நல்ல வருமானம் கிட்டும். கால்நடைகளின் தீவன மேம்பாட்டிற்கு முதன்மையளித்து, ஒருங்கிணைந்த புதிய மேம்பாட்டுத் திட்டம் ஒன்று, ரூபாய் 4 கோடி செலவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

### மீனளம்

**29.** இம் மாநிலத்தில், மீனள வளர்ச்சித் திட்டங்கள் மூலம், மீன் உற்பத்தியையும், மீன் உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவதில், குறிப்பாக, உவர் நீரில் அதிகப் பரப்பளவில் இறால் வளர்ப்பை மேம்படுத்தவும், மீனவர் சமுதாயத்தின் சமூக—பொருளாதார நிலைமையை மேம்படுத்தவும் அதிக கவனம் செலுத்தி வரப்படுகின்றது. தற்போதைய மீன் குஞ்சு உற்பத்தி அளவான 60 மில்லியனை, 100 மில்லியனாக உயர்த்துவதற்கு, இரண்டு பெரிய

மீன் குஞ்சுப் பண்ணைகள், பவானிசாகரிலும், மணிமுத்தாறிலும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இறால் வளர்ப்பை மேம்படுத்துவதற்கு உரிய முக்கியத்துவம் அளிக்கும்பொருட்டு, சுமார் 37,000 ஏக்கர் உவர் நீர் நிலைப் பகுதி பயன்படுத்திக் கொள்ளப்படும். வரும் ஆண்டில் அத்தகைய பகுதிகளில், 2,500 ஏக்கரில் இறால் வளர்ப்புப் பணி மேற்கொள்ளப்படும்.

### பட்டுப் புழு வளர்ப்பு

**30.** உலக வங்கியின் உதவியுடன் பட்டுப் புழு வளர்ப்புத் துறையில் ரூ. 41.77 கோடி மதிப்பீட்டில் விரிவானதொரு திட்டம் வரும் ஆண்டில் தொடங்கப் படவுள்ளது. வேளாண்மை-ஊரக வளர்ச்சி தேசிய வங்கி, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி போன்ற நிறுவனங்கள், இத்திட்டத்திற்கு நிதி உதவி செய்யும். இத்திட்டக் காலத்தின் இறுதியில், கூடுதலாக 30,000 ஏக்கர் பரப்பில் முசுக்கொட்டைச் செடி வளர்க்கப்படும் என்பதோடு, கிராமப் பகுதிகளில், ஆடவரும், மகளிருமாக இத்திட்டத்தினால் ஒரு இலட்சம் பேர் வேலை வாய்ப்பைப் பெறுவர்.

### பாசனம்

**31.** ரூபாய் 70 கோடி செலவில் தொடங்கப்பட்ட பெரியார் – வைகைத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணி, வரும் ஆண்டில் முடிக்கப்படும். இதனால், கூடுதலாகச் சுமார் 18,500 ஏக்கர், பாசனப் பயன் பெறும்.

**32.** 1989-90ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்தில், ரூ. 10.87 கோடி செலவில், பொய்கையாறு நீர்த்தேக்கத் திட்டமும், நெல்லை





கட்டபொம்மன் மாவட்டத்தில், ரூ. 10.12 கோடி செலவில், நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டமும் துவங்கப்படும். 1975ஆம் ஆண்டில் செயலாக்க உத்தேசித்த, பச்சையாறு பாசனத் திட்டம், சுற்றுச் சூழல் குறித்த அனுமதி கிடைக்காததால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இவ்வனுமதியினைப் பெற்றுத் திட்டத்தை விரைவில் துவங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தினால், புதிதாக 1.75 இலட்சம் ஏக்கர் கொண்ட புதிய ஆயக்கட்டு உருவாக்கப்பட்டு உள்ளது. மேற்கூறிய புதிய ஆயக்கட்டுப் பகுதியும், ஏற்கெனவே உள்ள ஆயக்கட்டுப் பகுதியும் பயனடையும் வகையில், பாசன வசதிகள் முறைப்படுத்தப்படும்.

**33.** மதுரை மாநகரில் தண்ணீர்த் தட்டுப்பாடு உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும். இம்மாநகரத்திற்கு 2.40 டி.எம்.சி. அளவிற்குக் குடிதண்ணீர் வசதியைப் பெருக்கும் வகையில், கல்லாறு மற்றும் அச்சன்-கோயிலாறு ஆகியவற்றின் நதி நீரைப் பெறுவதற்குக் கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம். வைகை அணைத் திட்டத்தில் இணையாத, பல சிறிய ஆறுகளின் நீரைத் திரட்டித் தேக்குவதே அழகரணைத் திட்டம். இதன் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**34.** பாசனத்திற்கு ஏரிகள் முக்கிய ஆதாரமாக இருந்தாலும், போதுமான கவனம் செலுத்தப்படாமலிருந்தன. ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் உதவியுடன், செங்கை-அண்ணா, வட ஆற்காடு, தென் ஆற்காடு, புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராம

லிங்கம், இராமநாதபுரம், காமராஜர் ஆகிய ஏழு மாவட்டங்களில் 206 ஏரிகளை நவீனப்படுத்தும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. இதனால் 71,000 ஏக்கர் வேளாண்மை நிலம் பயனடையும். இத்திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணியை ரூ. 53.12 கோடி செலவில், மேற்கண்ட ஏழு மாவட்டங்களிலும், மற்றும் வரும் ஆண்டில், திருச்சிராப்பள்ளி, மதுரை, திண்டுக்கல்-காயிதே மில்லத், நெல்லை கட்டபொம்மன், சிதம்பரனார் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும், 230 ஏரிகள், ஐந்தாண்டுக் கால அளவில், நவீனப்படுத்தப்படும். இத்திட்டத்தினால், 60,300 ஏக்கர் வேளாண்மை நிலங்கள் பயனடையும்.

**35.** தமிழ்நாட்டில், பயிர் செய்யப்படும் சுமார் 60 சதவீத நிலங்கள், பாசனம் பெறாமல் இருக்கின்றன. வறண்ட பகுதிகளில், ஈரப் பாதுகாப்பிற்கும் ஏற்கெனவே பாசனம் பெறுகின்ற பகுதிகளில், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கும், முதன்மை அளிப்பது அவசியமாகும். இதை முன்னிட்டு, வரும் ஆண்டில், சிதம்பரனார் மற்றும் நெல்லை கட்டபொம்மன் மாவட்டங்களில், 49,400 ஏக்கர் பரப்பில், புன்செய் நிலங்களுக்கான நீரைச் சேமித்து உற்பத்தித் திறனைப் பெருக்கும் ஒரு திட்டத்தை மேற்கொள்வோம். உலக வங்கி நிதி உதவி பெற்று, சாத்தனூர், தாமிரபரணி, கோதையாறு ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும், தேசிய நீர்க் கட்டுப்பாடுத் திட்டம் (National Water Management Project) வரும் ஆண்டில் கம்பம் பள்ளத்தாக்கிற்கும் நீட்டிக்கப்படும். நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வகை செய்ய, மேலும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டு வருகின்றது. முதற்கண்,



பாலாறு, அமராவதி, நொய்யல், வெள்ளாறு வடிநிலப் பகுதிகளில் உள்ள ஏறத்தாழ 49,400 ஏக்கர் பரப்பு இதில் அடங்கும்.

**36.** மாநிலத்தில், ஆற்றுப் பாசனத்தில் பெரும் பகுதி பாசன வசதி பெறுவது, காவிரி வடிநிலப் பகுதி தான். கர்நாடக மாநிலத்திலிருந்து மேட்டூர் நீர்த் தேக்கத்திற்குப் போதுமான நீர் பெறுவதில் ஆண்டுக்காண்டு நமக்கு ஏற்பட்டு வரும் இடர்ப்பாடுகளை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கறிவர். காவிரி நீர்ச் சிக்கல் குறித்து கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, உடன்பாட்டிற்கு வர மீண்டும் ஒருமுறை முயல்வது இந்த அரசின் கருத்தாகும். இந்த நம்பிக்கை வீண்போகுமேயானால், இப்பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென மத்திய அரசை வற்புறுத்துவது என்பது தவிர்க்க முடியாத ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காவிரி வடிநிலப் பகுதிப் பாசனத் திட்டத்தை மேம்படுத்துவதற்காக, ரூபாய் 78.80 கோடி செலவில் திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது. இது குறித்து மத்திய நீர்ப்பாசன அமைச்சரிடம் வலியுறுத்திக் கூறியுள்ளேன்.

**37.** இஃதன்னியில், வருங்காலத்தில், தமிழகம் முழுவதும் பாசன வளத்தை மேம்படுத்த, ஒருங்கிணைந்த அணுகு முறையைக் கையாளுவது மிக அவசியம். தற்போதுள்ள பாசன ஆதாரங்களைப் பேணுவதில், போதிய கவனத்தைச் செலுத்த வேண்டும். பழைய ஆற்றுப் பாசன அமைப்புகளையும், ஏரிப் பாசன அமைப்புகளையும் நவீனப்படுத்த

வேண்டும். ஆறுகள், ஏரிகள், நிலத்தடி நீர் போன்ற பல்வேறு பாசன ஆதாரங்களை, ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்த வேண்டும். ஒவ்வோர் ஆற்று வடிநிலப் பகுதியிலும் நிலவுகின்ற சூழ்நிலையைப் பொறுத்து, இப் பணிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். இவ்வகை அணுகுமுறைக்குப் பல்வேறு துறைகளில் வல்லமை பெற்ற பொறியாளர்கள், மற்றும் வல்லுநர்கள் கொண்ட "பாசன மேம்பாட்டு நிலைக் குழு" ஒன்று தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு அமைக்கப்படும்.

### மின்சக்தி

38. 1988-89ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு குறைக்கப்பட்டதால், மின்சாரத் துறைக்கான ஒதுக்கீட்டை ரூ. 500 கோடியிலிருந்து ரூ. 350 கோடியாக குறைக்க வேண்டியதாயிற்று. இதனை 1989–90-ல் திட்ட ஒதுக்கீட்டின் மூலமாக ரூ. 385 கோடியும், மின்சக்தி நிதி உதவி நிறுவனத்திலிருந்து எதிர்பார்க்கும் ரூ. 75 கோடியும் சேர்த்து, ரூ. 460 கோடியாக உயர்த்த முனைவோம்.

39. மேட்டூர் அனல் மின் நிலையத்தின் 3ஆம் பிரிவு வரும் ஆண்டில் நிறைவேற்றப்பட்டுக் கூடுதலாக 210 மெகாவாட் மின் சக்தி அளிக்கும். தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு முன்னுரிமை அளிப்பதால் 1991-ல், கூடுதலாக 420 மெகாவாட் மின்சக்தி கிடைக்கும். நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக இடர்ப்பாடுகள் இருப்பதால், 2,050 மெகாவாட் கிடைக்கக் கூடிய, நீண்டகாலத் திட்டமான வட சென்னை அனல் மின் நிலையப் பணி தாமதமடைந்துள்ளது. இந்த இடர்ப்பாடுகளை





நீக்கித் திட்டப் பணியை விரைவுபடுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். மின் சக்தியை அனுப்புவதற்கும், விநியோகிப்பதற்கும் மின் துறைக்கான ஒதுக்கீட்டில் ரூ. 110 கோடி அளவில் கணிசமான தொகை அடங்கும். இதனால், உத்திரவாதமான முறையில் மின் சக்தி அளிக்கவும், 40,000 பம்பு செட்டுகளுக்கும், 40,000 குடிசைகளுக்கும் வரும் ஆண்டில் புதிதாக மின் இணைப்பு கொடுக்கவும் முடியும்.

**40.** கூடங்குளத்தில் ஏறக்குறைய ரூ. 4,000 கோடி மூலதனத்துடன், அணு மின் நிலையம் அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இது தமிழ்நாட்டில் மத்திய அரசுத் துறையில் பெரியதொரு புதியத் திட்டமாகும். இத் திட்டம் குறித்து, மீனவர்கள் சார்பிலும், பேச்சிப்பாறை பாசனத்தை உபயோகிக்கும் விவசாயிகள் சார்பிலும், பொதுவாக அணுமின் உற்பத்தியால் ஏற்படக் கூடிய பாதகங்கள் பற்றியும், கவலைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இப்பிரச்சினைகளை ஆழ்ந்த கவனத்துடன் பரிசீலித்து, மீனவர்களுக்கும், விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் எவ்விதமான பாதகமும் ஏற்படாத வகையிலும், முழுமையான பாதுகாப்பு உத்திரவாதத்துடனும் நிறைவேற்ற—அதற்கான பரிந்துரைகளை அளிக்க—நிபுணர் குழு அமைக்க, மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

### தொழில்

**41.** மாநிலத்தில், பெரிய, நடுத்தர, மற்றும் சிறு தொழில்களை வளம் பெறச் செய்வது நம்முடைய அரசின் முக்கிய குறிக்கோளாக இருக்கும். இது

குறித்து அண்மையில் நான், தமிழ்நாட்டின் தொழிலதிபர்களின் கூட்டத்தைக் கூட்டி விரிவாக விவாதித்தேன். தொழில்களுக்கு அளிக்கப்படும், பல்வேறு சலுகைகளைத் தொடர்ந்து வழங்குவதுடன், தொழில் வளர்ச்சியுற, மாநில அரசு, அக்கறையும் ஆர்வமும் காட்டுமெனத் தொழிலதிபர்களிடத்தில் நான் உறுதி அளித்துள்ளேன். தொழில்களைத் தொடங்க, மாநில அளவில் இசைவளிப்பதிலும், மத்திய அரசிடமிருந்து புதிய தொழிலுக்கான உரிமங்கள் பெறுவதிலும், தாமதம் ஏற்படாமல் விரைவான நடவடிக்கையை மேற்கொள்வோம்.

**42.** இரசாயன மற்றும் இயற்கை எரிவாயு அடிப்படையிலான தொழில்களில், புதிய பெரும் திட்டங்கள், விரைவில் உருவாவதற்கு, நல்ல வாய்ப்புகள் உள்ளன. மணலியில் ரூ. 840 கோடி மதிப்பீட்டுச் செலவில் அமைக்கப்படும் ''பென்சீன்'' மூலப் பொருள் கொண்ட பல இரசாயனப் பொருட்களை உருவாக்கும் தொழிற்சாலைக்கு ஒப்புதல் கிடைத்துள்ளது. இது, இதனைச் சார்ந்த தொழில்கள் பலவற்றிற்கு அடிப்படையாக அமையும். தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டத்தில், 94 கோடி ரூபாய் மதிப்பீட்டு முதலீட்டில், பெட்ரோலியம் கச்சா எண்ணெய் வடிசாலை அமைப்பது, அப் பகுதியைச் சுற்றிலும் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். காவிரி கழிமுகப் பகுதியில் கிடைக்கப் பெறும் இயற்கை எரிவாயுவை அடிப்படையாகக் கொண்டு, மின் உற்பத்தியைப் பெருக்கவும், தொழில் வளர்ச்சிப் பிரிவுகள் பலவற்றை அமைக்கவும் பல வாய்ப்புகள் உள்ளன. அந்த வாய்ப்புகளை, இந்த அரசு பரிசீலித்துப் பயன்படுத்திக் கொள்ளும்.





**43.** நன்முறையில் நிர்வாகம் அமையப் பெறாததால், தமிழ்நாடு கனிம நிறுவனம் பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு உள்ளாயிற்று. இந்த முக்கியமான பொதுத் துறை நிறுவனத்தை நாம் சரி செய்து, அதனைக் கொண்டு சிவகங்கை கிராபைட் திட்டத்தைச் செயல் படுத்துவோம்.

**44.** புதிதாக ஏற்படுத்தப்படும் தொழிற்சாலைகள், இராணிப்பேட்டை, ஒசூர் போன்ற பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்பெறும் பொருட்டு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) புதிய மூன்று வளர்ச்சி மையங்கள் குறித்த பணியை, 1989-90ஆம் ஆண்டில் தொடங்கும். ஒவ்வொரு வளர்ச்சி மையத்திற்கும் உரிய முதலீடு, 30 கோடி ரூபாயாகும்.

**45.** சிறு தொழில் துறையில், தமிழ்நாட்டில், மருந்துகள், மருந்துப் பொருட்கள், மருத்துவ மின்னணுவியல் கருவிகள், உடைகள், உணவுப் பொருட்களைச் செய்முறைப்படுத்துதல், மோட்டார் துணைப் பாகங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில், ஜப்பான் நாட்டு உதவியுடன், உயர் தொழில் நுட்பம் வாய்ந்த தொழில்களைத் தொடங்குவதற்குரிய பெரும் திட்டத்தைச் சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ) மேற்கொள்ளும். சிறுதொழில் துறையில் தமிழ்நாடு சிறந்த முன்னேற்றத்தை எய்தியுள்ள போதிலும், நமது மாநிலத்தில், நூற்றுக்கணக்கான சிறுதொழில் பிரிவுகள், தொடர்ந்து நிதி மற்றும் தொழில் நுட்பப் பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றன. இந்த நலிந்த பிரிவுகளின் பிரச்சினைகளை, எல்லாக் கோணத்திலும் ஆராய்ந்து, இவற்றைப் புதுப்பித்து,

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மார்ச் 25

மீண்டும் நன்னிலைக்குக் கொண்டு வர, சிறு தொழில் சீரமைப்புக்கு ஏதுவான நடவடிக்கை எடுப்பதற்குரிய ஒரு தனி அமைப்பு உருவாக்கப்படும்.

**46.** நிதி நிலை காரணமாகவோ, அல்லது வேறு இடர்ப்பாடுகளின் காரணமாகவோ, தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள 17 நூற்பாலைகளிலும் மற்றும் 4 பொறியியல் நிறுவனங்களிலும் பணியாற்றிய 12,000 தொழிலாளர்களுக்குத் தலா ரூபாய் 250 வீதம் தொழிலாளர் நல நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. மூடப்பட்டுள்ள ஆலைகளுள் இதுவரை, மூன்று ஆலைகள் மறுபடியும் திறந்து இயங்க ஏற்பாடுகள் செய்து விட்டோம். மற்ற ஆலைகளைத் திறப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### கைத்தறி

**47.** இந்த அரசு, கோ-ஆப்டெக்ஸ் மற்றும் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேர வேண்டிய ரூ. 26.15 கோடி தள்ளுபடித் தொகையை, சில ஆண்டுகளாக வழங்காமல் இருந்ததை அளிப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளும். இந்தத் தொகையை, வரும் மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்படும். கைத்தறி ஒதுக்கீடு திட்டத்தை அமுல்படுத்துவதற்காக செயலாக்கப் பிரிவு ஒன்றை அமைத்து அதன் மூலம் விசைத்தறிப் பிரிவின் செல்வாக்கு, கைத்தறித் துறையைப் பாதிக்காத வகையில், அத் துறையின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும். இந்த ஆண்டில், கைத்தறித் துறையின் வளர்ச்சித் திட்டங்களில் முக்கியமாக, கைத்தறிகளை மேலும் மேலும் கூட்டுறவுத் துறையின்கீழ்க் கொண்டு



1989 மார்ச் 25] [டாக்டர் மு. கருணாநிதி]

வரப்படும். புது வகையான கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்ய உதவுவோம். கைத்தறிகளை நவீனமாக்குவதுடன், கைத்தறித் தொழிலாளர்களுக்கு, சீரான சம்பளம் வழங்க முயற்சி எடுக்கப்படும். வீடற்ற கைத்தறி நெசவாளர்களுக்கு குடியிருக்க வீடும், தொழில் கூடமும் வழங்கப்படும். கைத்தறி நெசவாளர்களை மேலும் அதிகமாக காப்பீட்டுத் திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்படும். நெசவாளப் பெண்களுக்குத் தறிகள் வழங்கப்படும். ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு நெசவாளர்களுக்கு, பங்குத்தொகை வசதி வழங்குவதன் மூலம், கைத்தறித்துறை மேலும் பலப்படுத்தப்படும். கைத்தறி வளர்ச்சிக்கு, மாநில கைத்தறி ஆலோசனைக் குழு (State Level Handloom Advisory Committee) திருத்தி அமைக்கப்படும்.

### சாலைகள்

**48.** நமது மாநிலத்தில், சுமார் 3,700 கிலோ மீட்டர் நீளம் உள்ள நெடுஞ்சாலைகள், 48,000 கிலோ மீட்டர் நீளம் உள்ள மாவட்டச் சாலைகள், 1,00,000 கிலோ மீட்டருக்கும் அதிகமான ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் ஆகியவற்றைப் பராமரிக்கும் பணியையும், மேம்படுத்தும் பணியையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்சொன்ன சாலைகளைப் பராமரிப்பதற்காகவும், புதிய சாலைகளை அமைப்பதற்காகவும், வரும் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ. 103 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதில், கிராமப் புறங்களில் புதியதாகச் சாலைகள் அமைப்பதற்காகச்

சுமார் ரூ. 11.70 கோடியும், நகர்ப்புறங்களில் புதியதாகச் சாலைகள் அமைப்பதற்காகச் சுமார் ரூ. 20 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### கல்வி

**49.** இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, ரூபாய் 900 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

வரும் ஆண்டில், ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள ஆரம்பப் பள்ளிகளுக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கு, ரூபாய் 5 கோடி செலவில், சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். ஆதி திராவிடர் வாழும் பகுதிகளில் புதிதாக 50 தொடக்கப் பள்ளிகள் வரும் ஆண்டில் ஏற்படுத்தப்படும்.

**50.** மேல்நிலைக் கல்விக்குரிய தேவைகள் பெருகிக் கொண்டே வருகின்றன. இதனை நிறைவு செய்யும் பொருட்டு, வரும் ஆண்டில் கூடுதலாக 600 இடைநிலை ஆசிரியர் பதவிகள், 50 பி.எட். ஆசிரியர் பதவிகள், மற்றும் 50 தமிழ் ஆசிரியர் பதவிகள் தோற்றுவிக்கப் படும். மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் போதுமான அளவில் இல்லாத ஒரு குறை இருந்து வருகின்றது. வரும் ஆண்டில், வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கம் செய்துள்ள ரூ. 1.50 கோடியைப் பயன்படுத்தி ஹட்கோ நிறுவனத்தின் உதவியுடன் 60 மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும். கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக 14 மாவட்டங்களில் ஆசிரியர் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வரும் ஆண்டில், மீதம் உள்ள 6 மாவட்டங்களிலும், புதிதாக ஆசிரியர் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்படும்.





**51.** புதிய கல்விக் கொள்கை என்கின்ற அடிப்படையில், நவோதயா பள்ளிகள் மூலமாக, இந்தி திணிக்கப்படுவதை இவ்வரசு வன்மையாக எதிர்க்கும். நவோதயா பள்ளிகள் ஏழை மக்களுக்குப் பயன்படுவதற்குப் பதிலாக, வசதி மிக்க மேட்டுக்குடியினர் மேன்மை பெறுவதற்கே பயன்படும் என்று கல்வி வல்லுநர்கள் தெரிவித்துள்ள கருத்தினை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம். நவோதயா பள்ளிகளுக்கு அளிக்கக் கூடிய நிதி ஒதுக்கீட்டினை, கிராமப் புறங்களிலுள்ள ஆரம்பப் பள்ளிகள் வசதி பெறுவதற்கும், சிறப்படைவதற்கும் அளிக்க வேண்டுமென்று வலியுறுத்துவோம்.

**52.** கல்லூரி ஆசிரியர்களுக்கு, பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், பிப்ரவரி மாதத்திலிருந்து சம்பள விகிதங்கள் வழங்கப் பட்டுவருகின்றன. 1-1-86-லிருந்து அவர்களுக்கு வழங்க வேண்டிய சம்பள நிலுவைத் தொகைக்காகவும், வரும் ஆண்டில் சம்பள விகிதத்தால் ஏற்படக்கூடிய கூடுதல் செலவினத்திற்காகவும், மொத்தமாக ரூ. 55 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**53.** கடந்த காலத்தில், பல தனியார் சுயநிதிக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கல்லூரிகளில் போதுமான வசதிகள் இல்லை என்றும், கல்வியின் தரம் மிகவும் சீர்கேடான நிலையில் உள்ளது என்றும், முறைகேடுகள் பெருகிடுவதாகவும் பல புகார்கள் வந்துள்ளன. எனவே, புதிதாகத் தனியார் சுயநிதிக் கல்லூரிகள் துவங்குவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. ஏற்கெனவே

தொடங்கி நடைபெற்றுவருகிற கல்லூரிகள் இயங்குவது குறித்தும் ஆய்வு செய்து, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### தமிழ் வளர்ச்சியும்-பண்பாடும்

**54.** தமிழ்ப் பயிற்றுமொழித் திட்டம், கழக ஆட்சியின்போது இளங்கலை பட்டப் படிப்பளவில் கொண்டு வரப்பட்டது. அது ஊக்குவிக்கப்பட்டு மேலும், முதுகலை, உயர்நிலை, ஆய்வு நிலை வரை செயல்பட வேண்டும். இதற்கு அடித்தளமாக, தொன்மையான தமிழ் மொழி—தற்கால சமூகவியல், அறிவியல் வளர்ச்சி நிலைகளுக்கேற்ப வளம்பெற திட்டமிட்டுச் செயல்படுவோம்.

**55.** தமிழைப் பயில்வதற்கு, உலகத்தின் பல பகுதிகளில் ஆர்வம் இருக்கிறது. இதனை நிறைவு செய்யும் வகையில், தமிழில் பாட நூல்கள், எளிய அகராதிகள், எளிய இலக்கணம் ஆகியவற்றை வல்லுநர் ஒத்துழைப்புடன் அரசு வெளியிடும். அவ்வாறே, உலகப் புகழ் பெற்ற நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து, மலிவு விலையில் வெளியிடப்படும்.

**56.** தமிழ்நாட்டு வரலாறறைத் தமிழுணர்வோடும் ஆய்வுச் சுவடிகளோடும் தயாரிக்கும் முயற்சி, முன்பு இந்த ஆட்சியில் தொடங்கப்பட்டது. தமிழாராய்ச்சி நிறுவனம் இந்தத் தொண்டினை முடிக்கவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**57.** மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் தலைமையில் தொடங்கப்பட்ட 'அகர முதலித்துறை' இரண்டாவது பகுதி அச்சுக்குத் தயாராக உள்ள



நிலையில் கலைக்கப்பட்டுவிட்டது. அதற்குப் புத்துயிர் கொடுத்து, தொடர்ந்து 'அகர முதலி' வெளிவர ஏற்பாடு செய்யப்படும். தலைமைச் செயலக ஆணைகள், ஆங்கிலத்தில் மாத்திரம் வெளியிடப்படுகின்றன. இனி, தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் வெளியிட, மிக விரைவில் நடவடிக்கையெடுக்கப்படும்.

**58.** கடந்த காலத்தில் இந்த அரசு, குமரிமுனையில் வள்ளுவர் சிலை அமைத்திட வகுத்தத் திட்டத்தை, மீண்டும் ஆய்ந்து, விரைவுப் பணி மேற்கொண்டு, வான்புகழ் கொண்ட வள்ளுவருக்குச் சிலை வைக்கும் அரும்பணியை நிறைவேற்றும்.

**59.** சங்க காலப் புலவர்கள் பிறந்த ஊர்களில், அவர்களின் பாடலுடன் கூடிய நினைவுச் சின்னங்கள் அமைக்கும் முயற்சி, கடந்த காலத்தில் இந்த அரசினால் தொடங்கப்பட்டது. அந்த முயற்சி மீண்டும் தொடரப்படும்.

**60.** தமிழ்த் திரைப்படக் கலை வளர்ச்சி கருதி, அதனை ஊக்கப்படுத்த, ஆண்டு தோறும் சிறந்த தமிழ்ப் படங்கள் மூன்றுக்கு வரிசைப்படி முதல், இரண்டு, மூன்று என பரிசுகளும், பரிசுத் தொகைகளும் வழங்கப்படும். அவ்வாறே படங்களில் பங்கேற்ற சிறந்த நடிகர்களுக்கும், தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும், விருதும் பரிசுத் தொகையும் அளிக்கப்படும்.

### மக்கள் நல்வாழ்வு

**61.** மக்கள் நல்வாழ்வு வசதிகள் கிடைக்கப் பெறுவதில் நகர்ப்புறப் பகுதிகளுக்கும், கிராமப்புறப்

பகுதிகளுக்குமிடையே அதிக வேறுபாடு காணப்படுகின்றது. இந்நிலையை நீக்கும் பொருட்டு, முதற் கட்டமாக, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு தொடக்கச் சுகாதார நிலையத்தை ஏற்படுத்தும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1989–90 ஆம் ஆண்டில் கூடுதலாக 164 தொடக்கச் சுகாதார நிலையங்கள் ரூ. 3 கோடி செலவில் ஏற்படுத்தப்படும். வரும் ஆண்டுகளில் படிப்படியாக, கிராமப் பகுதிகளில் வாழும் 20,000 மக்கள் தொகை கொண்ட ஒவ்வோரிடத்திலும் ஒரு தொடக்கச் சுகாதார நிலையம் அமைக்கப்படும்.

**62.** ஏழை நோயாளிகளுக்கு இலவசமாக மருந்துகளை அளிப்பதில், இடர்ப்பாடு ஏதும் ஏற்படாதவாறு, வழிவகை செய்திட, வரவு-செலவுத் திட்டத்தில் கூடுதலாக ரூபாய் 1 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்படும். தொடக்கச் சுகாதார நிலையங்கள் அனைத்திலும், மருத்துவர்களை நியமிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். வரும் ஆண்டில் ரூ. 8 கோடி செலவில், 120 தொடக்கச் சுகாதார நிலையங்களில், மருத்துவர் குடியிருப்புகள இணைந்த கட்டிடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

**63.** மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவமனை நிர்வாகம் இவற்றை ஆய்ந்து, அறிக்கை அளிக்க உயர் நிலைக் குழு ஒன்றை நாம் அமைத்துள்ளோம். இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், கல்லூரி இணைந்த மருத்துவமனைகள், மாவட்ட, வட்ட மருத்துவமனைகளின் செயலாக்கம் சீரமைக்கப்படும்.



### குடிநீர்ப் பிரச்சினை

**64.** மக்களின் அடிப்படைத் தேவைகளில் மிக முக்கியமான ஒன்றாக விளங்கும் குடிநீர்ப் பிரச்சினையை, ஒரு காலக் கட்டம் குறித்துக் கொண்டு அதற்குள் தீர்த்து வைக்க இந்த அரசு உச்சக் கட்ட முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொள்ளும். 1988–89ஆம் ஆண்டு இறுதியில், 12,000 குக்கிராமங்களில் குடிநீர் இல்லை எனக் குமுறும் நிலையுள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது. அவற்றில் முதற் கட்டமாக, வரும் ஆண்டில் 6,000 குக்கிராமங்களுக்காவது குடிநீர் வழங்கவும், சிற்றூர், பேரூர், நகரங்கள், மாநகரங்களில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும் ரூ. 155.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### வீட்டு வசதி

**65.** வரும் ஆண்டில், பல்வேறு திட்டங்களின்கீழ் 19,400 வீடுகள் கட்டிக் கொடுக்கும் ரூ. 110 கோடி செலவிலான ஒரு திட்டத்தைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிறைவேற்றும். மற்றும் ரூ. 2.5 கோடி செலவிலான, 1,000 குடியிருப்புகள் கட்டுவதற்கான ஒரு திட்டத்தைத் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் செயற்படுத்தும். சென்னை மாநகரில் நடைபாதைவாசிகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் ஒரு திட்டத்தையும் குடிசை மாற்று வாரியம் செயற்படுத்தும். மேலும், 63 நகரங்களில் நடந்து வரும் குடிசை மாற்றுப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

**66.** ஒன்பதாவது நிதிக் குழு, கல்கத்தா, பம்பாய் நகர் குடிசை மேம்பாடுத் திட்டத்திற்காக, தலா ரூபாய்

50 கோடி கொடுத்திருந்தும், சென்னை மாநகர் புறக் கணிக்கப்பட்டுள்ளதை எடுத்து கூறி, அத்தொகையை வழங்குமாறு வலியுறுத்தியுள்ளோம்.

*67. தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் ஆதி திராவிடர்களுக்கு ஓலை மற்றும் ஓட்டுவில்லை வீடுகளுக்குப் பதிலாக, 1974-ல் கட்டப்பட்டதுபோல கான்கிரீட் வீடுகள் இலவசமாகக் கட்டிக் கொடுக்கப் படும். வரும் ஆண்டில், 45,000 வீடுகள் கட்டிக் கொடுக்க ரூ. 49 கோடி ஒதுக்கப்படும். இதில் மீனவர்களுக்கான 3,000 வீடுகளும் அடங்கும்.

### சென்னை மாநகர் உள்ளிட்ட நகர்ப்பகுதி மேம்பாடு

68. உலக வங்கி நிதியுதவியுடன், ரூ. 632.55 கோடி அளவில், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், 6 ஆண்டுத் திட்டமாக மேற்கொள்ளப் பட்டுள்ளது. இத் திட்டத்தினால், சென்னை மாநகர் மற்றும் சேலம், தூத்துக்குடி, திருநெல்வேலி, ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருப்பூர் மற்றும் வேலூர் நகரங்களும் அவற்றின் புற நகர்ப் பகுதிகளும் பயனடையும். 1989–90ஆம் ஆண்டில், அடிப்படை வசதிகள் உள்ளதாக மனை மேம்பாடு, குடிசைப் பகுதி மேம்பாடு, சாலை வசதி போன்ற பல்வேறு திட்டப் பணிகளுக்காக ரூ. 111.27 கோடி செலவிடப்படும்.

### சத்துணவுத் திட்டம்

69. சத்துணவுத் திட்டத்துக்கு வரும் ஆண்டில் ரூ. 173.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஏறத்தாழ 85 இலட்சம் சிறார்கள் இதனால்





பயனுறுவர். இத் திட்டத்தில் அவ்வப்போது எழும் முறைகேடுகளையும் குறைபாடுகளையும் களைந்திட, தக்க கண்காணிப்புகள் ஏற்படுத்தப்படும். ஆங்காங்கு இத் திட்டம் ஒழுங்குற நடைபெறுகிறதா என்பதைக் கவனித்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவிக்கும் பொறுப்பை, உள்ளாட்சி மன்றங்கள் ஏற்றுக்கொள்ள வழிவகை செய்யப்படும். இத் திட்டத்தை ஒருங்கிணைந்த திட்டமாகவும், வீண் விரயமில்லாத சிக்கனத் திட்டமாகவும், உண்மையிலேயே சிறார்களுக்குச் சத்து நல்கிடும் திட்டமாகவும் நடத்திட, பொதுமக்களின் ஒத்துழைப்பும் நிறையத் தேவை என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

### ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

70. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனில் இவ்வரசு தனிக் கவனம் செலுத்தும். இதற்கென நடப்பாண்டில் ரூ. 16.54 கோடி என்ற திட்ட மதிப்பீடு 1989–90-ல் ரூ. 31.84 கோடி என்று உயர்த்தப்பட்டுள்ளது. 1989–90ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு மேலும் 25 மாணவர் இல்லங்கள் புதிதாகத் திறக்கப்படும். தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட தற்கிணங்க, ஆதி திராவிட, பழங்குடியின மாணவர்களுக்குப் பட்டப் படிப்புவரை, இலவசக் கல்வி அளிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆதி திராவிடர்கள், வீடுகள் கட்டிக் கொள்வதற்காக இலவசமாக வீட்டு மனைகள் வழங்கும் திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் ஒதுக்கப் பட்ட ரூ. 115 இலட்சத்திற்கும் மாறாக, 1989–90ஆம்

ஆண்டில் ரூ. 2.35 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கப்படும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வேலை வாய்ப்புக்கான பயிற்சித் திட்டங்களுக்கும், வேலை வாய்ப்பு ஏற்படுத்துவதற்குத் தேவையான மானியத் தொகை வழங்குவதற்கும், சிறு தொழில்கள் தொடங்குவதற்குத் தேவையான நிதி உதவி அளிப்பதற்கும், ரூ. 20 கோடியில் ஒரு சிறப்புத் திட்டம் செயற்படுத்தப்படும்.

### பிற்படுத்தப்பட்டோர் நலன்

**71.** இவ்வரசு எப்போதுமே பிற்படுத்தப்பட்ட இன மக்களின் முன்னேற்றத்தில், குறிப்பாகக் கல்வி, வேலைவாய்ப்புத் துறைகளில், தனி அக்கறை செலுத்தி வந்துள்ளது. வரும் ஆண்டில், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு, மேலும் 25 மாணவர் இல்லங்கள் திறக்கப்படும். பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், கல்விச் சலுகை பெறுவதற்குப் பெற்றோர்களின் ஆண்டு வருமான வரம்பு, ரூ. 5,000 என்பதை ரூ.12,000ஆக உயர்த்தி நிர்ணயம் செய்ய, ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

### மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை

**72.** வன்னியப் பெருமக்கள் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் கோரிக்கைகள், பல ஆண்டுகளாக நமது சமுதாயத்தில் முக்கியமானதொரு பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. இதற்கு நிரந்தரமான தீர்வு காணும் வகையில் நாம் முடிவுகளை எடுத்து அண்மையில் வெளியிட்டுள்ளோம். அதன்படி ஆதி திராவிடர், பழங்குடி மக்கள் ஆகியோருக்கு இருக்கும் 18 சதவீத ஒதுக்கீட்டை மாற்றாமலும், எல்லா வகுப்பினரும் போட்டியிட்டுப் பயனடையக் கூடிய 32 சதவீதப் பொதுத் தொகுப்பை (Open Competition) மாற்றாமலும், ஏனைய 50 சதவீதத்தைப் பிற்படுத்தப்பட்டோருக்கு 30 சதவீதமாகவும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர்களுக்கு 20 சதவீதமாகவும் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவுகளுக்குப் பரவலாக, நல்லெண்ணம் கொண்ட எல்லாத் தரப்பினரும் நல்லாதரவு தெரிவித்துள்ளனர்.



**73.** மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர், ஆகியோருக்குக் கொடுக்கப்பட்ட ஒதுக்கீட்டை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, கல்வியிலும், சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் முன்னேற வேண்டும் என்பதே இவ்வரசின் நோக்கம். இதற்காக இவ்வகுப்பினருக்கு உதவ, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை என்ற தனி இலாகாவை உடனடியாக அமைத்துள்ளோம். இந்த இலாகா முனைந்து செயல்பட்டு இவ்வகுப்பினர் எல்லாத் துறைகளிலும் பயன்பெறுமாறு திட்டங்களைத் தீட்டும். குறிப்பாக, அவர்கள் வாழும் இடங்களில், எழுத்தறிவு பெறுவதற்கான வாய்ப்புகளையும், கல்வி வசதிகளையும், கணிசமாக மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்.

### வேலை வாய்ப்பு

**74.** கிராமப் பகுதிகளிலும் நகரப் பகுதிகளிலும் பரவலாக வேலை வாய்ப்பினைப் பெருக்கிட, பல துறைகளில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

மத்திய-மாநில அரசுகள் பங்கேற்று நடத்தும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் (N R E P), ஊரக நிலமற்ற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம் (R L E G P), என்ற இரண்டு திட்டங்களும் அண்மையில் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. திருத்தியமைக்கப்பட்ட இத் திட்டத்திற்கு, ரூ. 109 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 600 இலட்சம் உழைப்பு நாள் அளவிற்கு வேலை வாய்ப்புக் கிட்டும். அதாவது சுமார் 2 இலட்சம் பேருக்கு, ஓராண்டு அளவிற்கு வேலை வாய்ப்புக் கிட்டும்.

**75.** மற்றுமொரு, மத்திய-மாநில அரசுகள் பங்கேற்று நடத்தும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP), வரும் ஆண்டில் ரூபாய் 49 கோடி அளவில் செயல்படுத்தப்படும். இத் திட்டத்தின் கீழ் விவசாயம், பால் உற்பத்தி, சிறு தொழில்கள், சிறு வியாபாரம், இவை போன்ற வகைகளில் பெருமளவில் சுய வேலை வாய்ப்புகள் கிட்டும். வரும் ஆண்டில், இத் திட்டத்தில் ஏறக்குறைய 2 இலட்சம் பேர் பயன்பெறுவர்.

**76.** மத்திய அரசின் உதவியுடன் மாநில அரசுப் பொறுப்பேற்று, நகரப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்குச் சுய வேலை வாய்ப்பளிக்க, 44,000 பேருக்குப் பயனளிக்கும் வகையில், மற்றுமொரு சிறப்புத் திட்டம் (Self Employment Programme for Urban Poor) செயல்படுத்தப்படும்.

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு உதவும் மற்றுமொரு திட்டத்தின் கீழ் (Self Employment for Educated Un-employed Youth) சொந்தமாகத் தொழில் துவங்க சுமார் 18,000 இளைஞர்களுக்கு வரும் ஆண்டில் உதவி செய்யப்படும்.





**77.** இஃதன்னியில் பத்தாம் வகுப்பு வரையும், அதற்கு மேலும் படித்துவிட்டு வேலை வாய்ப்புக் கிட்டாமல் இருக்கும் இளைஞர்களுக்கு, மாதம் ரூ. 200 மதிப்பூதியத்தில், கிராமப்புறங்களில் முதியோர் கல்வி, தொடர் கல்வி, குடிநீர் பராமரிப்பு, துப்புரவுக் கண்காணிப்பு, படிப்பகங்கள் மூலம் உலக அறிவு பரப்புதல், கிராம நலத் திட்டங்களை ஊக்கப்படுத்துதல், கிராமப் பொதுச் சொத்துக்களைப் பேணிக் காத்திடத் துணை புரிதல், சிறு சேமிப்புத் திட்டத்திற்கு உதவுதல் போன்ற பணிகளை வழங்கி, ஒரு ஊராட்சி ஒன்றியத்துக்கு 60 பேருக்குக் குறையாமல், ஊராட்சிப் பொறுப்பில், மொத்தம் 25,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் வரும் ஆண்டில் தொடங்கப்படும்.

**78.** இதேபோல் நகர்ப் புறங்களில் படித்துவிட்டு வேலை வாய்ப்பில்லாத இளைஞர்களுக்கும், ஒரு விரிவான திட்டம் விரைவில் ஆராய்ந்து அறிவிக்கப்படும்.

### மகளிர் நலன்

**79.** மகளிர் முன்னேற்றமின்றி, சமுதாய மறு மலர்ச்சி இல்லை. சமூகப் பொருளாதாரத் துறைகளில் அவர்களுக்கு நல்வாய்ப்பும், உரிமையும் அளிப்பதொன்றே அவர்களின் விழிப்புணர்வுக்கும், தெளிவுற்ற சிந்தனைக்கும், அடிமை நிலையிலிருந்து விடுதலை பெறுவதற்கும் உரிய வழியாகும். இதனை மனத்திற்கொண்டு, இந்த அரசு பல திட்டங்களை அறிவித்துள்ளது. பெண்ணினத்தின் பண்பார்ந்த மேன்மைக்காகப் பெரிதும் பாடுபடும் இந்த அரசு, தந்தை பெரியார் அவர்கள் முன்னின்று நடத்திய 1929ஆம் ஆண்டு, செங்கற்பட்டு சுயமரியாதை முதல்

மாகாண மாநாட்டில், பெண்களுக்கும், ஆண்களுக்குச் சமமான வேலை வாய்ப்புகளும், சொத்துரிமையும் வழங்க வேண்டுமென்ற கருத்தை நினைவிற்கொண்டு அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களில் எழும், வேலை வாய்ப்புகளில், 30 சதவீதம் மகளிருக்கென ஒதுக்கப் படுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளிலும், முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புகளில் எழும் அனைத்து ஆசிரியர் பணி இடங்களிலும், மகளிரே நியமிக்கப்படுவர். வேலை வாய்ப்பு, இட ஒதுக்கீடு மட்டும் போதாது. அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளக் கல்வி வாய்ப்பு தேவை. எனவே, தேர்தல் வாக்குறுதிக்கேற்ப, ஏழை நடுத்தர வர்கக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு, இளங்கலைப் பட்டப் படிப்பு வரையிலும் இலவசக் கல்வி, வரும் ஆண்டு முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

**80.** மகளிர் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் தருகிற மற்றுமொரு ஏற்பாடாக, வறுமையில் உழலும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், எட்டாம் வகுப்பும் அல்லது அதற்கு மேலும் படித்துத் தேறியிருந்தால், அவர்களின் திருமணச் செலவுக்காக ரூ. 5,000 உதவித் தொகை வழங்கப்படும். இத் திட்டத்திற்கு நிதி நிலை அறிக்கையில் ரூ. 6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**81.** நகர்ப் புறத்திலும், கிராமப் புறத்திலும் வறுமையில் வாடும் ஏழை எளிய பெண்கள், கர்ப்பவதியாகும் பொழுதும், குழந்தை பெற்ற பின்னரும், உழைக்க முடியாமல், ஊதியம் ஈட்ட முடியாமல் இருப்பதால், அவர்களின் குடும்பங்கள் மேலும்



ஏழ்மையில் தவிக்கும் நிலையில் இருந்து வருகின்றன. தேர்தல் அறிக்கையிலே கூறியுள்ளபடி, இதை நிவர்த்தி செய்வுதற்காக, அவர்களுக்குக் கர்ப்பவதியான 8-வது மாதத்திலிருந்து குழந்தை பெறும் வரையிலும், குழந்தை பிறந்த பின்னர் 2 மாத காலத்திற்கும், மாதம் ரூ. 50 உதவித் தொகை மூலம் மொத்தம் ரூபாய் 200 வழங்கப்படும். முதல் இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே இவ்வுதவி அளிக்கப்படும். இத் திட்டத்திற்காக நிதிநிலை அறிக்கையிலே, ரூ. 4 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**82.** வெகு விரைவில், அனைத்து நாடுகள் விவசாய வளர்ச்சி நிதி உதவியுடன், பெரியதொரு திட்டம் செயலாக்கப்பட உள்ளது. சேலம், தருமபுரி மற்றும் தென்னார்க்காடு மாவட்டங்களில் ரூ. 45.80 கோடி அளவில், சுமார் 40,000 பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கக் கூடிய 7 ஆண்டு காலத் திட்டமாக இது நிறைவேற்றப்படும்.

**83.** பரம்பரைச் சொத்து தொடர்பாக, இந்துச் சட்டத்தின்கீழ் ஆண் வாரிசுக்கு உள்ளது போன்று பெண் வாரிசுக்கும் சம உரிமை வழங்க வகைசெய்து, 1956ஆம் ஆண்டு இந்து வழியுரிமைச் சட்டத்தைத் திருத்த முடிவு செய்துள்ளோம். அதற்கான சட்ட முன்வடிவு இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

### தேர்தல் வாக்குறுதிகள்

**84.** எந்தத் தேர்தல் அறிக்கைக்கு மக்கள் ஒப்புதல் தந்து, அவற்றை நிறைவேற்றுமாறு பணித்து, எங்களை இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்களோ, அந்தத்

தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள சில உறுதி மொழிகள் ஆளுநர் உரையிலும், அதன் பின்னரும் நிறைவேற்றப்பட்டதை இந்த நிதிநிலை அறிக்கையின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளேன். அதனைத் தொடர்ந்து இவ்வுரையில் குறிப்பிடப்பட்டுள்ள விவசாயிகள் நிலை, குடிநீர் வழங்கல், ஆதி திராவிடர் வீட்டு வசதி, மீனவர் வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி, மகளிர் நலன், வேலை வாய்ப்பு இவைகளுக்கான நிதி ஒதுக்கீடு, தேர்தல் அறிக்கையின் அடிப்படையிலேயே அறிவிக்கப்பட்டுள்ளது. இவை தவிர, வறுமையில் வாடும் மக்கள் நலனுக்காக, குறிப்பாக, பல திட்டங்களை நிறைவேற்றுவோம் என்று உறுதி அளித்திருந்தோம். இவ்வாறு தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள, சிறப்புத் திட்டங்கள் அனைத்தும் வரும் ஆண்டிலேயே நிறைவேற்றப்படும் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

* தமிழ்ப் புத்தாண்டு - பொங்கல் - தீபாவளி ஆகிய நாட்களில் ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாக 5 கிலோ அரிசி வழங்கப்படும். புத்தாண்டு நாளான ஏப்ரல் 14, 1989-ல் இத்திட்டம் தொடங்கி வைக்கப்படும். ரூபாய் 14 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமுல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தினால் 50 இலட்சம் குடும்பங்கள் பயன் பெறுவார்கள்.

* ரூபாய் 27 கோடி செலவில், ஏறக்குறைய 50 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயனடைய, பொங்கல் நாளன்று ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாக ஒரு ஜோடி கைத்தறி வேட்டி, சேலை வழங்கப்படும்.

161508



* தற்போது முதியோர் உதவித் தொகைக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு விதிக்கப்பட்டதின் காரணமாக, உதவித் தொகை பெறுவோர்கள் நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதைத் தவிர்த்து, உச்ச வரம்பின்றி, இத்தகைய உதவித் தொகை பெறத் தகுதியுள்ள அனைவருக்கும், தற்போது வழங்கப்படுகிற தொகை மாதத்திற்கு ரூபாய் 35-லிருந்து, ரூபாய் 50 ஆக உயர்த்தப்படும். இந்தப் பலன் கிட்டாமல் காத்திருக்கும் 30,000 பேரும் — மொத்தத்தில் 4 இலட்சம் பேரும், இந்த அறிவிப்பினால் பயன் பெறுவார்கள். இதனால் தகுதியுடைய அனைவரும் உதவித் தொகை பெறுவதோடு, இந்தப் பலன் கிட்டாமல் ஆயிரக்கணக்கானோர் காத்திருக்கும் நிலை இனி ஏற்படாது என்றும் உறுதி கூறுகிறேன். இஃதே போல், எண்ணிக்கை உச்ச வரம்பு நீக்கப்பட்டு — உடல் ஊனமுற்றோர், கைம்பெண்கள், ஆதரவற்ற மகளிர் ஆகியோர் இனிமேல் ரூ. 50 உதவித் தொகை பெறுவர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கென ரூபாய் 21 கோடி, வரும் ஆண்டில் செலவிடப்படும்.

* குடும்பத் தலைவரை இழக்க நேரிடும் ஏழைக் குடும்பங்கள், திடீரென வருமான இழப்புக்கு ஆளாகி அவதியுறுகின்றன. அத்தகைய குடும்பங்கள் மறுவாழ்வு பெற உதவி செய்யும் வகையில், அவர்களுக்கு அரசின் மூலம் ரூபாய் 2,000 மானியமாக அளிக்கப்படும். இதற்காக, ரூபாய் 5 கோடி அளவுக்கு நிதி ஒதுக்கப்படும்.

* கடந்த காலத்தில், விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு ரூ. 10,000 நிதி உதவி அளிக்கப்பட்டது

Y211,31 N89
189-5-1

என்றாலுங்கூட, அந்த நிதி உதவி, குறிப்பிட்ட சில பிரிவினருக்கு, அதுவும் ரூபாய் 3,500 ஆண்டு வருமானத்திற்குக்கீழே உள்ளவர்களுக்குத்தான் தரப்பட்டு வந்தது. இப்போது அதனை மாற்றி—அந்த குறிப்பிட்ட சில பிரிவினர்களுக்கு மாத்திரம் என்றில்லாமல்—வருமான உச்சவரம்பு என்ற அளவுகோலையும் நீக்கிவிட்டு, அந்தக் குறிப்பிட்ட பிரிவினர்களோடு மேலும், லாரி, ஆட்டோ ரிக்ஷா, தனியார் கார், டாக்சி, பேருந்து ஓட்டுநர்கள், எல்லாக் கட்டிட, கட்டுமானத் தொழிலாளர்களுக்கும்—அவர்கள் விபத்தினால் இறக்க நேரிட்டால், அவர்களின் குடும்பத்திற்கு ரூபாய் 10,000 வழங்கப்படும். அவர்கள் விபத்திலே ஊனமுறுவார்களேயானால், நிலைக்கு ஏற்றவாறு நிதி உதவி வழங்கப்படும்.

* தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டபடி ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கும் சீர் மரபினருக்கும் பி.ஏ., பி.எஸ்ஸி., பி. காம். ஆகிய கல்லூரி இளங்கலை பட்டப்படிப்பு இலவசமாக்கப்படும். இதற்கென ரூபாய் 2.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

* தேர்தல் அறிக்கையில் அளித்த உறுதிக்கேற்ப, அனைத்து சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும் மோட்டார் பொருத்திக் கொடுக்க உதவி செய்யப்படும். மேலும் மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஆகியவற்றின் ஓட்டுநர்கள், சொந்தத்தில் புதிய வாகனங்கள் வாங்க விரும்பினால் அதன் பொருட்டு வாங்க உதவி செய்யப்படும். இவ்விரண்டுத் திட்டங்களுக்கு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலமாகக் குறைந்த வட்டியில் கடன் கொடுக்க வழிவகைகள் செய்யப்படும்.



**85.** கடந்த காலத்தில் அறிவிக்கப்பட்ட, சமுகப் பாதுகாப்பு நல்வாழ்வுத் திட்டங்கள், பெருமளவில் மக்களுக்குச் சென்று சேரவில்லை. பயன் கிட்டுவதிலும் பல முறைகேடுகளும், தாமதங்களும் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையைத் தவிர்க்க, சமுகப் பாதுகாப்பு நல்வாழ்வுத் திட்டங்களைப் பற்றிய முழு விவரங்களையும் மக்கள் பரவலாகத் தெரிந்து கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வோம். அதே நேரத்தில் உதவி பெறத் தகுதியுடைய ஒவ்வொருவருக்கும் உதவித் தொகை கிடைப்பதில் தடங்கலோ, தாமதமோ ஏற்படாதவாறு இத்தகைய திட்டங்களைச் சீராகச் செயல்படுத்துவோம்.

## வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்

**86.** 1988-89ஆம் ஆண்டுக்கான, அதாவது நடப்பு ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கும் போது ஆண்டு இறுதியில் ரூ. 327.36 கோடி அளவுக்கு பற்றாக்குறை இருக்குமென்று மதிப்பிடப்பட்டது. தற்போது திருத்திய மதிப்பீடுகளின் அடிப்படையில் வருவாய்க் கணக்கில் ரூ. 3,341.48 கோடி வருவாயும், ரூ. 3,650.46 கோடி செலவு என்றும் மதிப்பிடப்பட்டு, பற்றாக்குறை ரூ. 308.98 கோடியாக உள்ளது. இதரக் கணக்குகளின் மதிப்பீட்டையும் சேர்த்து, நடப்பு ஆண்டின் மொத்த இறுதிப் பற்றாக் குறை ரூ. 175.40 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. முக்கியமாக, திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையானது ரூ. 1,457 கோடியிலிருந்து ரூ. 1,202 கோடி அளவுக்கு குறைக்கப்பட்டத்தினாலேயே திருத்த மதிப்பீட்டில் இறுதிப் பற்றாக்குறையின் அளவு குறைந்துள்ளது. கடந்த ஆட்சி வருவாய் இனங்களை அதிகரிக்க முற்படாததாலும், திட்டத்தைச் சாராத புதிய செலவினங்களை ஏற்றுக்கொண்டதாலும், இந்த நிலைமை தவிர்க்க முடியாததாயிற்று என்று ஏற்கெனவே

விளக்கியுள்ளேன். நடப்பு ஆண்டில் ஏற்படும் இந்தப் பற்றாக்குறையான ரூ. 175.40 கோடியைச் சமாளிக்க குடியரசுத் தலைவர் ஆட்சியும் அதன் பின்னர் இந்த அரசும் பல முறைகளில் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

87. 1989-90ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் ரூ. 3,845.74 கோடி வருவாயும், ரூ. 4,134.23 கோடி செலவு என்றும் மதிப்பிடப்பட்டு, பற்றாக்குறை ரூ. 288.49 கோடியாக அமைகிறது. இதரக் கணக்குகளின் மதிப்பீட்டையும் சேர்த்து 1989-90ஆம் ஆண்டிற்கு மட்டுமே, ரூ. 149.67 கோடி அளவுக்குத் துண்டு விழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது இவ்வாண்டின் இறுதியில் ஏற்பட்டுள்ள ரூ. 175.40 கோடி பற்றாக்குறையுடன் இந்தத் தொகையும் சேர்த்து 1989-90 இறுதியில் மொத்தமாக ரூ. 325.07 கோடி அளவுக்குப் பற்றாக்குறை ஏற்படுமென்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

88. இந்தப் பற்றாக்குறையைச் சரிகட்டும் அதே நேரத்தில், நலிந்த பிரிவினரின் வாழ்க்கையில் முன்னேற்றம் காணும் வகையில், அறிவித்துள்ள பல்வேறு நலத் திட்டங்களுக்கு, நிதி ஆதாரங்களைத் திரட்டும் வகையில் ஒரு சில கூடுதல் நிதி திரட்டும் முயற்சிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். நாம் அறிவிக்கவுள்ள வரி விதிப்பு நேர்வுகள், ஏழைகளின் தோள்களில் சுமையை ஏற்றக்கூடாது என்ற வகையில் அமைந்துள்ளன.

89. முதலாவதாக, விற்பனை வரி விதிப்பதில் சில மாறுதல்களை அறிவிக்க விரும்புகிறேன். பல முனை வரி விதிப்பதிலிருந்து ஒரு முனை வரிவிதிப்புக்கு





மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை வணிக சமுதாயத்தினரிடமிருந்து நீண்ட நாட்களாக வந்துள்ளது. இந்த நிலைமையை ஆராய்ந்துள்ளோம். 1959-ல் தமிழ்நாடு பொது வணிக வரிச் சட்டம் அமுலுக்கு வந்தபோது, இதன் கீழ் 63 பொருட்கள் ஒரு முனை வரி விதிப்புக்கு உள்ளாயின. 1959-க்கும் 1973-க்கும் இடையே 13 பொருட்கள் இத்தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ளன. 1974ஆம் ஆண்டில் தான் 59 பொருட்கள் ஒரு முனை வரி விதிப்பதின்கீழ் கொண்டு வரப்பட்டன. பிறகு 38 பொருட்கள் பல முனை வரி விதிப்பிலிருந்து ஒரு முனை வரி விதிப்பிற்கு மாற்றப்பட்டன. தற்போது பல முனை வரி விதிப்புக்குள்ளாகும் 9 பொருட்களை ரூ. 50 இலட்சம் இழப்பைப் பொருட்படுத்தாமல் ஒரு முனை வரி விதிப்பின் கீழ்க் கொண்டுவர தீர்மானிக்கப் பட்டுள்ளது. இதன் கீழ் அமையும் பொருட்கள் மற்றும் விதிக்கப்படும் வரி அலகுகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :

| வரிசை எண். | பெயர். | வரி வீதம். |
|---|---|---|
| 1 | ஆயத்த (ரெடிமேட்) உடைகள் .. | 5% |
| 2 | மிருகங்களால் இழுக்கப்படும் வண்டிகளின் சக்கர ட்யூப்கள் .. .. | 8% |
| 3 | ஸ்கால்ப் நரம்பு, இரத்த இயக்கத்திற்கான மற்றும் இரத்தம் கொடுப்பதற்கான கருவிகள், மேலும் திரவம் செலுத்தும் கருவிகளும், கன அளவைக் கருவிகளும் .. .. | 8% |
| 4 | பற்றவைக்கும் கோல்கள் .. .. | 10% |
| 5 | பீடி இலைகள் .. .. .. | 5% |

| வரிசை எண். | பெயர். | வரி வீதம். |
|---|---|---|
| 6 | இரப்பர் கலந்த கயிறுவகைப் பொருட்கள் .. .. .. | 5% |
| 7 | தலைக் கவசங்கள் (ஹெல்மேட்) .. | 8% |
| 8 | இலகுவான கூரைத் தகடுகள் (உலோக மல்லாதவை) .. .. .. | 8% |
| 9 | கடப்பா, சாகாபாத் மற்றும் கிரானைட் கற்பலகைகள் .. .. .. | 8% |

**90.** நமது நிதிநிலை தற்போதுள்ள கடினமான நிலையில், பெருமளவில் வரி விலக்குதல் மூலம் வருவாய் இழக்கும் நிலையில் இல்லை என்றாலும், தேவைப்படுகின்ற சில வரிச் சலுகைகளை அளிக்க முடிவு செய்துள்ளோம்.

**91.** விவசாயத்திற்கு உபயோகிக்கப்படும் தொழிற் சாதனங்கள் மீதான வரிகளை நீக்குவோம் என்று தேர்தல் அறிக்கையில் உறுதியளித்துள்ளபடி, இத் தொழிற்சாதனங்களில் மிகவும் முக்கியமான விவசாயத்திற்காக தண்ணீர் இறைக்கும் 3 மற்றும் 5 குதிரை வேகம் சக்தி கொண்ட பம்பு செட்டுகள் மீதான 8 சதவிகித விற்பனை வரி அறவே நீக்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 4 கோடி வருமான இழப்பு ஏற்படும்.

**92.** கட்டுமானப் பணிகளுக்காகத் தேவைப்படும் மணல் மீது தற்போது 5 சதவிகித விற்பனை வரி விதிக்கப்படுகின்றது. இதனால் மணல் எடுத்துச் செல்வதில் ஈடுபட்டுள்ளவர்கள் தொல்லைக்கு ஆளாக்கப் படுகிறார்கள் என்பதால் இந்த வரி விதிப்பை நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.



**93.** உடல் ஊனமுற்றவர்களால் பெருமளவில் உபயோகப்படுத்தப்படும் தாங்கிகள் (crutches) சக்கர நாற்காலிகள், மோட்டார் பொருத்திய மற்றும் ஏனைய 3 சக்கர வண்டிகள், பலவித கோல்கள் போன்ற சாதனங்கள் அனைத்தின் மீதான வரி விதிப்புகள் மனித நேய அடிப்படையில் நீக்கப்படும்.

**94.** மாணவர்களால் பெரிதும் பயன்படுத்தப்படும் பேனாக்கள், உருள் முனைப் பேனாக்கள், பென்சில்கள், ரீபில்கள், எழுத்தழிப்பான், எழுத்து முனை கூறாக்கும் கருவிகள், கரும் பலகைகள், கரும் பலகைத் துடைப் பான்கள், ரப்பர் விளையாட்டுப் பந்துகள், அறுவைக் கருவிகள் அடங்கிய பெட்டிகள் போன்ற பல கல்வி சம்பந்தப்பட்ட பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். அனைத்து மக்களாலும் பெருவாரியாகப் பயன்படுத்தப்படும் சீப்புகளின் மீதான வரியும் விலக்கப்படும்.

**95.** குடியரசுத் தலைவர் ஆட்சியில் தொழில் துறையினருக்குப் பல சலுகைகள் அறிவிக்கப்பட்டன. இதன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 25 கோடி அளவில் வருவாய் இழப்பு ஏற்படும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. இந்தச் சலுகைகள் தொடர்ந்து செயல் படுத்தப்படும். அறிவிக்கப்பட்ட சில சலுகைகளைச் செயலாக்குவதற்காக 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வணிக வரிச் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும். இந்தத் திருத்தங்கள் தற்போதைய கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

**96.** அடுத்து தற்போது வரி விதிப்பு விகிதங்களை ஓரளவிற்கு உயர்த்தி, அதன் மூலம் நிதி ஆதாரங் களைப் பெருக்கும் முயற்சிகளைப் பற்றி அறிவிக்க விழைகிறேன்.

பெட்ரோல் மீது அண்டை மாநிலங்களான ஆந்திரா மற்றும் கர்நாடகாவில் முறையே 18 மற்றும் 20 சதவிகிதமும், விற்பனை வரியாக இருக்க, நம் மாநிலத்தில் வரி விதிப்பு 14 சதவிகிதமாக உள்ளது. இது 18 சதவிகிதமாக உயர்த்தப்படும். வான ஊர்திகள் பயன்படுத்தும் எரிபொருள் மீதான தற்போதைய 14 சதவிகித விற்பனை வரி 20 சதவிகிதமாக உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**97.** தொழிற்சாலைக்கான இயந்திரங்களின் (Industrial Machinery) மீதான வரி விதிப்பு 8 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாக உயர்த்தப்படும். ஆயினும் நெசவுத் தொழிலில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் மற்றும் உதிரி பாகங்களுக்கு ஏற்கெனவே அறிவிக்கப் பட்ட சலுகைகள் தொடர்ந்து நீடிக்கப்படும். வரி விதிப்பு உயர்வுக்குப் பின்னும் தொழிற்சாலை களுக்கான இயந்திரங்கள் மீதுள்ள வரி விகிதங்கள் ஏனைய மாநிலங்களைக் காட்டிலும் குறைவாகவே இருக்கும்.

**98.** கையினால் தயாரிக்கப்படும் சோப்புகளின் உற்பத்திக்கும், விற்பனைக்கும் உதவுமாறு அவைகள் மீதான வரி விதிப்பில் மாற்றம் எதுவும் செய்யாமல் இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்படும் சோப்புகள் மீதான வரி விதிப்பு தற்போதுள்ள 6 சதவிகிதத் திலிருந்து 8 சதவிகிதமாக உயர்த்தப்படும்.

**99.** வசதி படைத்தவர்கள் ஆடம்பர ஓட்டல்களுக்கும் மற்றும் உணவு விடுதிகளுக்கும் செல்லும்போது ஏழை எளியோர்களுக்கானத் திட்டங்களைத் தீட்டும் அரசுக்குச் சற்றேனும் உதவ வேண்டும் என்று எதிர்பார்த்தால் அது தவறாகாது. ஆகவே,





ஆண்டொன்றுக்கு ரூபாய் 10 இலட்சம் மற்றும் அதற்கும் மேலாக வியாபாரம் செய்யக்கூடிய ஓட்டல்கள் மற்றும் உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுப் பண்டங்கள் மீதும், பானங்கள் மீதும் 5 சதவிகித வரி விதிக்க முடிவு செய்துள்ளோம்.

**100.** தற்போதுள்ள விற்பனை வரியின் மீது விதிக்கப் படும் மிகை வரி மற்றும் கூடுதல் மிகை வரி இவற்றைச் சீராக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மிகை வரிகள் ஒருமுகமாக்கப்பட்டு எல்லா மாநகராட்சிகள் மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகளில் 10 சதவிகிதம் என்றும், மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் 8 சதவிகிதம் என்றும் விதிக்கப்படும். வசூல் செலவு போக மீதமுள்ள தொகை முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளுக்கே வழங்கப்படும்.

**101.** கூடுதல் விற்பனை வரியானது, வரி விதிப்புக்குள்ளாக்கப்படும் விற்பனை அளவு, ரூபாய் 10 இலட்சத்திலிருந்து 40 இலட்சம் வரைக்கும் 1.25 சதவிகிதம் என்றும், வரி விதிப்புக்குள்ளாக்கப்படும் விற்பனையின் அளவு ரூ. 40 இலட்சமும் அதற்கும் மேலாக இருந்தால் 1.50 சதவிகிதம் என்றும் இன்றைய நிலையில் விதிக்கப்பட்டு வருகிறது. இனி ரூபாய் 1 கோடி மற்றும் அதற்கும் மேலுள்ள வரி விதிப்புக் குள்ளாக்கப்படும் விற்பனை அளவின் மீதுள்ள கூடுதல் வரி, 2 சதவிகிதமாக உயர்த்தப்படும். ரூபாய் 10 இலட்சத்திலிருந்து 1 கோடி ரூபாய் அளவில் உள்ள விற்பனை அளவுகளின் மீதுள்ள கூடுதல் வரி விகிதங்கள் தற்போதுள்ள நிலைகளிலேயே இருக்கும். ஒரு சில பெரிய தொழில் நிறுவனங்கள் மட்டுமே இந்த புதிய வரி விகிதங்களின்கீழ் கொண்டு வரப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

**102.** இவ்வாறு விற்பனை வரி சம்பந்தப்பட்ட கூடுதல் நிதி ஆதாரங்கள், வரும் ஆண்டில் ரூபாய் 30 கோடி அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**103.** வணிகர்களின் நலனைக் கட்டிக் காக்கவும், நலிவுற்ற வணிகர்களின் புனர் வாழ்வுக்கு உதவவும், வணிகர் நல அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவோம் என்று 1975-ல் அறிவித்து இருந்தோம். ஆனால் அது நடந்தேறவில்லை. இந்த உறுதியை மறக்காமல் அத்தகைய ஒரு அமைப்பு வரும் ஆண்டில் ஏற்படுத்தப்படும். இதற்காக விற்பனை வரி வருவாயில், ரூபாய் 2 கோடியை அரசு ஒதுக்கும். வணிகர்களும் தங்களது பங்காக இதற்கு ஒப்பான தொகையை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த அமைப்பின் நிர்வாகத்தில் வணிகர்கள் பிரதிநிதிகளை ஈடுபடுத்தி அவர்களுடைய தேவைகளுக்கு ஏற்ப, வணிக சமுதாயத்திற்கு பயன் தரக்கூடியத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

**104.** கேளிக்கை வரியின் வாயிலாக அரசுக்கு ஆண்டு தோறும் சுமார் 60 கோடி ரூபாய் கிடைக்கின்றது. இந்த வரி முறைப்படுத்தப்பட வேண்டும் என்று படத் தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும், திரை அரங்கு உரிமையாளர்களும் முன்வைத்துள்ள கோரிக்கைகளைப் பற்றி விவாதிக்கவும் இந்த மூன்று துறையினரிடமும் அரசின் சார்பில் கலந்து பேசி முடிவு எடுக்கப்படும்.

**105.** மோட்டார் வாகனங்கள் பிற மாநிலங்களில் வாங்கப்பட்டு நமது மாநிலத்திற்குள் கொண்டுவரப்படுவதால் நமக்கு நியாயமாகச் சேர வேண்டிய விற்பனை வரி கிட்டாமல் போய்விடுகின்றது; இதனைத் தடுக்க, பிற மாநிலங்களில் வாங்கப்பட்டு தமிழ் நாட்டிற்குள் சொந்த உபயோகத்திற்காகவோ அல்லது விற்பனைக்காகவோ கொண்டு வரப்பட்டு மோட்டார் வாகனச் சட்டப்படி நமது மாநிலத்தில் பதிவு செய்யப்படும் மோட்டார் வாகனங்கள் மீது, நுழைவு வரி விதிக்கப் புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வருவோம். மோட்டார் வாகனம், எந்த மாநிலத்திலிருந்து கொண்டு வரப்படுகிறதோ, அம் மாநிலத்தின் வரி விகிதம், தற்போது நம் மாநிலத்தில் உள்ள விற்பனை வரி விகிதத்தை விடக் குறைவாக இருக்குமேயானால் அந்த வித்தியாசத்தின் அளவிற்கு நுழைவு வரி விகிதம் விதிக்கப்படும்.





**106.** ஸ்கூட்டர், மொபட், மோட்டார் சைக்கிள் போன்ற இரண்டு சக்கர வண்டிகள் மிகப்பெரும் எண்ணிக்கையில் ஆண்டிற்காண்டு உயர்ந்துக்கொண்டே போகும் காரணத்தினால், மோட்டார் வாகன வரி சட்டத்தின்கீழ் இவற்றின் மீது விதிக்கப்படும் வரியை, வசூலிப்பதில், வரி கட்டுபவர்களுக்கும் அரசுக்கும் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்கும் வகையில் அரையாண்டுக்கு ஒரு முறை வரி கட்டும் நிலையை மாற்றி, இவ்வகை வாகனங்களின் மீது முதலில் புதிதாக வாங்கும் நேரத்திலேயே ஒட்டு மொத்தமாக ஒரு தொகையை வரியாக வசூலிக்க அரசு நிர்ணயித்துள்ளது. 50 சி.சி. திறன் வரை கொண்ட வாகனங்கள் மீது ரூ. 500 என்றும் 50 சி. சி. திறனிலிருந்து 300 சி.சி. திறன் வரைக் கொண்ட வாகனங்களுக்கு ரூ. 750 என்றும், 300 சி.சிக்கும் மேலான வாகனங்கள் மீது ரூ. 1,000 என்றும் ஒட்டு மொத்த வரியாக ஒரே தடவையாக வசூல் செய்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே இவ்வாகனங்களை வைத்துள்ளவர்கள் அரையாண்டு

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மார்ச் 25

வரி செலுத்தவோ அல்லது ஒட்டுமொத்த வரியைச் செலுத்தவோ அவர்கள் விருப்பப்படி அனுமதி (option) அளிக்கப்படுவார்கள். ஆண்டுதோறும் இவ்வகை வாகனங்கள் மீது வசூலிக்கப்படும் வரியானது மேற்கூறிய திறன் அளவுக்கு முறையே ரூ. 80, ரூ. 90 மற்றும் ரூ. 100 என்று நிர்ணயிக்கப்படும்.

**107.** மோட்டார் வாகனங்களைப் பொறுத்தவரை கார்கள் மீதான ஆண்டு வரிகள், சுமை ஏற்றப்படாத எடையின் அடிப்படையில், தற்போது ரூ. 258-லிருந்து ரூ. 405 வரை இருக்கின்றது. இவை ரூ. 300-லிருந்து ரூ. 500 வரை உயர்த்தப்படும். மற்ற மாநிலங்களில் உள்ளது போன்று கம்பெனிக் கார்கள் மீது இரண்டு மடங்காகவும், இறக்குமதி செய்யப்பட்ட கார்களின் மீது மூன்று மடங்காகவும் வரி விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**108.** பயணிகளின் இருக்கைகள் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற 'ஆம்னி பஸ்' என்று அழைக்கப்படும் தனியார் சொகுசு பேருந்துகள் மீது வரி, இருக்கை ஒன்றுக்கு ரூ. 500 என்று உயர்த்தி அமைக்கப்படும். அகில இந்திய உரிமம் வைத்திருக்கும் இத்தகைய பேருந்துகளுக்கும் இந்த விகிதத்தில் வரி விதிக்கப்படும். பயணியர்களை ஏற்றிச் செல்லும் வேன்களில் அனுமதிக்கப்படும் இருக்கை அளவினை அதிகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வந்தவண்ணம் இருக்கின்றது. வேன் ஒன்றுக்கு தற்போதுள்ள இருக்கை அளவை 12 ஆக உயர்த்தி இந்த வரி விகிதம் இருக்கை ஒன்றுக்கு ரூ. 150 என்று விதிக்கப்படும்.



1989 மார்ச் 25] [டாக்டர் மு. கருணாநிதி]

**109.** உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்களை கொடுக்கும் நேரத்தில், அவர்களுடைய நிதிநிலையைப் பெருக்குவது அத்தியாவசியம். தமிழ்நாட்டில் பணித் தொழில்கள், வாணிகங்கள், கொள்தொழில்கள், மற்றும் வேலையமைப்புகள் மீதான வரி (Taxes on professions, trades, callings and employments) உள்ளாட்சி மன்றங்களுக்கான பல்வேறு சட்டங்களின் கீழ் வசூலிக்கப்படுகின்றது. இம்மன்றங்களால் வசூலிக்கப்படும் தொகைகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. மகாராட்டிரம், குஜராத், மேற்கு வங்காளம், கர்நாடகா போன்ற மாநிலங்களில் மாநில அரசே இவ்வரி விதிப்பை ஏற்று நடத்துகின்றது. எனவே இந்த வரியினால் கிடைக்கும் வருவாய் கணிசமாகப் பெருகியுள்ளது. அவ்வாறே இந்த வரியை அரசே விதித்து வசூலித்து, வசூல் செலவை மட்டும் வைத்துக்கொண்டு, மீதம் உள்ள தொகையை அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்குவது பற்றி பரிசீலிப்போம். இந்த வரியை நல்ல முறையில் சீர்படுத்தி, வசூலித்து, உள்ளாட்சி மன்றங்களுக்கு கொடுக்கப்பட்டு அவர்கள் பெருமளவில் தேவைப்படும் மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்ற வழிவகைகள் செய்வதேயன்றி, வரி விகிதங்களை தற்போது உயர்த்தும் நோக்கம் இல்லை.

**110.** நடப்பாண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ரூ. 175.40 கோடி இறுதிப் பற்றாக்குறையாக இருக்குமென்று ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தேன். இந்த மதிப்பீடுகள் நிர்ணயிக்கப்பட்ட பின்னர் மத்திய அரசு ரூ. 21.49 கோடி அளவிற்கு வெளிச் சந்தையில் கடன் எழுப்ப நமது அரசுக்கு அனுமதி அளித்துள்ளனர். இதன் மூலம் நடப்பாண்டில் இறுதிப் பற்றாக்குறை

53/4-76-

ரூ. 153.91 கோடிக்குக் குறையும். இதனை முழுமையாகச் சரிக்கட்ட மத்திய அரசைக் கோரியுள்ளோம். இந்தப் பற்றாக்குறை, குடியரசுத் தலைவர் ஆட்சியில் நடந்த நிர்வாகத்தின் பொறுப்பே ஆகும் என்ற அடிப்படையில், மத்திய அரசு நமது கோரிக்கையை ஏற்று வருமாண்டிலாவது அதனை ஈடுசெய்ய உதவ வேண்டுமென்று வலியுறுத்துவோம்.

வருமாண்டு, அதாவது 1989-90, பொறுத்த வரையில், வரவு-செலவுத் திட்டத்தில் அடங்கியிருக்கும் வரவுகள்-செலவுகள் இவற்றினடிப்படையில் ரூ. 149.67 கோடி துண்டு விழும். இதனை சரிக்கட்டுவது நமது பொறுப்பாகும். நாம் இப்போது கொண்டுவரும் வரி மாற்றங்களினால் நிகரமாக ரூ. 50 கோடி வருமானம் எதிர்பார்க்கிறோம். மேலும், அண்மையில் புதுதில்லியில் திட்டக் குழுவுடன் நடைபெற்ற கலந்துரையில் வருமாண்டில் தமிழ்நாட்டிற்கு கூடுதலாக ரூ. 34.9 கோடி கொடுக்கப்படுமென்று உறுதி அளித்துள்ளனர். இந்தத் தொகை கடன்கள் மூலமாகவும், கூடுதல் மத்திய திட்ட உதவியின் மூலமாகவும் கிடைக்கப்பெறும். இந்தத் தொகையும், வரிகள் மூலம் நாம் எழுப்ப இருக்கும் ரூ. 50 கோடியும் சேர்ந்து, வருமாண்டின் பற்றாக்குறையை ரூ. 64.77 கோடி அளவிற்கு குறைக்கும். இந்த நிகர பற்றாக்குறையை சிக்கன நடவடிக்கைகள் மூலமும், வரிகளை செம்மையாக வசூலிப்பதாலும், மத்திய அரசால் கொண்டுவரப்படவிருக்கும், சரக்குகள் அனுப்புவதன் மீதான வரியின் (Consignment Tax) மூலமாகவும், சரிக்கட்ட இயலுமென்று நம்பலாம்.

**111.** இத்தருவாயில் அரசுச் செலவுகளில் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டிய அவசியத்தையும் சாத்தியத்தையும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். வாகனங்கள் பெட்ரோல், பயணச் செலவு, தொலைபேசிச்





செலவு, அரசு விளம்பரச் செலவு இத்தகைய பல செலவுகளில் கண்டிப்பாக இருப்போம். மேலும் திட்டம், திட்டத்தைச் சாராத எல்லாப் பணிகளிலும் விரயம் ஏற்படாமல் தடுக்க, நடவடிக்கைகள் எடுக்கப்படும். புதுத் திட்டங்களுக்காகவும், நடந்துவரும் திட்டங்களை விரைவு படுத்தவும், புதிய வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தும் போது, எந்தெந்த அரசு இலாக்காக்களில் தேவைக்கு அதிகமான ஊழியர்கள் இருக்கிறார்களோ அவ்வாறான உபரி ஊழியர்களைப் பயன்படுத்த, திட்டமிட்டுச் செயல்படுத்துவதற்காக அரசில் ஒரு அமைப்பை ஏற்படுத்த உத்தேசித்துள்ளோம். (Central Manpower Cell).

**112.** கடந்த சில ஆண்டுகளில் அரசின்கீழ் பல புதிய வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளில் தேவையற்ற 10 வாரியங்களும் அமைப்புகளும் மூடப்படும் என்று அண்மையில் அறிவித்தோம். பெரும்பாலான வாரியங்களில் அதிகாரிகளும், அதிகாரிகளல்லாதவர்களும் நியமிக்கப்பட்டதனால் ஏற்பட்ட இரட்டிப்புச் செலவைத் தவிர்த்திடும் வகையில் முடிவுகள் எடுக்கப்பட்டு சிக்கனத்தைக் கடைப்பிடித்துள்ளோம். ஏனைய வாரியங்களையும் விரிவாகப் பரிசீலித்து அவைகளிலேற்படும் இழப்புகளைத் தவிர்க்கவும் வருமானத்தைப் பெருக்கவும் தக்க நடவடிக்கைகளை வரும் மாதங்களில் எடுப்போம். இவ்வாறு பல முனைகளில் சிக்கன முறைகள் கண்டிப்புடன் கடைபிடிப்போமென்று அவைக்கு உறுதி அளிக்கிறேன்.

**113.** ''தடைக்கற்கள் உண்டெனினும்
தடந்தோள் உண்டென சிரிப்போம்''

எனும் புரட்சிக் கவிஞரின் கவிதை வரிக்கேற்ப, நிதி

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மார்ச் 25

நெருக்கடி எனும் தடை கடந்து தமிழ் நிலம் வாழ் மக்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கான திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றும் தீராத ஆசையுடன் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. பற்றாக் குறை எனும் கூர் அம்புகள் துளைத்திடும் பொழுதும் கடமையினைத் தயக்கமின்றி நிறைவேற்ற சூளுரை மேற்கொண்டுள்ளது இந்த அரசு.

'' இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர்''

செல்வம் சுருங்கிய காலத்திலும் கடமை உணர்ச்சி உடையவர்கள் நற்செயல்களை நிறைவேற்றத் தயங்க மாட்டார் என்கிறார் திருவள்ளுவர். அவர் வாக்கினை நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டு, தமிழ் மக்களுக்கு என்றும் செய்வோம் தொண்டு என்ற நிலைகுலையா உறுதியோடு அண்ணா வழியில் அயரா துழைக்க அர்ப்பணித்துக் கொண்டுள்ள எங்களுக்கு, தமிழ் மக்களின் பேராதரவு தொடர்ந்து கிடைத்திட வேண்டுமெனக் கோருவதுடன், இந்த அறிக்கை யினை தயாரிக்க என்னுடன் ஒத்துழைத்து உறுதுணை யாக இருந்த நிதித் துறை செயலாளர் திரு. என். நாராயணன் அவர்களுக்கும் மற்றும் அரசு அதிகாரிகளுக்கும், இதய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்த 1989-90ஆம் ஆண்டிற்கான நிதிநிலை திட்ட மதிப்பீடுகளை அவையினர் ஏற்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.





## 3. முன்பண மானியக் கோரிக்கைகள், 1989–90—அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90ஆம் ஆண்டு செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கை களை பேரவைமுன் வைக்கிறேன்.

### 1989–90ஆம் ஆண்டு உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்.

| கோரிக்கை. | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| **A. வருவாய்க் கணக்கில் செலவு.** | | |
| 1—நிலவரித் துறை | .. | 5,65,12 |
| 2—மாநில ஆயத் தீர்வைத் துறை | .. | 1,08,81 |
| 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள் —நிருவாகம் | .. | 1,32,35 |
| 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் | | 5,99,45 |
| 5—முத்திரைத் தாள்கள்—நிருவாகம். | | 42,07 |
| 6—பத்திரப் பதிவு | .. | 2,63,19 |
| 7—மாநிலச் சட்ட மன்றம் | .. | 50,39 |
| 8—தேர்தல்கள் | .. | 2,07,61 |
| 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | .. | 12,46,26 |
| 10—பால் வழங்கு திட்டங்கள் | .. | 87,16 |
| 11—மாவட்ட நிருவாகம் | .. | 15,65,92 |
| 12—தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிருவாகம் | .. | 1,32,92 |
| 13—நீதி நிருவாகம் | ... | 5,59,59 |

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மார்ச் 25

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| கோரிக்கை. | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| 14—சிறைச் சாலைகள் .. | 3,65,65 |
| 15—காவல் துறை .. | 41,23,49 |
| 16—தீயணைப்புப் பணிகள் .. | 2,75,65 |
| 17—கல்வி | 2,24,93,15 |
| 18—மருத்துவம் .. | 42,52,54 |
| 19—பொதுச் சுகாதாரம் .. | 24,23,57 |
| 20—வேளாண்மை .. | 41,39,86 |
| 21—மீனளம் .. | 2,33,73 |
| 22—கால்நடை வளர்ப்பு .. | 9,94,30 |
| 23—கூட்டுறவு .. | 19,56,01 |
| 24—தொழில்கள் .. | 1,31,06 |
| 25—சின்கோனா .. | 1,11,83 |
| 26—கைத்தறியும் துணித் தொழிலும். | 13,42,94 |
| 27—கதர்த் தொழில் .. | 1,67,55 |
| 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும் | 60,67,62 |
| 29—தொழிலாளர் நலனும் தொழிற் சாலைகளும் | 7,50,96 |
| 30—சமூக நலன் .. | 27,04,98 |
| 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் .. | 19,02,91 |
| 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் .. | 4,82,70 |
| 33—வீட்டு வசதி .. | 1,65,70 |
| 34—நகர்ப்புற வளர்ச்சி .. | 17,11,75 |
| 35—நுகர்பொருள் வழங்கல் .. | 54,46,60 |
| 36—பாசனம் .. | 23,97,54 |
| 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள். | 80,81 |



1989 மார்ச் 25] [டாக்டர் மு. கருணாநிதி]

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| கோரிக்கை. | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும். | 7,54,81 |
| 39—சாலைகளும் பாலங்களும் .. | 26,23,22 |
| 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் | 1,89,43 |
| 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு .. | 31,76 |
| 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் .. | 47,06,53 |
| 43—பல்வகை .. | 1,25,85,12 |
| 44—எழுதுபொருள்-அச்சுத் துறை .. | 5,17,63 |
| 45—காட்டுவளத் துறை | 5,09,02 |
| 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 10,13,19 |
| 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் | 1,01,83 |
| 48—ஊரகத் தொழில்கள் .. | 5,82,86 |
| 49—குடிநீர் வழங்கல் | 27,15,66 |
| **மொத்தம்—A. வருவாய்க் கணக்கு** | **9,66,14,80** |

**B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.**

| | |
|---|---|
| 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 56,55 |
| 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 5,05,78 |
| 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு | 13,25,81 |
| 53—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு | 6,63,70 |
| 54—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. | 9,13,32 |

B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி.

| கோரிக்கை. | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| 55—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு .. | 98 |
| 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு .. | 5,83,82 |
| 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு .. | 35,24 |
| 58—பல்வகை மூலதனச் செலவு | 2,93,90 |
| மொத்தம்—B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | 43,79,10 |

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்

| | |
|---|---|
| 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். | 93,77,62 |
| பெரு மொத்தம் | 11,03,71,52 |

4. தீர்மானம்.

**பேரவைப் பணியினின்றும் சில உறுப்பினர்கள் தற்காலிக நீக்கம் செய்யப்பெறுதல்.**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைப் படிக்கத் தொடங்கும்போது* அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக (ஜெயலலிதா பிரிவு) மற்றும் அனைத்திந்திய

* 26-3-1992ஆம் நாளன்று பேரவைத்தலைவர் அளித்த தீர்ப்போடு (இணைப்புகள் 1 மற்றும் 2) இணைத்துப் படிக்கவேண்டும்.



அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றப் பேரவைக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள், முதலமைச்சர் அவர்களிடமிருந்து நிதி நிலை அறிக்கையைப் பிடுங்கவும், பிடுங்கியும், கிழித்தும், அவர்களது மூக்குக் கண்ணாடியை உடைத்தும், வன்முறையில் இறங்கி, அவையை நடத்த முடியாத அளவிற்கு நடந்துகொண்டபடியாலும், பேரவைத் தலைவர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தும், அதை ஏற்காமல், தொடர்ந்து அப்படிப்பட்ட செயல்களில் ஈடுபட்டதால், இந்தச் செயல்கள் அவையை நடத்துவதற்கு இடையூறு விளைவிப்பதாகவும், அவையின் கண்ணியத்தைக் குறைப்பதாகவும் அமைந்ததாலும், பேரவை எதிர்பார்க்கும் கண்ணியமான முறையின்படி அவர்கள் நடந்து கொள்ளாததாலும்,* நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை வேதனையுடன் முன்மொழிகிறேன்.

''சட்டமன்றப் பேரவை விதி 121, பிரிவு 2-ன் கீழ், கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்றும் தற்காலிகமாக 1989ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் முடிய நீக்கம் '' சஸ்பென்சன் '' செய்ய வேண்டும் :

திருவாளர்கள்—

ஆர். அண்ணாநம்பி
கே. அர்ச்சுனன்
ஆ. அறிவழகன்
வி. இராசு
கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்
கே. ஆர். இராசேந்திரன்
எஸ். டி. உகம்சந்த்
சி. கிருஷ்ணன்
வி. பி. சந்திரசேகர்

* 26-3-1992ஆம் நாளன்று பேரவைத்தலைவர் அளித்த தீர்ப்போடு (இணைப்புகள் 1 மற்றும் 2) இணைத்துப் படிக்கவேண்டும்.

பேரவைப் பணியினின்றும் சில உறுப்பினர்கள் தற்காலிக நீக்கம் செய்யப்பெறுதல்

1989 மார்ச் 25] [பேராசிரியர் க. அன்பழகன்]

கே. சின்னசாமி
வே. கு. சின்னசாமி
டாக்டர் ச. சுந்தரராஜ்
வே. நா. சுப்பிரமணியன்
கு. அ. செங்கோட்டையன்
எம். தங்கவேல்
எஸ். திருநாவுக்கரசு
துரை ராமசாமி
கே. பழனிசாமி
எ. பாப்பா சுந்தரம்
வே. பெரியசாமி
செ. பெருமாள்
கொ. மாதப்பன்
பி. மாரப்பன்
ஆர். மூக்கன்
செல்வி ஜெ. ஜெயலலிதா
கே. ஏ. மணி
எஸ். ஆர். இராதா மற்றும்
பேராசிரியர் க. பொன்னுசாமி "

(குறுக்கீடுகள்)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் 1989-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ஆம் நாள் திங்கட் கிழமை காலை 9-00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-54 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

**5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் :**

ஏதுவுமில்லை.

# இணைப்புகள்

(1 மற்றும் 2)

## இணைப்பு 1.

(25-3-1992—பிற்பகல் 1-20—1-25)

### 25-3-1989-ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்புகளிலுள்ள செய்திகள் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. டி.எம். ரங்கராஜன்.

**திரு. டி. எம். ரங்கராஜன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே, இந்த அவையிலே பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், போன பேரவையில் உறுப்பினராக இருந்தவர்கள் எல்லாம் 25-3-1989 அன்று நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். அந்த உறுப்பினர்கள் இங்கே தெரிவித்த கருத்துக் களைப் பற்றி நான் தெரிந்துகொள்வதற்காக அசெம்பிளி நூலகத்திற்குச் சென்று அன்றைய அசெம்பிளி புரொசீடிங்சை நான் பார்க்க நேரிட்டது. அன்றைக்கு அந்த புரொசீடிங்சிலே பல நிகழ்ச்சிகள் இங்கே நம்முடைய உறுப்பினர்கள் கூறுவதற்கு மாறாக அந்த 'அபிஷியல் ரிப்போர்ட்டில்' ரிப்போர்ட் செய்யப் பட்டு இருப்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அவ்வாறு தவறாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற அந்த நிகழ்ச்சிகளை எல்லாம் அந்தக் குறிப்பிலிருந்து எடுப்பதற்குத் தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உறுப்பினர் திரு. ரங்கராஜன் அவர்கள் தெரிவித்ததைப்போல் நானும் பேரவையின் அன்றைய அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டிருக்கிற தொகுப்பினையும் அன்றைய தினம் பேரவைத் தலைவருக்கு வழங்கப்பட்ட நிகழ்ச்சிக் குறிப்புகள் பற்றிய பேரவையின் ரெக்கார்டுகளையும் சரி பார்த்தேன். பார்க்கிறபோது இந்தப் பேரவை யின் மரபுக்கு மீறி — பேரவையில் வழக்கமாக நடக்கிற பேச்சுகள் ரெக்கார்டு ஆகும். ஆனால்

செய்கைகள் என்று ரெக்கார்டு ஆகி வருவது,
வெளிநடப்பு என்றால் இந்த உறுப்பினர்கள்
வெளிநடப்புச் செய்தார்கள் என்பது ரெக்கார்டு ஆகும்.
சிரிப்பு, கரவொலி இவைதாம் ரெக்கார்டு ஆகும்.
பாராளுமன்றத்திலே கூட அதுதான் நடைமுறை
யில் இன்றைக்கும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது—
அதற்கு மாறுபாடாக பல்வேறு நிகழ்ச்சிகளை
அடைப்புக் குறிக்குள்ளே போட்டு, இப்படி இப்படி
யெல்லாம் அவைக்குள்ளே நடந்தது என்று அச்சாகி
யிருக்கிறது. ஒருவேளை அதுவே பேரவைத்
தலைவருக்குக் கொடுக்கப்பட்ட குறிப்புகளில்
கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் பார்த்தேன்.
அதிலேயும் சில பல இடைச் செருகல்கள் இருப்பது
கண்கூடாகத் தெரிகிறது. எனவே இவற்றை எல்லாம்
நீக்குவதா அல்லது வேறுவகையில் திருத்தம் செய்ய
முடியுமா என்பதை எல்லாம் நம்முடைய பேரவை
விதிகளையும், நாடாளுமன்ற மரபுகள் நடைமுறைகள்
ஆகியவற்றையும் முழுமையாக ஆராய்ந்து என்னுடைய
தீர்ப்பை நாளை வழங்குகிறேன் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.



## இணைப்பு 2

(26-3-1992—பிற்பகல் 1-00—1-45)

### 25-3-1989-ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்புகளிலுள்ள செய்திகள் குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை
உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. 25-3-1992
அன்று, அதாவது நேற்று, பேரவையில் மாண்புமிகு
உறுப்பினர் திரு. டி.எம். ரங்கராஜன் அவர்கள்
பேசும்போது, நாம் 25-3-1989-ஆம் தேதிய
நடவடிக்கைக் குறிப்புகளை (Proceedings of
the House) நூலகத்தில் பார்த்த பிறகு,
25-3-1992 அன்று மாண்புமிகு எதிர்க் கட்சித்
தலைவர் அவர்களும், மாண்புமிகு முன்னவர் அவர்
களும், ஏனைய பேரவை உறுப்பினர்கள் சிலரும்
கூறியதற்கு மாறாக நிகழ்ச்சிகள் நடந்ததாகக்
குறிப்பிடப்பட்டுள்ளது என்று பேரவைத் தலைவரின்
கவனத்திற்குக் கொண்டு வந்து, மேலும் அவ்வாறு
தவறாகத் தயாரிக்கப்பட்ட அந்த நிகழ்ச்சிகளை
எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து எடுப்பதற்கு
பேரவைத் தலைவர் ஆவன செய்ய வேண்டுமென்று
கேட்டுக் கொண்டார்கள்.

நான் 25-3-1989-ஆம் தேதிய நடவடிக்கைக்
குறிப்புகளை ஒப்பிட்டுப் பார்த்து, பேரவை விதி
களையும் பரிசீலித்து, இது குறித்து எனது தீர்ப்பினை
வழங்குவதாக அறிவித்தேன்.

1989-90-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்
திட்டம் பேரவைக்கு 25-3-1989 அன்று அளிக்கப்
பட்டபோது, அந்த நடவடிக்கைக் குறிப்பில் கீழ்க்
கண்டவாறு நிகழ்ச்சிகள் நடைபெற்றதாகக் குறிப்பிடப்
பட்டுள்ளது. அன்றையதினம் எதிர்க் கட்சித் தலைவ
ராக இருந்த இன்றைய மாண்புமிகு முதலமைச்சர்
புரட்சித் தலைவி அவர்களும், அன்றைய காங்கிரஸ்

சட்டமன்றக் கட்சித் துணைத் தலைவரான திரு. குமரி அனந்தன் அவர்களும் எழுப்பிய பிரச்சினைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. தொடர்ந்து அடைப்புக் குறிகளுக்குள் 3 இடங்களில் அன்றைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பட்ஜெட் உரையைப் பறிக்க முயற்சித்தார்கள் என்றும், பறித்து கிழித்து எறிந்தனர் என்றும், பேரவையில் வன்முறையில் ஈடுபட்டனர் என்றும், அன்றைய அவையில் நடைபெற்ற செயல்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை எல்லாம் அடைப்புக்குறிகளுக்குள் போடப்பட்டுள்ளன. இத்தகைய அடைப்புக் குறி விளக்கங்களுக்கு மத்தியில் அன்றைய முதலமைச்சர் கூறியதாக, " மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அடியுங்கள், அடியுங்கள், முதலமைச்சரை அடிக்க வருகிறீர்கள் அல்லவா, அடியுங்கள் " என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 1.05

இதுகுறித்து நான் சில விளக்கங்களை அவைக்கு அளிக்க விரும்புகிறேன். " HALSBURY'S LAWS OF ENGLAND " என்ற புத்தகத்தில், அவை நடவடிக்கைக் குறிப்புகள்— "Proceedings of the House" பற்றிக் கீழ்க் கண்டவாறு பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது :—

" ' Proceedings in Parliament ' has been used to include matters connected with, or ancillary to, the formal transaction of business. A select Committee of the Commons, citing and approving a Canadian dictum, stated in its report that it would be unreasonable to conclude that no act is within the scope of a member's duties in the course of Parliamentary business unless it is done in the House or a Committee of it and while the House or Committee is sitting " என்றும், மேலும்

" An exact and complete definition of 'Proceedings in Parliament' has never been given by Courts of law or by either House. In its narrow sense the expression is used in both Houses to denote the formal transaction of business in the House or in Committees. It covers both the asking of a question and the giving of written notice of such question, and includes everything said or done by a member in exercise of his functions as a member in a Committee of either House, as well as everything said or done in either House in the transaction of Parliamentary business " என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



மேலும் கௌல் & ஷக்தர் எழுதியுள்ள "பாராளுமன்ற மரபுகள் மற்றும் நடைமுறைகள்" என்னும் நூலில்

" A criminal act committed by a member within the House cannot be regarded as a part of the proceedings of the House, for purposes of protection......" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நடைமுறைகளையும் விளக்கங்களையும் ஒட்டித்தான் பாராளுமன்ற நடவடிக்கைகள் அல்லது சட்டமன்ற நடவடிக்கைகளைக் குறிப்பு எடுப்பவர்கள், அவையில் பேசப்படுபவைகளைத் தவிர ஏனைய செய்கைகளை நடவடிக்கைக் குறிப்புகளாகக் குறிக்க மாட்டார்கள். இந்த அடிப்படை விதிகளின்படி, அன்றைய, அதாவது 25—3—1989-ஆம் தேதிய நடவடிக்கைக் குறிப்புகள் உள்ளனவா என்பதை ஒப்புநோக்கி சரிபார்த்தேன். மேற்கூறிய பொருள் விளக்கத்திற்கு மாறாக நடவடிக்கைக் குறிப்புகளின் முன்பகுதியில் பேரவையின் அன்றைய அதிகாரபூர்வமாக வெளியிடப்படுகின்ற குறிப்பினையும் அன்றையதினம் பேரவைத் தலைவருக்கு வழங்கப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகள் பற்றிய பேரவை ஆவணங்களையும், அதாவது இந்த ஆவணம், சரிபார்க்கும்போது அவையில் உறுப்பினர்கள் பேசியவை மட்டுமே நடவடிக்கைக் குறிப்புகளாகப் பதிவாவதற்குப் பதிலாக, செய்கைகள் பல நடந்ததாகப் பதிவாகியிருப்பது தெரிய வந்தது.

சாதாரணமாக இந்த அவையின் நடவடிக்கைக் குறிப்புகள் (Proceedings of the House) நாள் வாரியாக வெளியிடப்பட்டிருப்பதைப் பலரும் பார்த்திருப்பீர்கள். உறுப்பினர்களது பேச்சுக்கள், கேள்விகள், பதில்கள், விளக்கங்கள், குறுக்கீடுகள்,

அதற்கான பதில் குறுக்கீடுகள் இவைதான் அவை நடவடிக்கைகள் (Proceedings of the House) என இடம் பெறும். இவைதவிர, உறுப்பினர்களது செய்கைகள் என்ற வகையில், கூச்சல், குழப்பம், வெளிநடப்பு என்ற சொற்றொடர்கள்தான் இடம்பெறும். எக்காலத்திலும் உறுப்பினர்களது செய்கைகள்பற்றி, அவையில் இன்னின்ன நடந்தன எனக் குறிப்பிடுவது நடைமுறையில் இருக்கவில்லை. அதுவும் வெளிநடப்பு என்பதுகூட அவை நடவடிக்கையாகாது. எனவே, அதனைக்கூட வெளிநடப்பு என பத்திரிகைகள் வெளியிடக்கூடாது என்ற தீர்ப்பை இந்த அவையில் அதே முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்களே முதல்வராக இருந்த 6—3—1972 அன்று, வெளிநடப்பு என்பதுகூட 'அவை நடவடிக்கை அன்று' என வரையறுக்கப்பட்டுள்ளது. அப்பேர்ப்பட்ட அவையில், அவை உறுப்பினர்களின் செய்கைகள் என பலவற்றை இணைத்திருப்பது, அதுவும் அடைப்புக் குறிகளுக்குள் வெளியிட்டிருப்பது ஏன் என்ற ஐயம் எவருக்கும் இயல்பாகவே ஏற்படும்.

அதுவும் புரட்சித் தலைவி அவர்களது அணியினர் மட்டுமே பெரும் அமளியில் ஈடுபட்டதாகவும், அன்றைய முதல்வர் '' என்னை அடியுங்கள்... அடியுங்கள் '' என்று கூறியது மட்டுமே அவையில் பேசப்பட்டதாக அவைக்குறிப்பு வெளியிட்டிருப்பது, திட்டமிட்டு சில உண்மைகளை மறைக்கச் செய்யப்பட்ட செயலாகவே நான் கருதுகிறேன்.

மேலும் நேற்றையதினம் இந்த அவையில் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் அன்றைய அவையில் நடந்த நிகழ்ச்சிகளை இங்கே விவரித்தார். அவ்வளவு ரகளை நடந்தபோது பேரவை நடவடிக்கைக் குறிப்புகளை சுருக்கெழுத்து மூலம் எடுத்து வழங்குவோர் கொஞ்சம்கூட அடித்தல் திருத்தல் இல்லாது குறிப்பெடுத்து, பேரவைத் தலைவருக்கு ஆவணமாக அனுப்பியுள்ளனர் என்பதும் பெரும் வியப்புக்குள்ளதாக உள்ளது.



பேரவை உறுப்பினர்களே பார்க்கலாம். இதுதான் அந்த நேரத்திலே நடந்த நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கிற பக்கம். இந்தப் பக்கமும் அடுத்த பக்கமும் எந்த அடித்தலும இல்லாமல் — அவ்வளவு ரகளை நடந்த நேரத்தில அவைக்குறிப்பில் சுருக்கெழுத்தாளர்கள் எடுத்து அனுப்பியதாகக் கூறப்பட்டுள்ள பகுதியில் எந்த அடித்தலும் இல்லாமல் — இந்த அடைப்புக்குறிகளுக்குள் இருக்கிற செய்திகளும் சேர்த்து பேரவைத் தலைவருக்கு சுருக்கெழுத்தாளர்கள் கொடுத்த குறிப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1.10

அதே பேரவைத் தலைவருக்கு வேறேயே சில நாட்களில் சிறுசிறு குறுக்கீடுகள் நடந்த நாட்களின் நடவடிக்கைக் குறிப்புகள் அனுப்பியதையும், அதே நாட்களில்கூட மீண்டும் அவை கூடியவுடன் அனுப்பிய குறிப்புகளையும் பார்த்தபோது ஏராளமான திருத்தங்கள் அல்லது நீக்கம் செய்யும் உத்தரவுகள் மேற்படி பேரவைத் தலைவராலேயே இடப்பட்டுள்ளதைக் கோப்புகள் மூலம் பார்க்க முடிந்தது. அன்றைய தினத்திலேகூட அது முடிந்து கொஞ்ச நேரத்திற்குப் பின்னர் 11.30 மணிக்குத் தொடங்கியதாகக் கூறப்படுகிற அந்த நிகழ்ச்சி நிரலில் இந்த சிவப்புப்பகுதியில் இருக்கிற பகுதிகள் எல்லாம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்ட பகுதிகள். அதற்குப் பின்னர் நடந்த நிகழ்ச்சியில், இவ்வளவு பகுதிகள் சுருக்கெழுத்தாளரால் எடுத்து அனுப்பப்பட்டு அவைகள் எல்லாம் பேரவைத் தலைவராலேயே நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிற பகுதிகள் இவ்வளவு இருக்கின்றன. அப்படி இருந்தும்கூட அந்த மிகப் பெரும் அமளி நடந்தபோது நடைபெற்ற செய்திகள் பற்றிப் பேரவைத் தலைவருக்கு அனுப்பிய குறிப்புகளில் இரண்டு பக்கங்களில் எந்த அடித்தலும் திருத்தலும் இல்லாமல் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே எவ்வித அடித்தல் திருத்தல் இல்லாது இந்தப் பேரவைக்கே களங்கம் ஏற்படுத்தியுள்ள நிகழ்ச்சி நடைபெற்ற அவை நடவடிக்கைக் குறிப்புகள்

(Proceedings of the House) என — இதோ உள்ளதே இது திட்டமிட்டு தீய நோக்கோடு, தாங்கள் செய்த ஜனநாயகப் படுகொலையை மறைக்க சுருக்கெழுத்தாளர் மூலம் எடுக்காது (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அவர்களாகவே இடைச்செருகலாக சேர்த்த பகுதி என்பதை உறுதியாகவும், தெளிவாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு இடைச்செருகலாக அவர்கள் சேர்த்த பக்கங்களில்தான் நாடாளுமன்ற மரபுகளுக்கும், நடைமுறைகளுக்கும், மாறாக அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வினர் செய்கை என சிலவற்றை அவை நடவடிக்கைக் குறிப்புகள் என ஆக்கியுள்ளனர். நான் ஏற்கெனவே தெரிவித்த அந்த நாடாளுமன்ற விதிமுறைகளின்படி எது எதைச் சேர்க்கக்கூடாதோ அதையெல்லாம் சேர்த்திருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் இடைச் செருகல்களாக சேர்த்த நடவடிக்கைக் குறிப்புகளுக்கு, (Proceedings of the House) அன்றைய பேரவைத் தலைவர் ஒப்புதல் அளித்து அவை நடவடிக்கைக் குறிப்பேடாக வெளிவந்திருக்கிறது. எனவே அவை நடவடிக்கைக் குறிப்புகள் என அன்றைய தினம் 25-3-1989 அன்று நடந்ததாக வெளியிடப்பட்டுள்ள இக்குறிப்புகள் அனைத்தும் நாடாளுமன்ற மரபுகள் மற்றும் நடைமுறைகளுக்கு முற்றிலும் விரோதமானவை என்றும் தீய நோக்கத்தோடும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) திட்டமிட்டு சிலவற்றை மறைப்பதற்காகவும் செய்யப்பட்ட இடைச்செருகல் வேலை என்றும், மோசடி என்றும் எனது தீர்ப்பினை வழங்குகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மேலும் உண்மையிலேயே என்ன நடந்திருக்கும் என்பதை உறுதிப்படுத்தும் சில ஆதாரங்களும், இடைச்செருகல் செய்யப்பட்ட இதே ஆவணத்தில் இருந்தே என்னால் தெரிந்துகொள்ள முடிந்தது. எவ்வித அடித்தல், திருத்தல் இல்லாது தங்கள் நோக்கத்திற்கேற்ப சில பக்கங்களைச் சேர்த்துக் கொண்டவர்கள் அன்றைய தினம் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அவையை விட்டு வெளியேறிய பின்னர் மீண்டும் பேரவை, அன்றைய பேரவை 11.30 மணிக்குக் கூடியபோது காங்கிரஸ் கட்சி உறுப்பினர்



கள் மட்டும் அவைக்கு வந்து நியாயம் கேட்டுள்ளனர். என்னென்ன பொருள்களையெல்லாம் தங்கள் கட்சியின் தலைவர் மீதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் மீதும் எறிந்தனர் என்பதைக் குறிப்பிட்டு நீதி கேட்டுள்ளனர். அந்தப் பகுதிகள் எல்லாம் நான் இப்போது சொன்னேனே, அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்ட பகுதி, அந்தப் பகுதி அது. காங்கிரஸ் கட்சியினர் மட்டும் இங்கே வந்து நாங்கள் நீதி கேட்கிறோம் என்று கேட்கிற பகுதிகள். அந்தப் பகுதிகள் எல்லாம் இருக்கின்றன. அப்போது நடைபெற்ற நடவடிக்கைகள் அப்படியே சுருக்கெழுத்தாளர்களால் எடுக்கப்பட்டு பேரவைத் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் பேரவைத் தலைவர் எது எதை நீக்க வேண்டும் என உத்திரவிட்டுள்ளாரோ அவை எல்லாம் அடித்தல் திருத்தலோடு உள்ளது. ஏற்கெனவே உங்களுக்குக் காட்டினேன். பெரும் ரகளை நடந்தபோது எந்த ஒரு அடித்தல், திருத்தல் கூட இல்லை. அதைவிட மிகச் சொற்ப அளவில் விவாதம் நடைபெற்றபோது எண்ணற்ற அடித்தல், திருத்தல். வேடிக்கையாக இல்லையா! அவ்வாறு பேரவைத் தலைவருக்கு திருத்தங்கள் செய்து ஒப்புதல் அளிக்க அனுப்பியுள்ள இக்கோப்பிலிருந்துதான் அன்றைய தினம் இப்பேரவையில் என்ன நடந்திருக்கும் என்பதற்கான ஆதாரம் கிடைத்துள்ளது. வேறு யாருடைய பேச்சிலே இருந்தும் அந்த ஆதாரம் கிடைக்கவில்லை. அன்றைய தினம் அவர்கள் தயாரித்து வைத்து இருந்த மாண்புமிகு வானளாவிய அதிகாரம் படைத்த உறுப்பினர் ஒருவர் இருந்தாரே! திரு. பி. எச். பாண்டியன் என்று (மேசையைத் தட்டும் பலத்த ஒலி), அவருடைய பேச்சுக் குறிப்புக்களைப் படித்தாலே போதும்; அன்றைய அவையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மீது எத்தகைய தாக்குதல் நடந்து இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளலாம். அந்த அளவுக்கு, அன்றைய பேரவைத் தலைவரே அவைக் குறிப்பிலிருந்து நீக்கும் அளவுக்கு மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தியதோடு, நடந்த வன்முறைத் தாக்குதலை நியாயப் படுத்தியும் பேசி உள்ளார். அவற்றில் பலவற்றை

அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டு, அவர்களுக்கு வேண்டிய சில பகுதிகளை மட்டும், எவ்விதப் பொருளும் தெரியாத அளவுக்கு இந்த நடவடிக்கைக் குறிப்பில் வெளியிட்டு இருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-15*

திரு. பி.எச். பாண்டியன் பேசி உள்ளதைப் பார்க்கும்போது, நிச்சயம் சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள், அசம்பாவிதங்கள் நடந்து இருக்கும் என்பது தெள்ளத் தெளிவாகிறது. அதோடு கூட, அன்றைய தினம் இதே அவையிலே இருந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் என்ன நடந்தது என்பதை ஒளிவு மறைவு இன்றி அப்படியே இங்கே பேரவை உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார்.

சில பத்திரிகைகள், நான் இன்றைக்கு இந்த விளக்கத்தை அளிக்க இருக்கிறேன் என்று நேற்று சொன்னதையொட்டி, பேரவைத் தலைவர் ஏதோ இன்றைய தினம் தன் தீர்ப்பை வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார், அவர் பார்வைக்கு என்று அன்றைய தினம் சில பத்திரிகைகள் வெளியிட்டு இருந்த சில செய்திகளை, 'இடைச் செருகல்கள்' என்று நான் சொன்னேனே, இதை அப்படியே வெளியிட வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டு, சில செய்திகளை இன்றைக்குப் பத்திரிகைகளில் வெளியிட்டு, 'இதெல்லாம் அன்றைக்கே வந்த செய்திகள்' என்று தெரிவித்து இருக்கிறார்கள். அந்தச் செய்தியும் அன்றைய தினம் வந்து தான் இருக்கிறது. அதே நேரத்தில் பல பத்திரிகைகளில் வேறு சில செய்திகளும், படங்களும் வந்து இருக்கின்றன என்பதை அவையின் கவனத்துக்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இதோ 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை. 26—3—1989 ஆம் தேதிய பத்திரிகை. எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், அவையிலே ஏற்பட்ட எல்லா



அவமானத்தையும் தாங்கிக் கொண்டு குற்றுயிரும் குலையுயிருமாக வெளியேறிய காட்சி இது. அதனைத் தான் நான் நேற்றே குறிப்பிட்டேன், 'இருபதாம் நூற்றாண்டின் பாஞ்சாலி சபதம் மேற்கொண்டு புரட்சித் தலைவி அவர்கள் இங்கே இருந்து வெளியேறினார்' என்ற அந்தப் படம். அதே போல் அவர் காரிலே ஏறுகிறபோது அவரைப் பாதுகாப்பாக அன்றைய சட்ட மன்ற உறுப்பினர்கள் சென்று அனுப்பி வைத்த படம் இது. அதன் பிறகு இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையே கூட 'புரட்சித் தலைவி அவர்கள் அடிபட்டார்' என்கிற தலைப்புச் செய்தியைக் கொடுத்திருக்கிற அந்தச் செய்தி வந்திருக்கிற பத்திரிகை இது. அதைப்போல அந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து பல்வேறு படங்களை தினமலர் பத்திரிகை வெளியிட்டு இருக்கிறது. அதில் வெளிவந்திருக்கிற செய்தி இது. எனவே சில செய்திகளை அன்றையதினம் சில பத்திரிகைகள் வெளியிட்டன என்று மட்டும் வெளியிடுவதாலே உண்மை மறைக்கப்பட்டு விடாது என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

இவ்வாறு எனக்குக் கிடைத்து இருக்கிற இந்த ஆவணங்களில் இருந்தே கூட, நடக்காத நிகழ்ச்சிகளை 'இடைச் செருகல்களாக' தெரிவித்து விட்டு, நடந்த ஒரு படுபாதக நிகழ்ச்சியை, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மீது நடந்த 'கொலை வெறித் தாக்குதலை' மறைத்து உள்ளனர் என்பது மிகத் தெளிவாகிறது. நான் ஏற்கெனவேகூறியபடி அத்தகைய கொலை முயற்சித் தாக்குதல்கூட 'அவை நடவடிக்கை' என இருக்க வேண்டியது இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், மீண்டும் கௌல் & ஷக்தர் ஆகியோரின் பாராளுமன்ற மரபுகள் மற்றும் நடைமுறைகள் என்ற நூலில் கூறப்பட்டுள்ள மராட்டிய மாநில நிகழ்வு ஒன்றை மேற்கோளாகக் காட்டிட விரும்புகிறேன்.

I quote from page 198, paragraph 3 of Kaul and Shakhder.

"A criminal act committed by a Member within the House cannot be regarded as a part of the Proceedings of the House.... Thus, in Maharashtra, when a Member shouted at the operator to connect his mike to the loud-speaker, threw a paper-weight in the direction of the loudspeaker operator and rushed to the Speaker and grabbed the mike in front of the Speaker.....he was subsequently convicted under different sections of the Indian Penal Code and sentenced to rigorous imprisonment for six months".

*பிற்பகல் 1-20*

ஒரு மைக் ஆப்பரேட்டரை நோக்கி பேப்பர் வெயிட்டை வீசிவிட்டு, சபாநாயகர் மைக்கைப் பிடுங்கியதற்கே ஆறுமாத காலக் கடுங்காவல் தண்டனை என்றால், புரட்சித் தலைவியைக் கொலையே செய்ய முயற்சித்த துச்சாதனர்களுக்கு எத்தனை ஆண்டுக் கடுங்காவல் தண்டனை தரலாம் என்பதைப் பேரவையின் முடிவிற்கே விட்டுவிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மராட்டிய மாநில மேற்கோள் அடிப்படையில் அன்றைக்கே ஒரு நியாயமான, ஜனநாயக ரீதியான அரசாக இருந்திருக்குமானால் உரிய கிரிமினல் நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும். இன்றைக்கும் ஒன்றும் மோசம் போய்விடவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நடந்த சம்பவம் ஓர் கொலை முயற்சியென்ற அடிப்படையில் இந்தியக் குற்றவியல் சட்டம் ஐ.பி.சி. 307 மற்றும் சி.ஆர்.பி.சி. 468-இன்படி நடந்திட்ட குற்றங்களுக்கான தண்டனை ஏழு ஆண்டு வரையிலோ அல்லது பத்து ஆண்டு வரையிலோ கடுங்காவல் தண்டனைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் ஆயுள் தண்டனைக்கும் உரிய குற்றமாகையால், இப்போதும்கூட அந்தக் கொலை முயற்சி



வழக்கை அரசு விரும்பினால் தொடரலாம் என்பதை என் தீர்ப்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த என் தீர்ப்பின் அடிப்படையை வைத்துக் கொண்டு, ஏன் புரட்சித்தலைவி அவர்கள் மீதும் இதே அடிப்படையில் ஏதேனும் வழக்குத் தொடர முடியுமே எனச் சிலர் கேட்கக் கூடும். அதற்கு நான் இப்போது என் தீர்ப்பைக் கூறிவிடுகிறேன். முடியாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், அன்றையதினம் புரட்சித்தலைவி அவர்கள் எழுப்பியது தனக்கு தனிப்பட்ட முறையில் இழைக்கப் பட்ட கொடுமைக்கு எதிரான ஓர் உரிமைப் பிரச்சினை என்ற வகையில், நான் ஏற்கனவே கோடிட்டுக் காட்டிய ஹவுஸ் ஆப் காமன்ஸ் மரபுப்படி அவரது அச்செய்கை அவை நடவடிக்கை (Proceedings of the House) என்று ஆகிறது. அவையின் அங்கீகரிக்கப் பட்ட நடவடிக்கைக்காக யார் மீதும், எச்சூழ்நிலையிலும் நடவடிக்கை எடுக்கவோ, வழக்கு தொடரவோ முடியாது.

Constitution of India, Article 194, sub-section 2, "No member of the Legislature of a State shall be liable to any proceedings in any Court in respect of anything said or any vote given by him in the Legislature or any Committee thereof" என்று குறிப்பிடுகிறது.

எனவே, புரட்சித்தலைவி அவர்கள் இங்கே எழுப்பியது அவை நடவடிக்கைக்கு உட்பட்டது (Proceedings of the House) என்ற அடிப்படையிலே எத்தகைய நடவடிக்கையும் எடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், புரட்சித்தலைவி அவர்

[1989 மார்ச் 25

களுக்கு எதிரான அன்றைய ஆளுங்கட்சியினரின் நடவடிக்கைகள், அவையின் நடவடிக்கைகள் (Proceedings of the House) என எந்த விதிமுறையின்படியும் ஏற்றுக்கொள்ளமுடியாத கிரிமினல் ஆக்ட்ஸ் எனத் தீர்ப்பளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. டி. எம். ரங்கராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய தீர்ப்பில் பாயிண்ட் ஆப் ஆர்டர் வராது.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிளாரிபிகேஷன். தாங்கள் தற்போது அளித்த தீர்ப்பின் மூலம் 25-3-1989 அன்று அவைக் குறிப்புகள் திருத்தப்பட்டிருக்கின்றன என்றும், முன்னாள் முதல்வர் அவர்கள் இந்த அவையில் 25—3—1989 அன்று He has made a misleading statement என்பதும் நிச்சயமாகத் தெரிகிறது. பேரவை விதி 281 மற்றும் 283-ஐ பார்க்கிறபோது அவை நடவடிக்கைகளை முன்னாள் பேரவைத் தலைவர் வெளியிடுகிறார் என்பதும், "Any alteration must be made with the approval of the House" என்பதும் நமக்கு நிச்சயமாகத் தெரிகிறது.

இந்த alteration-னும், மற்றும் இங்கே சொல்லிய 'misleading statement'-ம் முன்னாள் முதல்வர் அவர்களாலும், முன்னாள் பேரவைத் தலைவர் அவர்களாலும் செய்யப்பட்டிருக்கிற செயல்களாகும்.

In this connection, I would like to refer to the May's Parliamentary Procedure, 20th edition, page 148.



1989 மார்ச் 25]

"To abstract any record or other document from the custody of the Clerk or to falsify or improperly alter any records of, documents presented to, either House........ will constitute a contempt" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல்,

"Deliberately misleading the House—The House may treat the making of a deliberately misleading statement as a contempt. In 1963 the House resolved that in making a personal statement which contained words which he later admitted not to be true, a former Member had been guilty of a grave contempt" என்று Profumo's Case-ல் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையின் மூலம் நாம் பார்ப்போமானால் முன்னாள் பேரவைத் தலைவர் அவர்களும், முன்னாள் முதலமைச்சர் அவர்களும் have committed contempt of the House.

பிற்பகல் 1.25

அதுமட்டுமல்ல. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மதேவதையாம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொலு வீற்றிருக்கிற இம்மாமன்றத்தின் பெருமையைக் காப்பது தங்களுடைய தலையாய கடமையாகும். முன்னாள் பேரவைத் தலைவர் மீதும், முன்னாள் முதல்வர் மீதும் 'கன்டம்ப்ட் ஆப் தி ஹவுசுக்கு' தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள் அவ்விதம் எடுக்கும் எந்த நடவடிக்கையும் it is not barred by limitation.

அதுமட்டுமல்லாமல், பேரவை விதி 286-லே சொல்லப்பட்டு இருக்கிற 'ரெசிடியுவரி பவர்சை' தாங்கள் உபயோகப்படுத்தி, முன்னாள் முதல்வர் மீதும், முன்னாள் பேரவைத் தலைவர்மீதும்

'கன்டம்ப்ட் ஆப் தி ஹவுசுக்காக' நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேநேரத்திலே தாங்கள் குறிப்பிட்ட Article 194 of the Constitution of India-ல் சுப்ரீம் கோர்ட் ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறது. அதையும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சுப்ரீம் கோர்ட் மற்றும் அஸ்ஸாம் உயர்நீதிமன்றமும் இரண்டு தீர்ப்புகளை வழங்கியிருக்கின்றன.

"Though the normal procedure for the House to take cognisance of an alleged contempt is by regular contempt proceedings before itself, it is competent for the Speaker as the representative of the dignity of the House to take cognisance of a contempt committed in the House" என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, தாங்கள் அளித்த தீர்ப்பின் பிரகாரம், முன்னாள் பேரவைத் தலைவர் அவர்களும், முன்னாள் முதல்வர் அவர்களும், இந்தச் சட்டமன்றத்திற்கு அவமரியாதை செய்திருக்கிறார்கள் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

அதுமட்டுமல்லாமல், மற்றொரு தீர்ப்பிலே, "Once a privilege is held to exist, it is for the House to judge the occasion and its manner of exercise" என்று சொல்லப்பட்டு இருப்பதால், தாங்கள் 'கன்டம்ப்ட் ஆப் தி ஹவுசுக்கு' ஆக்ஷன் எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரங்கராஜன், நீங்கள் சொல்வதற்கே நான் வருகிறேன். நான் இதிலே, வேண்டாம் என்றுதான் விட்டு இருந்தேன். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிற தீர்ப்பின்படி, நீங்கள் ஏற்கெனவே கேட்டபடி, இந்த அவைக்குறிப்பை மாற்றம் செய்யவோ, திருத்தவோ வேண்டும் என்று நீங்கள் கேட்டதற்காக, நீங்கள் சொன்ன, இந்தக் கருத்துக்களை எல்லாம் கூட நானும் பரிசீலித்துப் பார்த்தேன்.



ஏற்கனவே ஒரு அவையிலே நடந்த நிகழ்ச்சிகளுக்காக நீங்கள் கேட்டுக் கொண்டதைப் போல, உரிமை மீறல் பிரச்சினையாகக் கொண்டு வருவதற்கு வாய்ப்பு உள்ளதா என்பதையும் ஆராய்ந்து பார்த்தேன். ஒரு அவை முடிந்து, இன்னொரு அவை, அந்தப் பிரச்சினைக்காக, உரிமைப் பிரச்சினை எடுத்துக் கொண்டது ஒரே ஒரு முறையிலேதான் நடந்திருக்கிறது. அது, 1977ஆம் ஆண்டு, மறைந்த அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை. அப்படி எடுக்கப்பட்டது தவறு என்று அடுத்து வந்த நாடாளுமன்ற நடவடிக்கைகளாலும், இது இனி எப்போதும் முன் உதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும், அன்றைக்கு ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத்தீர்ப்பு, அன்றையதினம் 1980ஆம் ஆண்டு மக்கள் தீர்ப்பாகவும் இருந்தது என்பதையும் மனதிலே கொண்டு, அதிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னால், நீங்கள் சொன்னபடி, எல்லா வகையிலேயும், இது 'கன்டம்ப்ட் ஆப் தி ஹவுஸ்' என்று நடவடிக்கை எடுக்கக்கூடிய பிரச்சினைதான் என்றாலும், இதற்கு முன் உதாரணம் ஒரே ஒரு முறை நடந்து, அதுவும், அவ்வாறு எடுத்து இருக்கக்கூடாது என்கிற அளவுக்கு, நாடாளுமன்றத்திலே கூறப்பட்டு இருக்கிற காரணத்தாலேதான், அதை, 'கன்டம்ப்ட் ஆப் தி ஹவுஸ்' என்று நான் எடுத்துக் கொள்ளாமல், அன்றையதினம் இதுதான் நடந்து இருக்கும் என்பதைக் கூறி அதற்குப் பரிகாரம் இதுதான், ''இன்றைக்குக்கூட, அவர்கள்மீது அரசாங்கம் விரும்பினால் உரிய கிரிமினல் நடவடிக்கைகள் எடுக்கலாம்'' என்று என்னுடைய தீர்ப்பை வழங்கி இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு). இதிலே வேண்டாம். என்னுடைய தீர்ப்பின்மீது வேண்டாம். நீங்கள் சொன்ன 'கன்டம்ப்ட் ஆப் தி ஹவுஸ்' என்று வருவதற்கு ஒரே ஒரு உதாரணம், அதுவும் தவறான உதாரணம் நடந்திருக்கின்ற காரணத்தால், அதை நான் எடுத்துக் கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்தேன். திரு. மா. சுந்தரதாஸ்.

**திரு. மா. சுந்தரதாஸ்** : பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, பார்லிமெண்டிலே செய்ததைப் போல, நாம் திருப்பிச் செய்யக் கூடாதா என்ன ? (குறுக்கீடு) ........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—நீங்கள் மிகத் தெளிவாக, துல்லியமாக,—தவறாக சென்ற 1989 மார்ச் 25, பிளாக் டே-யிலே நடைபெற்ற அந்த நடவடிக்கைகள் நீக்கப்படுமா என்று இந்தச் சபை தெரிந்து கொள்ள விரும்புகிறது. அது நீக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்போது நான் அளித்த தீர்ப்பும் அப்படியே இருக்கிறது. அது தவறானது என்று இருக்கிறது. அது தவிர, இந்த அவைக்குறிப்பு என்று அவர்கள் தவறாக வெளியிட்டு இருப்பது எல்லாப் பகுதிக்கும் சென்று இருக்கிறது. இது தவறு. இதிலே வெளியிடப் பட்டுள்ள கருத்துக்கள் அனைத்தும் தவறானவை, மோசடியானவை, சில இடைச்செருகலான ஆவணங் களாலே பதியப்பட்டவை என்று நான் தெளிவாகத் தீர்ப்பு வழங்கியிருக்கிறபோது, அதன் அடிப்படையிலே இது அடிபட்டதாக ஆகிவிடுகிறது. Infructuous ஆக ஆகிவிடுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. மா. சுந்தர தாஸ்.

*பிற்பகல் 1-30*

**திரு. மா. சுந்தரதாஸ்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்தில் செய்தது போல் எதையும் திருத்தி செய்யக்கூடாது என்று சொல்லி மாற்றி விடலாம். அதேபோல் நடந்த



சம்பவம் தான் இதுவும். ஏனென்றால் 77-ல் அன்று டில்லியில் நடந்ததுதான் இங்கே 89-ல் நடந்திருக்கிறது. அதேபோல் செய்தால் என்ன ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அது 80-ஆம் ஆண்டு, திரும்பச் செய்கிறபோது இதை முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்றும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி**: மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்ன தீர்ப்பை மனதார ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் ஒரு விளக்கம். இப்போது 89-ல் நடந்த நிகழ்ச்சி அப்படியே இருக்கிறபொழுது, பின்னாலே வருகிறவர்கள் அதைப் படித்தால்—பின்னால் வருகிற வர்கள் படிக்க நிரம்ப வாய்ப்பு இருக்கிறது. அப்போது அது உண்மை என்று தெரியுமே, அதற்கு என்ன பரிகாரம் என்பதனைத் தாங்கள் விளக்க வேண்டும். நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அதாவது இந்தப் புத்தகத்தைப் பல இடங்களுக்கு அனுப்பி யிருக்கிறார்கள். நம்மிடத்திலே இருக்கிற ரெக் கார்டுகளில் அன்றையதினம் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் என்று இருக்கக்கூடிய இந்தப் புத்தகத்தில் வெளியிட்டிருப்பது தவறான மோசடியான, அதற்குப் பின்னர் இடைச்செருகல்களாகச் சேர்க்கப்பட்டது என்கிற குறிப்புகளாக, இன்றைக்கு நான் வழங்கி யுள்ள தீர்ப்பின் அடிப்படையில் அப்படியே இருக்கும். அது தவிர, இந்தப் புத்தகத்திலேயிருந்து அவர்கள் வெளியிட்டிருப்பதை நீக்குகிறோம் அல்லது நடவடிக்கை எடுக்கிறோம் என்று எடுப்பதற்குரிய வாய்ப்பு இல்லாத காரணத்தால் நமக்கு இருக்கிற ஆவணங்களின்படி இவ்வாறு அவர்கள் வெளியிட் டிருக்கிற அந்த நடவடிக்கைக் குறிப்புகள் என்பது

தவறானவை, நடக்காதவை, பாராளுமன்ற நடை
முறைகளுக்கும், மரபுகளுக்கும் மாறானவை என்கிற
செய்தி தெரிவிக்கப்படும். அந்தச் செய்தி இன்றைய
தினம் நான் அளித்திருக்கிற தீர்ப்பின் அடிப்
படையில் எப்போதும் அவைக் குறிப்பில் இருக்குமென்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்பு
மிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு
சட்ட அமைச்சரவர்கள் கோரிய விளக்கம் என்ன
வென்றால், 1989-ஆம் ஆண்டின் அவைக் குறிப்
பேட்டில் ஏற்றப்பட்ட சில பகுதிகள் தவறானவை,
மோசடி என்று தாங்கள் இன்று தீர்ப்பு அளித்திருக்
கிறீர்கள். 1989-ஆம் ஆண்டு அசெம்பிளி புரோ
சீடிங்சைப் படிப்பவர்கள் எல்லோருமே 1992 அசெம்
பிளி புரோசீடிங்சையும் படிப்பார்கள் என்று நாம்
உத்தரவாதமாகச் சொல்ல முடியாது. எனவே 1989-
ஆம் ஆண்டு அசெம்பிளி புரோசீடிங்சை மட்டும்
படிப்பவர்கள் அந்த புரோசீடிங்சில் இந்தப் பகுதிகள்
இருப்பதால், அவற்றையே உண்மை என்று எண்ணு
வார்களே என்றுதான் சட்ட அமைச்சரவர்கள்
கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு
பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்பு
மிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-ஆம்
ஆண்டு இந்தச் சட்டமன்றத்திலே நடைபெற்ற
நிகழ்ச்சிகளை மாற்றியும், திருத்தியும், உண்மைக்குப்
புறம்பாகவும் பதிவு செய்து வெளியிடப்பட்டு
விட்டது. அவை அத்தனையும் மோசடியானவை
என்று இன்றைக்கு நீங்கள் ஒரு மிகச் சிறந்த தீர்ப்பை
வழங்கியிருக்கிறீர்கள். இன்றைக்கு இருக்கின்ற
பிரச்சினை 1989-ஆம் ஆண்டு பதிவாகி ஆவணங்
களாக இங்கே இருக்கின்றபோது, எதிர்காலத்திலே
இதைப் படிக்கிறபோது, இவைகளை நடந்தவை
யாகத்தானே நம்புவார்கள் என்கிற பிரச்சினை நம்
முன்னாலே நிற்கிறது. அப்படி இருப்பதை மாற்ற



முடியாது, எக்ஸ்பஞ்ச் செய்ய முடியாது, திருத்த
முடியாது என்று இருக்குமேயானால், இதை நான்
ஒரு ஆலோசனையாகச் சொல்கிறேன். இன்றைக்கு
நடைபெற்ற நடவடிக்கைகளை, அதன்மீது நடைபெற்ற
விவாதங்களை, நீங்கள் அளித்த தீர்ப்புகளை,
அதனுடைய இணைப்பாக ஒரு புதிய வெளியீடாக
அச்சடித்து, அந்த 1989-ஆம் ஆண்டு நிகழ்ச்சி
களுடன் இணைத்து வைக்கின்ற அந்த முறையை நீங்கள்
அனுமதித்து, ஆணை பிறப்பித்தால், அதைப்
படிக்கிறபோதே அதனுடைய இணைப்பாக இதுவும்
இணைந்துவிடும். அதையும் படித்துக் கொள்
வார்கள். இதைப்பற்றி நீங்கள் தீர்ப்பு அளிக்க
முடியுமா என்பதைத் தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு
எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்பு
மிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள்
அளித்தத் தீர்ப்பின் மீது பலவிதமான கருத்துக்கள்
இப்போது கூறப்பட்டிருக்கின்றன. இதிலே உண்டான
ஒரே சிரமம் என்னவென்றால் ஏற்கெனவே
இந்தப் புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டு, அன்றைய
தினம் உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கும், நூலகங்
களுக்கும் அனுப்பப்பட்டு விட்டன. ஒன்றுக்கு இரண்டு
புத்தகங்களாகச் சென்றிருக்கின்றன. எனவே முழுவது
மாக அவைக் குறிப்பிலேயிருந்து அகற்றி விட்டேன்
என்று சொல்வதன் மூலமாக மட்டுமே அவை,
அவைக் குறிப்பிலேயிருந்து அகற்றப்பட்டுவிட்டதாகவோ
அல்லது புத்தகங்களிலேயிருந்து வெளியேறி
யதாகவோ சொல்ல முடியாது. ஆனால் அவை
எல்லாம் அவை உரிமை மீறல் என்றாகும் என்று
இப்போது குறிப்பிட்டீர்கள். நாங்கள் அப்போதே
அவை உரிமை மீறல் என்று சொல்லி, நாங்கள்
உரிமை மீறல் தீர்மானம் அன்றைய தினம் கொடுத்
திருந்தோம். ஆனால் அது எடுத்துக்கொள்ளப்பட

பிற்பகல் 1.35

வில்லை. அதுவும் ரெவ்யூவிலே வருகிறது. யார் யார் எல்லாம் உரிமை மீறல் கொடுத்திருக்கிறார்கள் என்று அந்த உரிமை மீறலை எடுத்துக் கொள்வது இல்லை என்று அலுவல் நிர்ணயக் குழு முடிவு செய்து விட்டதாகவும் அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அது எவ்வளவு தூரம் உண்மை அல்லது பொய் என்பது வேறு விஷயம். ஆனால் தீர்ப்பாகச் சொன்னார்களே தவிர அலுவல் நிர்ணயக் குழு கூடி, அந்த அலுவல் நிர்ணயக் குழுவிலே அதை எடுத்துக் கொள்வது இல்லை என்பதை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. நிச்சய மாக இரண்டு எதிர்க்கட்சிகளும் ஏற்றுக் கொள்ள வில்லை. அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகமும் ஏற்றுக் கொள்ளவில்லை. காங்கிரஸ் கட்சியும் ஏற்றுக் கொள்ளவில்லை. நாங்கள் அதிலே கலந்து கொள்ளவேகூட இல்லை. ஒரே ஒருநாள்—4, 5 நாட்கள் கழித்து நடந்தபோது மட்டும் என்ன நடைபெற்றது என்பதைச் சொல்லும்போது தான் தாக்கப்பட்டதாக எந்தக் கருத்தினையும் அவர் குறிப்பிடவே இல்லை. நிச்சயமாக இன்றைய தினம் இங்கே நின்று என்னாலே சொல்ல முடியும். அந்த அலுவல் நிர்ணயக் குழுவிலே அன்றைய முதல்வர் அவர்கள் தான் தாக்கப்பட்டதாகக் கூறவில்லை. அவர் சொன்னது ஒரே ஒரு வார்த்தை. என்ன சொன்னார் என்றால் தன்னிடத்திலே இருந்த பட்ஜெட் உரையை, காகிதங்களைப் பிடுங்கினார்கள் என்று சொன்னார். யார் பிடுங்கினார்கள் என்று கேட்டோம். அதற்கு அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் கை வைத்தார் என்றோ, பிடுங்கினார் என்றோ அவர் சொல்லவில்லை. அவர் சொன்னது எல்லாம் பத்திரிகைகளில் முதலிலே வந்த செய்தி—இன்றையதினம் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருக்கிற செங்கோட்டையன் அவர்கள் பிடுங்கினார் என்றும் பத்திரிகைக்கு செய்தி கொடுத்திருந்தார்கள். நான் அதை இல்லை என்று சொன்னேன். எப்படி உங்களால் அவ்வளவு நிச்சயமாகச் சொல்ல முடிகிறது என்று என்னிடத்திலே கேட்டார். எனக்குப் பக்கத் திலே தான் அவர் அமர்ந்திருக்கிறார். எனக்கும்



அவருக்கும் இடையிலே ஆண்டி அம்பலம் ஒருவர் தான் இருக்கிறார். நானும் அவரும் ஒரே வரிசையில் இருக்கிறோம். அவர் எழுந்து செல்லவில்லை என்று சொன்னபோது 4, 5 படங்களை எடுத்து என்னிடத் திலே காட்டினார். அதிலே ஒரு படத்திலே கொஞ்சம் பின்னாடி 2 பேர்கள் அங்கே நின்று கொண்டிருக்கிறார்களே அவர்களிலே ஒருவர் தான் பிடுங்கினார், அவர் யார் என்று கேட்டார். யார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் நிச்சயமாக அது செங்கோட்டையன் அல்ல என்று சொன்னேன். எப்படி உறுதியாகச் சொல்லுகிறீர்கள் என்று கேட்ட போது அதில் முழுக்கைச் சட்டை அணிந்திருக்கிறார். செங்கோட்டையன் முழுக்கைச் சட்டை அணிந்தாலும், செங்கோட்டையன் எப்போதும் அதைச் சுருட்டிவிட்டுக் கொண்டிருப்பார். அதில் சுருட்டிவிடவில்லை. அதனால் அது செங்கோட்டையன் அல்ல என்று சொன்னேன். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது நடந்தது. இருந்தாலும்கூட இருக்கிற தவறுகளை அகற்றி ஆகவேண்டும். அன்றையதினம் அவை உரிமை மீறலாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றாலும் அகற்றியாக வேண்டும். அதற்கு இடம் இருக்கிறதா என்று கேட்டு இப்பொழுதே நீங்கள் முழுமையாகத் தீர்ப்பு அளிக்க வேண்டிய அவசியம் இருப்பதாக நான் கருதவில்லை. நாளை அல்லது அடுத்தவாரம்கூட இதற்குத் தீர்ப்பு அளிக்கலாம். அதில் ஏற்பட்டு விட்ட தவற்றை முழுமையாக நீக்குவது எப்படி? இப்படி என்னிடத்திலே இரண்டு புத்தகங்கள் இருக்கின்றன. மற்ற உறுப்பினர்களிடத் திலேயும் சென்றிருக்கும். மற்ற நூலகங்களிலேயும் இருக்கும். இதையெல்லாம் எப்படி மாற்றி அமைப்பது என்பதுபற்றி இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து பரிசீலித்து உங்களுடைய தீர்ப்பை நாளை அல்லது அடுத்த வாரத்தில் அளிக்கலாம் என்று என்னுடைய கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. ஏ. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள். ஆனால் பேயை விடக் கொடியவர்கள் சட்டப்பேரவையை அதாவது இந்த

அவையை அவமதித்த குற்றம் இழைத்துள்ளதாக பாராளுமன்ற மரபுகளைச் சுட்டிக்காட்டி இந்த இடத்திலேயே மாண்புமிகு உறுப்பினர் ரங்கராஜன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த சபையை அவமதித்து இந்த நிகழ்வுகளை நடத்தியவர்களுக்கு இனி தேர்தலிலே—முன்னாள் முதல்வரும் முன்னாள் பேரவைத் தலைவரும் நிற்க முடியாது என்ற நிலையை உருவாக்கித்தர முடியுமா என்று உங்களை நான் இந்த அவையின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 மார்ச் மாதம் 25-ஆம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சிகளிலே மாற்றங்களும் திருத்தங்களும் மோசடிகளும் மற்றவைகளும் ஏற்பட்டன என்பதற்கு இன்றைக்கு தீர்ப்பு வழங்கி இருக்கிறீர்கள். அதை அடியோடு நீக்கிவிட்டு இந்தத் தீர்ப்புமட்டும் இருந்தால் நிலைமை புரியாது. ஆகவே மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி அந்தப் பகுதியையும் போட்டு இன்றைக்கு நீங்கள் அளித்த தீர்ப்பையும் போட்டு ஒரு தனி வெளியீடாக சட்டமன்றத்தின் சிறப்பான வெளியீடாக வெளிட்டால் பிரச்சினைகள் தீர்ந்துவிடும். இந்தத் தீர்ப்பு மட்டும் இருந்தால் முதலிலே இருந்த நிலை தெரியாமல் போய்விடும். 1989-லே நடைபெற்றதையும் போட வேண்டும். அந்தக் குறிப்பையும் போட்டு இன்றைக்கு தாங்கள் அளித்த முழுத் தீர்ப்பையும் சேர்த்து ஒரு பதிப்பாக வெளியிடலாம். அதுதான் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு தரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையே தான் நான் மீண்டும் உங்களுக்கு வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். 1989ஆம் ஆண்டு அசெம்பிளி புரொசீடிங்ஸ்சின் ஒரு மறு பதிப்பை தாங்கள் வெளியிட்டு ஏற்கெனவே அவர்கள்



திருத்தி மாற்றி மோசடி செய்த பகுதிகளை அப்படியே வைத்துக் கொண்டு, அதன்பிறகு ஃபுட்நோட் என்று சொல்லி, இன்றைக்கு வழங்கிய தீர்ப்பை அதில் வெளியிட்டு அப்படி ஒரு மறு பதிப்பையே தாங்கள் வெளியே கொண்டு வர ஏற்பாடு செய்து அதை மீண்டும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி, அன்றையதினம் அந்தப் பதிப்பு யார் யாருக்கு அனுப்பி வைக்கப்பட்டதோ அத்தனை பேருக்கும் இந்த மறு பதிப்பை அனுப்பி வைக்க தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1.40

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்து, நடைபெற்ற தவற்றுக்குப் பரிகாரம் செய்கிற அளவுக்கு அமையும் என்று கருதுகிற காரணத்தால் அந்த வகையில் நான் ஏற்கெனவே சொன்னபடி ஏற்கெனவே அன்றைய நிகழ்ச்சிக் குறிப்புகள் என்று பேரவையிலே அங்கீகரிக்கப்பட்டிருக்கிற அந்த ஆவணத்தோடு இணைப்பாக இன்றைக்கு நான் அளித்திருக்கிற தீர்ப்பையும் சேர்த்துஇரண்டையும்அப்படியே மறுபதிப்பாக அச்சிட்டு அதுதான் அன்றையதினம் நடந்த நிகழ்ச்சிக் குறிப்பு என்கிற வகையில் அன்றையதினம் அவர்களாலே வெளியிடப்பட்ட, திருத்தப்பட்டு இடைச்செருகலாகப் பல செய்திகள் சேர்க்கப்பட்டு, ஜனநாயக நடைமுறைகளுக்கும், மரபுகளுக்கும் மாறாக வெளியிடப்பட்டிருக்கின்ற இந்தப் பேரவை நடவடிக்கைக்குறிப்புகள் என்பது 26—3—1992 அன்று பேரவைத் தலைவர் அளித்திருக்கின்ற தீர்ப்புகளோடு இணைத்துப் படிக்க வேண்டும் என்கிற ஃபுட்நோட்டோடு இன்றையதினம் நான் அளித்த தீர்ப்பையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், ஏனைய உறுப்பினர்களும் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களோடு இணைத்து ஒரே புத்தகமாக வெளியிடப்பட்டு, அந்தப் புத்தகம் இன்றைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், அன்றைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், அன்றையதினம் இந்த புத்தகங்கள் கொடுக்கப்பட்ட நூலகங்கள், பத்திரிகைகள் மற்றும் அனைவருக்கும் அனுப்பப்படும்

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகுபேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

**பேராசிரியர் க. பொன்னுசாமி** : (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி முன்பு இருந்த நடவடிக்கைகளையும், இன்றைக்கு தாங்கள் அது தொடர்பாக தந்திருக்கின்ற தீர்ப்புகளையும் இணைத்துப் புத்தகமாக வெளியிட்டு அனுப்புகின்ற நேரத்திலேயே முன்பு நூலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பழைய பிரதிகளை திரும்பப் பெறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய கருத்தும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்படும்.

161505

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road,
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (I Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, M
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street Madras-8

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbato
11 S. M. Jegannatham Book House, 55, Nanthi Koil Street, Tiruch palli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakas
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbator-
21 Kumaran Book Depot, Booksellers, Erode-
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore 1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |